# அறிவுத்தேடல்

# வர்த்தகப்பிரிவு

க.பொ.த (உ/த) - வர்த்தகப்பிரிவு சார்ந்த மாதாந்த சஞ்சிகை

உயர்தர வணிக கற்கையின் தேசிய ஊடகம்


06 இதழ்
2010 ஜூன்
ISSN-2012-6336


ARIVU PUBLICATIONS அறிவு பதிப்பகம்

பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலாநிதிகள், சிரேஷ்ட விரிவுரையாளர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவரும் இலங்கையின் முதல் மாதாந்த வணிக சஞ்சிகை


**இவ்விதழில்**

**சிறு வணிகம்**
- பேராசிரியர் ஜகத் பண்டாரநாயக்க

**உட்கட்டுமானங்களில் வன், மென் உட்டுகட்டுமானம்**
- பேராசிரியர் டெனி அத்தப்பத்து

**பொருளியல் பாடத்திற்கான ஒரு கண்ணோட்டம்**

**இன்னும் பல...**



வணிகக்கல்வி
கணக்கீடு
முழுமையான
வினாத்தாள்
உள்ளே...



Rs 95 /=

ACCA CIMA


BE FREE TO SPREAD YOUR WINGS
At ACCA we believe an accountancy qualification should be globally relevant and transferable. Our qualifications prepare you for what lies ahead. Whatever your ambitions. Wherever your career takes you.
ACCA
PREPARED TO BE DIFFERENT
FIND OUT MORE ABOUT THE GLOBAL BODY FOR PROFESSIONAL ACCOUNTANTS
0112301920
info@lk.accaglobal.com
www.accaglobal.com



# பரீட்சையைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு புள்ளியும் மிக முக்கியமே!

2010ம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றப்போகும் மாணவர்கள் எல்லோரினதும் மனதில் பரீட்சை பயம் வெகுவாக ஏற்பட்டிருக்கக்கூடும் பரீட்சைக்கான தயார்படுத்தல்கள், குறிப்புகள் என்பன எவ்வாறிறுந்த போதிலும், எமக்கு பரீட்சை தொடர்பில் சிறுபயம் காணப்படுதல் இயல்பு. மேற்கூறிய கூற்று தொடர்பில் நன்கு சிந்தியுங்கள் நாம் பயிலும் மூன்று பாடங்களிலும் புள்ளிகளை நழுவ விடக்கூடிய பல்வேறு பகுதிகள் உள்ளன. பொருளியல் பாடத்தை பொறுத்தமட்டில் எம்மில் பலர் பல்தேர்வு வினாக்களுக்குரிய சரியானதும், குறிப்பானதுமான விடையினை தெரியப்படுத்துவதில் சிக்கலை எதிர்நோக்குகிறோம். நான் மேற்கூறிய கூற்றானது ஒரு ஆங்கில பழ மொழியிலிருந்து பெற்றுக்கொண்ட விடயமாகும். "If you want to earn you have to learn" என்பதே அப்பழமொழி ஆகும். இற்றைக்கால பல்தேர்வு வினாக்களை பொறுத்தமட்டில் Theory of Elemenation விலக்குதல் கோட்பாடு என்பதை பயன்படுத்துதல் சிறந்தது. அதாவது ஒரு வினாவில் பிழையான பொருத்தமற்ற விடைகளை முதலில் அகற்றி, பின்பு சரியான விடையை தெரிவு செய்தலே இம்முறையாகும். சென்ற இதழ்களில் பயிற்சி வினாத்தாள்கள் தருவதாக ஒப்புதல் அளித்திருந்தேன். இம்முறை கணக்கீடு மற்றும் வணிகக்கல்வி பாடங்களுக்குரிய வினாத்தாள்கள் வெளியாவதோடு, பொருளியல் பாடத்தை சவாலாக எண்ணும் பலருக்கு உதவியாக இலகுநடையில் ஒரு முன்னோட்டமும் வழங்கப்பட்டுள்ளது. 2011 மாணவர்களே அனைத்து ஆக்கங்களும் 2010 மாணவர்களுக்கு என எண்ணி இவ்விதழை புறந்தள்ளிவிட வேண்டாம். இவ்விதழின் அனைத்து ஆக்கங்களும் உங்களுக்கும் உந்துசக்தியாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களே உங்களது சந்தேகங்களை எம்மிடம் வினவி தெளிவு பெற்றுக்கொள்ளவும் முடியும். உங்களது முயற்சிக்கு சிறந்த பலன், அறிவுத்தேடல் அதற்கு சிறந்த பயன்.

**கல்வி வாழ்க்கைக்கு.**
இதழாசிரியர்
**பா. பானுசந்தர்**

## Editorial


**இதழாசிரியர்**
பா. பானுசந்தர்

**பிரதம பதிப்பாசிரியர்**
ச. சிவபாஸ்கரன்

**திட்ட ஆலோசகர்**
ரா. பிரவிந்த்

**பதிப்பகம்**
அறிவுப்பதிப்பகம்
இல.3, சென். கில்டாஸ் ஒழுங்கை,
கொழும்பு - 03.

**கணனி வடிவமைப்பு**
ஜெ. அனந்தன்

**புத்தக வடிவமைப்பு**
JA Creations
இல. 541/4. காலி வீதி.
கொழும்பு - 06.
தொ.இல. 0773 405 341

**அச்சகம்**
வீமாஸ் அச்சகம்
இல. 82. ஸ்ரீ ரட்ணஜோதி
மாவத்தை. கொழும்பு - 13.
தொ.இல. 0112 431 588

# இவர் யார்?

## ஆன் ஓ க்றூகர்

## Anne O Krueger 1934

ஆண்டு பெப்ரவரி 12ம் திகதி பிறந்த அமெரிக்க நாட்டு பொருளியல் விஷேட நிபுணரான பெயர் ஆன் ஓ க்றூகர் ஆகும். சர்வதேச பொருளியல் (International Economics) என்ற துறைய-ண்டித்தியம் பெற்ற இவர், அத்துறைக்கென முதன்மையானதும், சிறப்பானதுமான பங்காற்றியுள்ளார் ன்பது மறுப்பிற்கிடமற்ற உண்மை. இவர் உலகவங்கி, சர்வதேச நிறுவனங்களிலும் தமது உன்னத உரைகளை நிகழ்த்தியுள்ளார். இவர் 1982 - 1988 வரை உலக வங்கியில் பொருளியல் ஆலோசகராக கடமையாற்றியுள்ளார்.

உலக வங்கிக்கு பொருளாதார அபிவிருத்தி, பொருளாதார ஒத்துழைப்பு என்பவை தொடர்பில் பல்வேறு ஆலோசனைகளையும் குறிப்பிட்டுள்ளார்.


பழம்பெரும் பொருளியலாளர்கள் போலல்லாது நடைமுறையில் உலக பொருளாதாரம் தொடர்பான விடயங்களை நன்கு ஆராய்ந்து அறிக்கைப்படுத்திய பெருமை இவரையே சாரும். மேலும் இவரது பொருளா-தார துறைக்கான பங்களிப்பினை தெளிவுபடுத்தும் மற்றுமொரு காரணி இவர் 2001 முதல் 2007 வரை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக செயற்பட்டுள்ளார். இவர் சர்வதேச நாணய நிதியத்தில் இணைவதற்கு முன்னர், Stanford பல்கலைக்கழகத்தில் முதுநிலை பேராசிரியையாக கடமையாற்றினார். இவர் மேலும் Johns Hopkins School இலும் உயர் சர்வதேச கல்வி தொடர்பிலான பேராசிரியையாக கடமையாற்றினார்.

அதன் பின் Stanford பல்கலைக்கழகத்தில் பொருளாதார வளர்ச்சி மற்றும் கொள்கை மறுசீரமைப்பு தொடர்பிலான நிலையமொன்று உருவாக்குதல் தொடர்பாக முன்னின்று உழைத்தவரும் இவராவர். Stanford's Centre for Research on Economics Development and Policy Reform இவர் அனைத்து கட்டுரைகளும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை மயப்படுத்தியவையாகும். நீண்டகாலமாக பொருளியல் துறைக்காக பங்காற்றிய இவர் அறிவுத்தேடலில் இவர் யார் பகுதியில் இடம்பெற்ற நோபல் பரிசு பெற்ற அறிஞர்கள் போல், நோபல் பரிசு பெறாவிடினும், இவரது உன்னத சேவைக்கு நாம் வழங்கும் ஒரு கௌரவமே இது.



இதழாசிரியர்

**பா. பானுசந்தர்**





பேராசிரியர் ஜகத்பண்டார நாயக்க
Visiting Professor
School of Business Studies
Algonquin College - Canada

# சிறு வணிகம்

1970ம் ஆண்டுகளில் பல நாடுகள் பாரிய வணிகங்களை உருவாக்குவதில் முனைப்பினைக் காட்டின. அரச பங்களிப்புடன் பாரிய வணிகங்களும் உருவாக்கப்பட்டன. ஆனால் இன்றைய காலத்தைப் பொறுத்தமட்டில் பாரிய வணிகங்களை உருவாக்க வேண்டுமென்ற எண்ணக்கரு முற்று முழுதாக மாறியுள்ளது. அரச பொருளாதாரங்களில் பாரிய வணிகங்களே அதிகளவில் இருந்தன. ஆயினும் இவற்றின் ஊடாக உயர் பொருளாதார வளர்ச்சியை அடைய இயலாமல் போனது. சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுவதற்கு இப்பாரிய வணிகங்களும் காரணமாகியது என்றால் மிகையல்ல. தோல்வியடைந்த இத்தகைய பாரிய வணிகங்களை அவற்றின் தன்மையில் அல்லது இயலளவில் குறைவினை ஏற்படுத்துவதற்கு (Down Sizing) முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**இக்கட்டுரையின் மூலம் உங்களுக்கு....**

- சிறுவணிகங்களின் ஆரம்பம்.
- சிறுவணிகங்களை விருத்தியாக்க உதவிய துறைகள்.
- சிறுவணிகங்கள் தொடர்பான வரைவிலக்கணம்.
- சிறுவணிகங்களை ஏன் வேறுபடுத்தி இனங்காண வேண்டும்.
- ஒரு நாட்டுக்கு சிறு வணிகம் மூலம் ஆற்றப்படும் பிரதான நன்மைகள்.
- MBWA எண்ணக்கரு
- சிறுவணிகங்களின் நன்மைகள்
- சிறுவணிகங்களின் தீமைகள்/ தடைகள்

போன்றவை தொடர்பில் தெளிவைப் பெற்றுக் கொள்ள முடியும். 2011ம் ஆண்டு மாணவர்களே இக்கட்டுரை உங்களுக்கும் பயன்மிக்கதாகும்.

இதன் பிரதிபலனாக பல்வேறு ஊழியர்களின் தொழில் வாய்ப்புக்கள் பறிபோயின. மேலும் உயர் கற்கைகளை பூர்த்தி செய்த பலரும் தொழிலின்றி திண்டாடினர்.

இதன் காரணமாக பாரியளவு வேலையின்மைப் பிரச்சினைகள் நாடுகளில் தோற்றம் பெற்றது. தொழிலற்ற பலர் தாமே ஒரு புதிய வணிகத்தை உருவாக்க வேண்டும் என்ற ரீதியில் சிந்திக்கத் தொடங்கினர். இவர்கள் சிறுவணிகத்தில் நம்பிக்கை வைத்தனர். மேலும் அரசும் இதற்கு பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்கியது. நிலைத்து நிற்கும் பொருளாதார வளர்ச்சியினை அடைந்து கொள்வதற்கு சிறுவணிகங்களின் பங்களிப்பு மிக அவசியம் என்பதை பொருளியல் அறிஞர்கள் வலியுறுத்தினர். இதன் காரணமாக பரவலாக்கப்பட்ட முயற்சியாண்மை தொடர்பாக மக்களுக்கு நம்பிக்கை ஏற்படத் தொடங்கியதோடு சிறுவணிகங்களின் உருவாக்கம் வளர்ச்சி கண்டது. இதன் மூலம் 21ம் நூற்றாண்டின் பொருளாதார வளர்ச்சியின் எரிபொருள் மற்றும் பிரதான பொறித் தொகுதி (Engine) முயற்சியாண்மை மற்றும் சிறுவணிகங்களே என வர்ணிக்கப்படுகின்றது. முயற்சியாண்மை மற்றும் சிறுவணிகங்கள் தொடர்பான அக்கறை பின்வரும் துறைகளில் பல்வேறு நன்மைகளை ஏற்படுத்தியது.

1. வியாபார நிறுவனங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.
2. அதிக வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப் பட்டன.
3. அரசின் சிறுவணிகங்கள் தொடர்பான ஊக்குவிப்புத் திட்டங்கள் மேன்மேலும் அதிகரித்தன.
4. சிறுவணிக உரிமையாளர்களின் மற்றும் ஊழியர்களின் பொருளாதார மற்றும் அரசியல் பலம் அதிகரித்தது.
5. சிறுவணிகங்களின் பிரதி விம்பம் (Image) அதிகரித்தது.


## சிறுவணிகம் என்றால் என்ன?

தனியார் உரிமை மற்றும் தனியாரினால் நடாத்தப்படும் குறைந்த ஊழியரை உடைய குறைந்த விற்பனைகளை உடைய வணிகங்களை சிறுவணிகங்கள் எனலாம்.

தனியார் உரிமைகளின் கீழ் கம்பனிகளாக அல்லது பங்குடைமைகளாக அல்லது தனியுடைமைகளாக இவை நடாத்திச் செல்லப்படுவதைக் காணலாம். சிறுவணிகங்களை அளவிடுவதற்கான அளவுசார் பிரமாணங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. பொதுவான ஒரு பிரமாணம் கிடையாது. எவ்வாறு எனினும், அதிக நாடுகள் ஊழியர் எண்ணிக்கையினைக் கொண்டே வகையிடுகின்றனர். உதாரணமாக, ஐக்கிய அமெரிக்கா 100க்கு மேற்படாத ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்களை சிறுவணிகங்கள் எனவும் ஐரோப்பிய சங்கம் 50க்கு மேற்படாத ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்களை சிறுவணிகங்கள் என்றும் வகையிடுகின்றனர். இலங்கையில் 25க்கு மேற்படாத வணிகங்கள் சிறுவணிகங்களாகும். ஊழியர் எண்ணிக்கையினைத் தவிர வேறு சில பிரமாணங்களும் உள்ளன. வருடாந்த விற்பனை, சொத்துக்களின் மதிப்பு, தேறிய இலாபம், ஈடுபடுத்திய மூலதனம், பயன்படுத்தப்படும் சக்தி/வலு போன்றவை இவையாகும்.

சிறுவணிகங்கள் பொதுவாக அத்துறையில் ஈடுபடும் ஏனைய வணிகங்களுடன் கூடிய சக்தி மயமானது எனக்கூற முடியாது. பல நாடுகளின் மொத்த வணிகப்பங்களிப்பில் சிறுவணிகங்கள் பாரிய இடத்தை வகிக்கின்றன. சில்லறைக் கடைகள், வெதுப்பகம் மற்றும் இனிப்புப்பண்ட தயாரிப்பு, சிகையலங்கார நிலையம், அழகுக்கலைநிலையம், உணவகம், புகைப்பட நிலையம், பட்டயக்கணக்கறிஞர் நிறுவனம், சட்ட ஆலோசனை நிறுவனம் என்பவை சிறுவணிகங்களுக்கு சிறந்த உதாரணம் ஆகும். உள்ளக ரீதியில் மேற்கொள்ளப்படும் சிறுவணிகங்கள் வீட்டுத்துறை சார் வணிகம் (Home Based Business) என அழைக்கப்படும். உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பன இதனை நுண்வணிகங்கள் (Micro Business) எனக் கூறுகின்றனர். உள்ளக வணிகங்கள் குடும்ப அங்கத்தவர்கள் மூலம் நடாத்தப்படும் போது அவை தாய் தந்தை வணிகம் (Mum & Pup Business) என அழைக்கப்படுகின்றன.

**இச்சுவாரஸ்சியமான பாடத்தொகுப்பின் தொடர்ச்சி அடுத்து வரும் இதழில் தொடரும்...**



## கல்விப் பொதுத்தரதராதர உயர்பரீட்சை முன்னோடி வினாப்பத்திரம் 2010
## வணிகக்கல்வி 1 (பகுதி 1)
## General Certificate of Education (Ad. Level) Examination Mock Paper 2010
## Business Studies I (Part I)

**இரண்டு மணி நேரம்**
**Two Hour**

**சுட்டிலக்கம் .............................**

**பரீட்சார்த்திகளுக்குரிய அறிவுறுத்தல்கள்**

முதலாவது வினாவிற்கும், இரண்டாவது வினா உட்பட மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.

---

**வினா இல. 01**

1. பிரவிந்தும், பாஸ்கரனும் 2009 உயர்தர வணிகப்பிரிவில் பயின்றனர். இருவரும் பரீட்சைக்கு தோற்றி பிரவிந் பல்கலைக்கழக அனுமதியை பெற்று கொண்டார். ஆனால் பாஸ்கரன் அனுமதி பெறவில்லை. பாஸ்கரனின் தந்தையார் பால் உற்பத்தி நிறுவனமொன்றினை நடாத்தி வருகிறார். அவர் இத்துறையில் பிரயோக ரீதியில் அனுபவம் பெற்றும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

   நீங்கள் ஒரு தொழில்வழிகாட்டி என்ற ரீதியில் இருவருக்கும் தமது தொழில்சார் வாழ்க்கையினை அமைத்துக்கொள்ள அறிவுரைகளை கூறுக.
2. வணிகச்சூழலானது "உலகளாவிய சனத்தொகை அதிகரிப்பு" என்ற பிரச்சினையை எதிர்நோக்குகின்றது. இது எவ்வெவ்வழிகளில் வணிகமொன்றுக்கு சவாலாக அமையமுடியும் என விளக்குக?
3. வணிகமொன்று வெற்றி பெறுவதற்கு, அல்லது தோல்வியுறுவதற்கு ஆதிக்கம் செலுத்தும் பிரதான காரணிகள் எவை?
4. "வணிகங்களுக்கு தேவைகளைவிட விருப்பங்களே அதிகம் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்", இக்கூற்றை விளக்குக?
5. வணிக நிறுவனமொன்று தமது பண்டம், சேவையினை சந்தைப்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய சமூக கடப்பாடுகள் 3 இனை குறிப்பிடுக?
6. வணிகமொன்று வெற்றி பெறச்செய்யும் "பபவாஅ" ஆய்வு பற்றி தெளிவுபடுத்துக?

**வினா இல. 02**

1. பணத்தின் சுற்றோட்டம் என்பது யாது? (Velxity of Money)
2. பண சுத்தப்படுத்தல் (Money Laundering) என்றால் என்பதை தெளிவுபடுத்தி அத்தகைய சூழ்நிலை உருவாகுவதற்கான 03 காரணிகளை குறிப்பிடுக?
3. "நடைமுறையில் கடனட்டையை பயன்படுத்தி கொடுக்கல் வாங்கலில் ஈடுபடல் வேகமாக அதிகரித்து வரும் வழக்கமாக உள்ளது" கடனட்டையொன்றில் உள்ளடங்கும் பிரதான விடயங்கள் 5 இனைத் தருக?
4. அரசாங்கமொன்றால் பொருளாதார ஒழுங்கமைத்தலுக்கு மேற்கொள்ளப்படும் கருமங்கள் எவையென விளக்குக.
5. வணிகமொன்றில் காணப்படும் வாய்மொழி மூலம் தொடர்பாடல் மற்றும் வாய்மொழியற்ற தொடர்பாடல் முறைகள் என்பவற்றுக்கு 4 உதாரணம் தருக?
6. தண்ணளி கொடுப்பனவு (Ex-gratia payment) என்றால் என்ன? இது எத்தகைய சூழ்நிலையில் வழங்கப்படுகிறது?

**வினா இல. 03**

1. வணிகமொன்றின் தூரநோக்கு அல்லது இலட்சிய நோக்கினை அடைவதை அளவிடுவதற்கான

அளவுகோள் குறிக்கோள் எனப்படுகிறது.

அ. நோக்கம், குறிக்கோள் என்பவற்றை உதாரணமொன்றினூடாக விளக்குக.

ஆ. வணிகத்தில் அக்கறையுடைய தரப்பினரை இரு வகையாக பிரிக்க முடியும். அதனை குறிப்பிட்டு விளக்குக.

2. வணிகமொன்று சமூகப்பொறுப்பில் இணையும் 4 சூழ்நிலைகளை தருக?

3. நுகர்வோர் தமது பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வழிமுறைகள் இரண்டையும் தெளிவுபடுத்துக.

4. கரைகடந்த கம்பனிகளால் ஒரு நாட்டிற்கு கிடைக்கும் அனுகூலங்கள் எவை?

**வினா இல. 04**

1. வரையறுத்த கம்பனியொன்றின் பங்குதாரருக்கும், பங்குடமையொன்றின் செயலற்ற பங் ஒருவருக்கும் இடையிலான ஒற்றுமைகள் 2 ஐயும் வேறுபாடுகள் 2 ஐயும் குறிப்பிடுக?

2. புதிய கம்பனி சட்டத்தின் 201ம் பிரிவுக்கமைவாக கம்பனி இயக்குனர்களின் எண்ணிக்கை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது.

3. "நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை (Sustainable Economic Growth) அடைதவற்கு சிறு வணிகங்களின் பங்கு அளப்பரியது ஆகும்" இக்கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் கருத்துரைக்க?

4. புதிய கம்பனி சட்டத்தின்படி காணப்படும் கம்பனி பிணக்கு இணக்கச்சபை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது, இதற்கான பிரதான நோக்கம் யாது?

**வினா இல. 05**

1. சிறுகுறிப்பு எழுதுக.

அ. உட்கிடைப்பணம் (Implict Money)

ஆ. இலத்திரனியல் பணப்பை (E-Purse)

இ. இலத்திரனியல் சமிக்ஞை பணம் (Digi Cash)

2. ரஞ்சன் தமது மோட்டார் வாகனத்தினை 10, 000 ரூபாவுக்கு காப்புறுதி செய்தார். வாகனத்தின் உண்மையான பெறுமதி 1, 200, 000 ரூபா ஆகும். மோட்டார் விபத்தொன்றில் இவருக்கு 100, 000 ரூபா பெறுமதியான நட்டம் ஏற்பட்டது. இவர் 100, 000 இனை காப்புறுதி நிறுவனமிடம் கொடைமுனைவு செய்ய முடியுமா? ரஞ்சனுக்கு ஆலோசனை வழங்குக?

3. இலங்கை போக்குவரத்து முறைமையை சிறப்பானதாக மாற்ற நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் எவை?

4. "வணிகத்தின் அளவு விஸ்தீரனம் அடைவதால் தகவல்கள் மிக முக்கிய வளமாக மாறிவிடுகிறது" இக்கூற்றை முன்னிலைப் படுத்தக்கூடிய நியாயங்களை தருக?

**வினா இல. 06**

1. காசோலையொன்றை வரையும்போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

2. நீங்கள் உமது வீட்டிற்கு தொலைபேசி இணைப்பொன்றை பெற உத்தேசித்துள்ளீர்கள். இதற்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய மாற்று வழிகள் 03 இலங்கையில் உண்டு அவை எவை?

3. சிறுகுறிப்பு எழுதுக.
   i. கருப்பு சந்தை (Black Market)
   ii. சாம்பல் சந்தை (Gray Market)
   iii. தபால் கடைகள் (Mail order Stores)

4. சரியான முறையில் தகவல் முறைமையொன்றை பயன்படுத்துவதனூடாக பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் சுருக்கமாக விளக்குக.

## கல்விப் பொதுத்தரதராதர உயர்பரீட்சை முன்னோடி வினாப்பத்திரம் 2010
## வணிகக்கல்வி 1 (பகுதி 2)
## General Certificate of Education (Ad. Level) Examination Mock Paper 2010
## Business Studies I (Part II)

**இரண்டு மணி நேரம்**
**Two Hour**

**சுட்டிலக்கம் ..............................**

**பரீட்சார்த்திகளுக்குரிய அறிவுறுத்தல்கள்**

முதலாவது வினாவிற்கும், இரண்டாவது வினா உட்பட மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.

---

**வினா இல. 01**

1. "முயற்சியாண்மைகள் வெற்றிப்பெற தனிப்பட்ட நபர் சார்ந்த காரணிகள் பெரிதும் உதவுகின்றன". தெளிவுபடுத்துக?
2. வணிகத்தை பலப்படுத்தும் மற்றும் தொடர்ந்தியங்க செய்யும் காரணிகளை பட்டியற்படுத்துக.
3. "மாறிவரும் சூழல் பற்றிய தெளிவான அறிவு முகாமையாளருக்கு காணப்படல் வேண்டும்".

   அ. மாறிவரும் சூழல் என்பதால் கருதப்படுவது யாது?

   ஆ. சூழல் மாற்றம் காரணமாக முகாமையாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் எவை?
4. சிறுகுறிப்பு எழுதுக.
   1. நேர் சிந்தனை (Positive Attitude)
   2. அறிவு (Knowledge)
   3. திறன் (Skill)
5. மொத்த தர முகாமைத்துவத்தால் நிறுவனமொன்று பெற்றுக் கொள்ளும் நன்மைகள் எவை?
6. i. சந்தைப்படுத்தல் திட்டம் என்பதால் கருதப்படுவதென்ன?

   ii. சந்தைப்படுத்தல் கலவையினை வணிகத்தின் கோணத்திலும் வாடிக்கையாளர் கோணத்திலும் விளக்குக.

**வினா இல. 02**

1. ஒரே உற்பத்திக் கலவையினை நிறுவனங்கள் பின்பற்றுவதில்லை. இதற்கான முக்கிய காரணங்கள் எவை?
2. அ. "பணம் மற்றும் நிதி என்பன வெவ்வேறானவை" விளக்குக.

   ஆ. வியாபாரமொன்றின் பிரதான நிதிக்கருமங்களும் எவை? அவை எவ்வாறு ஐந்தொகையில் வெளிப்படுத்தப்படுகின்றன.
3. இலங்கையின் வினைத்திறனான நிதிச்சந்தை பிரதானமாக சில வரையறைகளுக்குள் வகுக்கப்படுகின்றன. அவை எவை?
4. திசைமுகப்படுத்தல் என்றால் என்ன? இதன் முக்கிய கருமங்கள் எவை?
5. அ. செயற்திறன் மதிப்பீடு (Performance Evaluation) என்றால் என்ன?

   ஆ. செயற்திறன் மதிப்பீட்டை மதிப்பிடுவதன் ஊடாக பெற்றுக்கொள்ளும் நன்மைகள் எவை?
6. வணிகத் திட்டமொன்றை உருவாக்கும் முறை யாது? என விளக்குக.

**வினா இல. 03**

1. அ. ஊழியர்களை ஊக்கப்படுத்தக்கூடிய வெவ்வேறான முறைகள் எவையென விளக்குக.

ஆ. ஊக்குவிப்பைப் பெற்ற ஒரு ஊழியர் மூலம் நிறுவனத்துக்கு கிடைக்கும் நன்மைகள் எவை?

2. உயர் இருப்புமட்டம் ஒன்றை பேணுவதனூடாக நிறுவனமொன்று பெற்றுக் கொள்ளும் நன்மைகள் எவை?

3. "சந்தைப்படுத்தல் அதன் ஆழத்தின் அடிப்படையில் இரண்டு சந்தர்ப்பங்களை உடையது" இவ்விரண்டு சந்தர்ப்பங்களும் எவையென விளக்குக.

4. இடக்கலவை/விநியோகக்கலவை (Place Mix) என்றால் என்ன?

**வினா இல. 04**

1. "சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கிடையிலான தொடர்பானது இருதரப்புக்கும் சாதகமான காரணியாகும்". இக்கூற்றைத் தெளிவுபடுத்துக.

2. சிறுகுறிப்பு எழுதுக.
   1. கமிர கடன் திட்டம்
   2. சீட்ஸ் (Seeds) கடன் திட்டம்

3. விளம்பரங்கள் நுகர்வோருக்கு நன்மை பயக்கும் அதே வேளை தீய விளைவுகளையும் ஏற்படுத்த வல்லன. இத்தகைய தீய விளைவுகள் யாவை என விளக்குக.

4. அரச பிணைப்பத்திரங்களை விற்பனை செய்யும் முதற் தர வணிகர்களைப் பற்றி தெளிவுபடுத்தி அவர்களின் கருமங்களைக் குறிப்பிடுக.

**வினா இல. 05**

1. புதிய உற்பத்தி என்பதை விளக்கி, புதிய உற்பத்தியின் முக்கிய கட்டங்களை குறிப்பிடுக.

2. சிறுகுறிப்பு எழுதுக.
   1. நிறுத்தி வைத்த இலாபம்
   2. சந்தைக்கடன்/வியாபாரக்கடன்
   3. காரணிப்படுத்தல்

3. வணிகமொன்றுக்கு தேவையான தொழிற்படு மூலதனத்தை தீர்மானிக்கும் காரணிகள் எவை?

4. பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றை விளக்கி இவை எவ்வாறு வணிகங்களுக்கு உதவுகின்றன என்பதை விளக்குக.

**வினா இல. 06**

1. சிறுகுறிப்பு எழுதுக.
   1. வணிகப்பத்திர சந்தை
   2. தரகர் நிறுவனங்கள்
   3. இலங்கை போரக்ஸ் அமைப்பு

2. ஊழியர் ஒருவருக்கான சம்பளத்தை நிர்ணயிக்கும் போது கவனிக்க வேண்டிய காரணிகள் எவை?

3. ஊழியரின் செயற்திறன் குன்றுவதற்கான பிரதான காரணிகளை விளக்குக.

4. வணிகத்திட்டம் ஒன்றில் அவதானிக்கக்கூடிய பிரதான காரணிகள் எவை?

## அடுத்த இதழில்...

⏭ இம்முறை வெளியாகும் முன்னோடி பரீட்சைகளுக்குரிய வினாப்பத்திரங்களின் விடைகளை எதிர்வரும் இதழ்களில் எதிர்பாருங்கள்...

⏭ பொருளியல் II பாடம் தொடர்பான விஷேட இணைப்பு

# கல்விப் பொதுத்தரதராதர உயர்பரீட்சை முன்னோடி வினாப்பத்திரம் 2010
## வணிகக்கல்வி 2 (பகுதி 1)
# General Certificate of Education (Ad. Level) Examination Mock Paper 2010
## Business Studies II (Part I)

ஒரு மணி நேரம்
**One Hour**

சுட்டிலக்கம் ..............................

**பரீட்சார்த்திகளுக்குரிய அறிவுறுத்தல்கள்**

பகுதி I இன் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் 1 புள்ளி வீதம் வழங்கப்படும்.

பகுதி I வினாப்பத்திரத்தை பகுதி II விடைத்தாளுடன் இணைத்து வழங்குதல் வேண்டும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| பகுதி I க்கு | |
| வினா இல | புள்ளி |
| 1 - 20 | |
| 21 - 40 | |
| கூட்டுத்தொகை | |

1. பொருள் பல்வகைப்படுத்தல் என்றால் என்ன?
   1. தற்போதுள்ள பண்ணடத்திற்கு புதிய உதிரிப்பாகங்களை இணைத்தல்.
   2. உற்பத்தியின்போது அகற்றப்படும் பண்டங்களை கொண்டு தயாரிக்கும் உற்பத்தி
   3. பண்ட உற்பத்தியின்போது இடம்பெறும் வெவ்வேறு வகைகள்
   4. பண்ட உற்பத்தி தொடர்பிலான பல்வேறு வகைகள்
   5. ஒரே உற்பத்தியில் தங்கியிராது பல்வேறு உற்பத்திகளை மேற்கொள்ளல்

2. வணிகத்தின் பிரதான தொழிற்பாடல்லாதது?
   1. உற்பத்தி  2. சந்தைப்படுத்தல்
   3. நிர்வாகம்  4. நிதி
   5. போக்குவரத்து

3. யுத்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கான வீடமைப்பானது உள்ளடங்குவது?
   1. முதனிலை உற்பத்திக்குள்  2. இரண்டாம்நிலை உற்பத்திக்குள்
   3. நிர்மாண உற்பத்திக்குள்  4. அரசக்கைத்தொழிலுக்குள்
   5. தனியார்துறை கைத்தொழிலுக்குள்

4. சமூக கலாசார சூழல் கூறு ஒன்றாக கருதக்கூடியது?
   1. வயது பரம்பல்  2. பெறுமதி
   3. பணவீக்கம்  4. சட்டத்திட்டங்கள்
   5. மேற்கூறிய எவையுமல்ல

5. கீழ்வருவனவற்றின் மனிதத் தேவையொன்றாக கருத முடியாதது.
   1. உணவு மற்றும் பானம்  2. உடைகளும் உறையுளும்
   3. கல்வி,சுகாதாரம்  4. போஷாக்கும், பாதுகாப்பும்
   5. திரைப்படம் மற்றும் நாடகங்களை பார்த்தல்

6. உற்பத்தியில் வெளியாகும் கழிவுகளை முடிந்தளவு குறைத்து கொள்வதற்கு நடவடிக்கை யெடுத்தல்
   1. மீள் உற்பத்தி ஆகும்  2. கழிவு முகாமைத்துவம் ஆகும்
   3. மீள் சுழற்சி எனப்படும்  4. கழிவுகளை கட்டுப்படுத்தல்
   5. மேற்கூறிய யாவும்.

7. வணிக விழுமியம் தொடர்பான மிகச் சரியான கூற்று
   1. பிழையானவற்றை செய்யாமை, சரியானவற்றை செய்தல்
   2. கொடுக்கல் வாங்கல் செய்வோருடன் சரியாக நடந்து கொள்ளல்
   3. சிறந்த, தரமான உற்பத்திகளை மேற்கொள்ளல்
   4. சாதாரண விலையில் பொருட்களை விற்பனை செய்தல்
   5. அசாதாரண வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடாமை

8. பங்குடமையொன்றில் முகாமையில் ஈடுபடாத வரையறுக்கப்படாத பொறுப்புடைய நட்டம் தொடர்பில் வகைக்கூறாத பங்காளர்
   1. இரகசிய பங்காளர்
   2. செயலற்ற பங்காளர்
   3. வரையறுக்கப்படாத பங்காளர்
   4. அமைதிப் பங்காளர்
   5. இலாபத்தில் மட்டும் உரித்துடைய பங்காளர்

9. நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பில் தொடர்புறாத சட்டம் எது?
   1. உணவுச்சட்டம்
   2. இலங்கைதரக்கட்டளைச்சட்டம்
   3. நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம்
   4. வாசனைத்திரவிய மற்றும் மருந்துபொருள் கட்டளை சட்டம்
   5. தேசிய வருமான சட்டம்

10. இலங்கையில் கூட்டுறவு நிறுவனங்களின் கணக்கினை மேற்பார்வை செய்யும் நிறுவனம்
   1. இலங்கை தேசிய கூட்டுறவு பேரவை
   2. கூட்டுறவு முகாமைத்துவ நிறுவனம்
   3. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
   4. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
   5. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்

11. கீழ்வரும் அமைப்புகளில் அரச அமைப்பாக கருத முடியாதது
   1. இலங்கை மின்சார சபை
   2. கனியவள கட்டுப்பாட்டு கூட்டுத்தாபனம்
   3. இலங்கை தனியார் மின்சார நிறுவனம்
   4. இலங்கை டெலிகொம் நிறுவனம்
   5. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்

12. தனியார் மயப்படுத்தல் என்பது
   1. அரச கூட்டுத்தாபனங்களை தனியாருக்கு விற்பனை செய்தல்
   2. அரச முயற்சிகளை தனியாருக்கு விற்பனை செய்தல்
   3. உரிமையினை மாற்றுவதனூடாக செயல்திறனானதாக மாற்றுதல்
   4. அரச திணைக்களங்களை தனியாருக்கு விற்றல்
   5. பொருள் சேவை உற்பத்தியை அரசிடமிருந்து தனியாருக்கு மாற்றுதல்

13. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி என்ற வகுதிக்குள் உள்ளடங்குவது
   1. சம்பத் வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி
   2. மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி
   3. தேசிய சேமிப்பு வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி
   4. பிரதேச அபிவிருத்தி வங்கி, நிதி நிறுவனங்கள் அலகுப் பொறுப்பாட்சிகள்
   5. மேற்கூறிய எவையுமல்ல

14. சரியான கூற்றை தெரிவு செய்க?
   1. பங்கு சான்றிதழ் பங்குசந்தையில் கொடுக்கல் வாங்களில் ஈடுபடுவதற்காக வெளியிடப்படுகிறது
   2. பங்காளர் பெயர்பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்படும்போது வெளியிடப்படும்
   3. பங்காளர் பெயர்பட்டியலில் பெயர் உள்ள பங்காளருக்கு மட்டும் வெளியிடப்படும்
   4. பங்குகளின் முழுப்பெறுமதியை செலுத்தியவர்களுக்கு மட்டும் வழங்கப்படும்
   5. பங்குகளின் பெயரளவு பெறுமதிக்கு மட்டும் வெளியிடப்படும்

15. காசோலையொன்றின் MICR நிரலின் காணப்படும் மிக முக்கிய தகவலானது
   1. காசோலை இலக்கம்
   2. கணக்கு இலக்கம்
   3. வங்கி இலக்கம்
   4. வங்கி கிளை இலக்கம்
   5. தீர்வு இலக்கம்

16. தனியார் பஸ்வண்டியொன்று போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு காணப்பட வேண்டிய காப்புறுதி ஒப்பந்தம்
   1. இழிவளவான இரண்டாம் கட்சி ஒப்பந்தம்
   2. முழுப்பொறுப்பு காப்புறுதி ஒப்பந்தம்
   3. முழுப்பொறுப்பு காப்புறுதி ஒப்பந்தம் மற்றும் மூன்றாம் கட்சி ஒப்பந்தம்
   4. முழுப்பொறுப்பு காப்புறுதி ஒப்பந்தம் மற்றும் அவசர விபத்து காப்புறுதி
   5. முழுப்பொறுப்பு காப்புறுதி ஒப்பந்தம் மற்றும் சுனாமி விபத்து காப்புறுதி

17. வெளியக தொடர்பாடல் முறைகளை மட்டும் உடைய தொகுதியை தெரிவு செய்க?
   1. கூட்டங்கள், இன்வொயிஸ், வங்கி கூற்று

2. விளம்பர அறிவித்தல், கெட்லொக், காசுக்கான கொள்வனவு பற்றுசீட்டு
3. செய்தித்தாள், சஞ்சிகை, அறிவித்தல் பலகை
4. மெமோ பத்திரம், கூட்டம், அறிவித்தல் பலகை
5. கூட்டங்கள், கெட்லோக், கணக்கு குறிப்பு

18. வணிகப்பத்திரம் தொடர்பான சரியான கூற்று
1. பெயரளவு பெறுமதிக்கு வெளியிடப்படும்
2. சந்தையில் விற்கப்படும் ஒரு பத்திரம்
3. வெனிக் வங்கியூடாக வெளியிடப்படும்
4. காலம் முடிந்தவுடன் கழிவு செய்யமுடியும்
5. கொள்வனவு செய்தவர் வட்டியினை பெறமுடியும்

19. கணணிக்கு தேவையான தகவல்களை தொகுத்து தேவையானபோது மீள பெற்றுக்கொள்ள களஞ்சியப்படுத்தும் முறைமை
1. தரவுத்தளம்
2. இணையத்தள உதிரிப்பாகம்
3. இருப்பு கட்டுப்பாட்டு முறைமை
4. சந்தை வெளி
5. தகவல் முறைமை

20. மத்தியமட்ட/இடைமட்ட முகாமையில் பயன்படுத்தப்படும் தகவல் முறைமை
1. கொடுக்கல் வாங்கல் தகவல் முறைமை (TPS)
2. தீர்மானமெடுத்தல் உதவி முறைமை (DSS)
3. கட்டளையிடல் தகவல் முறைமை (EWS)
4. அறிவு தகவல் முறைமை (KWS)
5. காரியாலய தன்னியக்க முறைமை (OAS)

**21 – 30 வரையான வினாக்களுக்கு விடையளிக்கும்போது பொருத்தமான பதங்களை உபயோகிக்கவும்**

21. உலக வர்த்தக நிறுவனத்தின் தலைமையகம் அமைந்துள்ள நகரம் ____________________ ஆகும்.

22. வெளியகத்தரப்பினால் இழப்பீட்டினை பெறும் உரிமையினை காப்புறுதியாளரிடமிருந்து காப்புறுதி நிறுவனத்திற்கு மாற்றுகின்ற விடயம் தொடர்பான தத்துவம் ____________________ ஆகும்.

23. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சர்வதேச வர்த்தகத்தினை மேம்படுத்த உருவாக்கப்பட்ட சர்வதேச நிறுவனம் ____________________ ஆகும்.

24. காசோலையொன்று மறுக்கப்பட்டமையையும், அதற்கான காரணங்களையும் உறுதிப்படுத்தி வழங்கும் ஆவணம் ____________________ ஆகும்.

25. பண்டங்களை துறைமுகத்திலிருந்து வெளியேற்றுவதற்குரிய ஆவணங்கள் இறக்குமதியாளருக்கு கிடைக்காத போது வெளிப்படுத்த வேண்டிய ஆவணம் ____________________ ஆகும்.

26. ஒரே உரிமையின் கீழ் ஒரே ஒரு பண்டத்தை மட்டும் விற்பனை செய்ய நாடுபூராகவும் உருவாக்கப்படும் சில்லறை கடைகள் ____________________ எனப்படும்.

27. தகவலை பெறுபவர் தொடர்பில் சிறந்த அறிவுடனும், அவருக்கு அத்தகவலை புரிந்துகொண்டு பின்னூட்டலை அனுப்பும் வகையில் தகவல் அனுப்பும் செயற்பாடு ____________________ எனப்படும்.

28. உயர்மட்ட முகாமையாளருக்கு தீர்மானமெடுத்தல் தொடர்பில் பயன்படுத்தும் தகவல் முறைமை ____________________ எனப்படும்.

29. கணணி வலையமைப்பொன்றுக்கு அனைத்து விதமான தகவல்களையும் பரிமாற்றும் பிரதான கணணி ____________________ ஆகும்.

30. இலங்கையில் மோட்டர்களை பதிவு செய்தல், வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் ____________________ எனப்படும்.

**31 – 40 வரையிலான வினாக்களுக்கு குறிப்பான விடைகளை தருக?**

31. சூழலை பாதுகாக்கும் நோக்கில் 2008 வரவுசெலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வரி எது?
 ______________________

32. புதிய கம்பனி சட்டப்படி வரையறுத்த பொதுகம்பனியின் இரு வகைப்படுத்தப்படுகிறது அவை எவை?
 ______________________

33. கைத்தொழில் மயமாக்கல் என்றால் என்ன?
 ______________________

34. யூரோ நாணயத்தை பயன்படுத்தும் இரு நாடுகளை குறிப்பிடுக?
 ______________________

35. மிதக்கும் காப்புறுதி ஒப்பந்தம் என்றால் என்ன?
 ______________________

36. வசதியான உற்பத்தி பொருள் என்றால் என்ன? உதாரணம் தருக?
 ______________________

37. சூழல் பாதுகாப்பு தொடர்பில் வெளியிடப்பட்ட ISO தரம் யாது?
 ______________________

38. போலிப்பண மோசடியினை தவிர்க்க அரசு அண்மைக்காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் 3 தருக?
 ______________________
 ______________________
 ______________________

39. கம்பனி பிணக்கு தீர்க்கும் சபையின் நோக்கம் யாது?
 ______________________

40. சந்தை வெளியின் (Market Space) இருவரையறைகளை தருக?
 ______________________

பொருளியல், வணிகக்கல்வி தொடர்பான பெறுமதியான சிங்கள நூல்களின் மொழி பெயர்ப்புகள் தொடர்பான விபரங்களை எம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுங்கள். தமிழ் மொழி மூலமான வணிகத்துறை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒழுங்கு செய்வதெனில் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**இதழாசிரியர்**
**0719 494 227**



# கல்விப் பொதுத்தரதராதர உயர்பரீட்சை முன்னோடி வினாப்பத்திரம் 2010
## வணிகக்கல்வி 2 (பகுதி 2)
# General Certificate of Education (Ad. Level) Examination Mock Paper 2010
## Business Studies II (Part II)

ஒரு மணி நேரம்
**One Hour**

சுட்டிலக்கம் ..........................

**பரீட்சார்த்திகளுக்குரிய அறிவுறுத்தல்கள்**
பகுதி I இன் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் 1 புள்ளி வீதம் வழங்கப்படும்.
பகுதி I வினாப்பத்திரத்தை பகுதி II விடைத்தாளுடன் இணைத்து வழங்குதல் வேண்டும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| பகுதி I க்கு | |
| வினா இல | புள்ளி |
| 1 - 20<br>21 - 40 | |
| கூட்டுத்தொகை | |

1. முயற்சியாளர் என்பவர்
   1. வளங்களை ஒன்றிணைப்பவர்  2. அபாயங்களை எதிர்கொள்பவர்
   3. புத்தாக்கம் புனைபவர்  4. வணிகமொன்றை முகாமை செய்பவர்
   5. மேற்கூறிய யாவும்

2. வினைத்திறன் என்பது என்ன?
   1. சரியானவற்றை செய்தல்
   2. உள்ளீடுகளை சிறப்பாக பயன்படுத்தல்
   3. ஒரு நடவடிக்கையினை குறைந்த வளங்களோடும், குறைந்த காலத்திலும் மேற்கொள்ளல்
   4. குறித்த நோக்கத்தை அடைந்துகொள்ள வளங்களை சரியான முறையில் பயன்படுத்தல்

3. முகாமையாளர் ஒருவரின் பிரதான பொறுப்பு யாது?
   1. ஊழியர்களை மகிழ்வித்தல்
   2. நிறுவனத்தின் இலக்குகளை அடைதல்
   3. கொடுக்கல் வாங்கல் செய்யும் தரப்பினரை திருப்திப்படுத்தல்
   4. உச்ச இலாபத்தை உழைத்தல்
   5. நிறுவனத்தின் நிலைப்பேற்றுத்தன்மையை உறுதிப்படுத்தல்

4. வணிக சந்தர்ப்பமொன்றில் காணப்பட வேண்டிய பிரதான இலட்சினை அல்லாதது
   1. கவர்ச்சிதன்மை  2. இலகுத்தன்மை
   3. நிலைப்பேறானத்தன்மை  4. நடைமுறைத்தன்மை
   5. மேற்கூறிய எவையுமன்று

5. ஊழியர் அனைவரையும் இணைத்துக்கொண்டு நிறுவனப்பணிகளை மேற்கொள்கின்ற தலைமைத்துவமுறை
   1. சனநாயக தலைமைத்துவம்  2. தந்தை தலைமைத்துவம்
   3. நட்பு தலைமைத்துவம்  4. சர்வாதிகார தலைமைத்துவம்
   5. மேற்கூறிய எவையுமன்று

6. மனித வள கேள்வியினை தீர்மானிக்கும்போது கவனிக்க வேண்டிய காரணிகளாக குறிப்பிடக் கூடியவை?
   1. நிறுவனத்தின் பொருள் அல்லது சேவைக்கான கேள்வி
   2. நிறுவனத்தின் இலக்கு மற்றும் திட்டம்
   3. தொழில் புரள்வு வீதம்
   4. உற்பத்தி முறை
   5. ஒய்வுபெறும் வயதெல்லை

   1. 1, 4 மற்றும் 5  2. 1, 2, 5  3. 1, 2, 3, 4  4. 1, 3, 4, 5
   5. மேற்கூறிய யாவும்

7. ஒரு நிறுவனமானது ஏனைய நிறுவனங்களிலிருந்து தன்னை வேறுபடுத்தி காட்ட நிறுவனம் உருவாக்கம் நோக்கங்கள் அடங்கிய கூற்று
   1. பிரமானங்கள் 2. வெளிப்படுத்தல்கள்
   3. கொள்கைகள் 4. குறிக்கோள்கள்
   5. மேற்கூறிய எவையுமல்ல

8. ஆட்சேர்த்தல் கருமமொன்றாக கருதப்பட முடியாதது
   1. வெற்றிடங்களை இனம்காணல்
   2. தொழிலுக்கு தேவையான காரணிகளை இனம்காணல்
   3. ஊழியருக்கான கேள்வியினை தீர்மானித்தல்
   4. தெரிவு செய்தல் மூலங்களை கண்டறிதல்
   5. சிறந்த ஊழியர் பிரமானங்களை உருவாக்குதல்

9. சுசகன கடன்திட்டத்தினை செயற்படுத்துவது ______________________ ஆகும்.
   1. மக்கள் வங்கி 2. சணச வங்கி 3. தேசிய சேமிப்பு வங்கி
   4. மத்திய வங்கி 5. தேசிய சேமிப்பு வங்கி

10. உற்பத்தி கட்டுப்படுத்தல் முறையொன்று
   1. ஊழியர் கட்டுப்பாடு 2. இருப்பு கட்டுப்பாடு
   3. நிதிக் கட்டுப்பாடு 4. வரவுசெலவு கட்டுப்பாடு
   5. தகவல் கட்டுப்பாடு

11. பண்டமொன்றின் உத்தரவாத சீட்டில் உள்ளடங்க வேண்டிய பிரதான விடயம் அல்லாதது
   1. பண்டத்தினை இனம்காட்டும் அம்சங்கள்
   2. உத்தரவாதம் வழங்கும் கால எல்லை
   3. உற்பத்தியின் உள்ளீடுக்கலவை
   4. கொள்வனவு திகதி மற்றும் உத்தரவாதம் முடிவுறும் திகதி
   5. உத்தரவாதத்தின் தன்மை

12. பண்டம் மற்றும் சேவையோடு தொடர்புடைய உதிரிப்பாகங்கள் தொடர்பான சந்தை
   1. மொத்த சந்தை 2. தேவை சந்தை
   3. உற்பத்தி சந்தை 4. காரணி சந்தை
   5. மேற்கூறிய எவையுமன்று

13. உற்பத்தி கட்டுப்பாட்டு தொடர்பில் தொடர்புறாத துறை யாது?
   1. இயந்திர கட்டுப்பாடு 2. தரக்கட்டுப்பாடு
   3. கிரய கட்டுப்பாடு 4. ஆராய்ச்சி அபிவிருத்தி கட்டுப்பாடு
   5. செயல் நிறைவேற்ற கட்டுப்பாடு

14. இலத்திரனியல் வணிகம் மற்றும் பிணைப்புடைய வணிகம் ______________ ஆகும்.
   1. தேவைகளுக்கான சந்தை 2. உற்பத்தி சந்தை
   3. சந்தை வெளி 4. இலத்திரனியல் சந்தை
   5. நிலையான சந்தை

15. நியமனக்கடிதம் (Appointment Letter) என்பதற்கான சரியான கூற்று
   1. ஊழியருக்கு தொழிலை பொறுப்பேற்கும்படி அனுப்பும் கடிதம்
   2. தொழில் உடன்படிக்கை
   3. தொழில் உடன்படிக்கையில் தொழில் தருணர் தரப்பிலான ஆவணம்
   4. தொழில் உடன்படிக்கையில் தொழிலாளரின் உரிமை, பொறுப்புகளை கூறும் ஆவணம்
   5. தொழில் தொடர்பான விஷேட விதிகளை உள்ளடக்கிய ஆவணம்

16. தொழிலாளர்களை ஆட்சேர்க்கும் முறையல்லாதது எது?
   1. நேர்முகப்பரீட்சை 2. தொழில் முகவர் நிறுவனங்கள்
   3. தொழில் வெப்தளம் 4. தொழில் சந்தை
   5. தொழில் விளம்பரங்கள்

17. வணிகத்திட்டமொன்றின் கீழ் உள்ளடக்கவேண்டிய பிரதான காரணியல்லாதது
   1. கொடுக்கல் வாங்கல் செய்வோர் 2. தெரிவான முறையாக இருத்தல்
   3. இலக்குகள் 4. கட்டளை சுருக்கம்
   5. மேற்கூறிய எவையுமன்று

18. பெரும்பாலும் தயாரிக்கப்படும் வணிகத்திட்டங்களிலிருந்து (Business Plan) அவதானிக்கையில் அவற்றில் உள்ளடக்க தேவையற்ற விடயமாக கருதக்கூடியது
1. அறிமுகம் 2. வியாபாரத்தின் தன்மை
3. சந்தைப்படுத்தல் திட்டம் 4. போட்டி நிறுவனம் தொடர்பான கூற்று

19. தொழில் விவரணம் ஒன்றில் உள்ளடங்காத விடயம்
1. தொழில் தொடர்பான கருமங்கள் 2. தொழில் குறிக்கோள்
3. தொழிலுக்கு தேவையான ஊழியர் பண்புகள் 4. தொழிலின் தன்மை
5. மேற்கூறிய எவையுமன்று

20. நிதி கருவிகளின் முதிர்வு காலத்தினடிப்படையில் நிதி சந்தையை எவ்வாறு வகைப்படுத்த முடியும்.
1. கடன் சந்தை, உரிமை கருவிகளின் சந்தை 2. உடன் சந்தை, பரிமாற்று சந்தை
3. முதன்னிலை சந்தை, இரண்டாம் நிலை சந்தை 4. ஏல சந்தை, இடைநிலை சந்தை
5. பணச்சந்தை, மூலதன சந்தை

21 – 30 வரையிலான வினாக்களுக்கு சரியான பதங்களை பயன்படுத்துக.

21. நிலவும் வணிக அமைப்பில் புதிதான வியாபார நடவடிக்கையினை அறிமுகப்படுத்தல் _______ ஆகும்.

22. எல்லா ஊழியர்களையும் சமனாக மதிக்கும் தலைவர் __________________ தலைவர் ஆவார்.

23. இலங்கைக் குடிசைக்கைத்தொழில் சபையால் ______________ மற்றும் _________________ கொண்டு நடாத்தப்படுகிறது.

24. வணிகங்களை சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களை வகைப்படுத்தும் பண்பியல் காரணியானது __________________ ஆகும்.

25. பங்குசந்தையில் பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்று அதன் விதிகளை மீறி செயற்படுமாயின் அக்கம்பனி __________________________ இல் பட்டியலிடப்படும்.

26. முயற்சியாளாரின் முக்கிய காரணிகள் மூன்றும் 1 _____________________, 2 _____________, 3 ________________ ஆகும்.

27. அமைப்பொன்று உருவாக்கிய இலக்குகளை அடைவதற்கென உருவாக்கும் செயற்திட்டத்தினை தெரிவு செய்யும் கருமம் _________________________ ஆகும்.

28. போட்டிப் பொருட்களின் விலையினையும் கருத்திற் கொண்டு குறித்த பொருளுக்கு விலையிடுகின்ற முறை _________________________ ஆகும்.

29. இயந்திர, உபகரணம் மற்றும் கிரயக் கட்டுப்பாடு போன்ற தகவல்களை கொண்டது வணிகத்திட்டத்தின் _______________________________ இல் ஆகும்.

30. உற்பத்தியினை குறைந்த விலையில் விற்க வேண்டும் என வலியுறுத்தும் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு ______________________ ஆகும்.

31 - 40 வரையான வினாக்களுக்கு குறிப்பானதும்,சுருக்கமானதுமான விடை தருக.

31. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச்சட்டம் மற்றும் உணவுச்சட்டம் என்பவற்றுக்கிணங்க பொதியொன்றில் உள்ளடங்கிய பொருட்களின் நிறையினை வெளிப்படுத்த வேண்டிய 03 முறைகளும் எவை?
1. ______________________________________
2. ______________________________________
3. ______________________________________

32. விற்பனை மேம்படுத்தல் (Sales Promotions) என்றால் என்ன?
______________________________________________________________
______________________________________________________________

33. இலங்கை பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 02 நோக்கங்களை குறிப்பிடுக?
______________________________________________________________
______________________________________________________________

34. மேம்படுத்தலின் பிரதான நோக்கங்கள் 03 உம் எவை
1. ______
2. ______
3. ______

35. முதலீட்டு வழியொன்றை தெரிவு செய்யும்போது கருத்திற் கொள்ளும் 03 காரணிகளை தருக.
1. ______
2. ______
3. ______

36. தொழில் ஆட்சேர்த்தல் (Recruitment) தொடர்பில் பயன்படுத்தப்படும் 03 உபாயங்களை குறிப்பிடுக.
1. ______
2. ______
3. ______

37. 1941 27ம் இலக்க வேதன நிர்ணய சபை சட்டத்தின் நோக்கம் யாது?
______
______

38. கணக்கீட்டு விகிதங்கள் தொடர்பில் அக்கறை கொள்ளும் 03 தரப்பினரை குறிப்பிடுக.
1. ______
2. ______
3. ______

39. மிகை மூலதனம் (Over Capitalization) என்றால் என்ன?
______
______

40. (Ringi) றிங்கி முறை என்றால் என்ன?
______
______

## நாம் எதற்கும் சளைப்பதில்லை...

எமது உன்னத முயற்சிக்கு உங்களின் மகோன்னத பாராட்டுக்களும், ஆதரவுகளும் சிறப்பாக வலு சேர்க்க, எமக்கு எதிரானவர் சிலரின் செயற்பாடுகள் எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. சில தனியார் கல்வி நிறுவனங்களில் எமது புத்தகத்தில் வெளியாகும் உன்னத ஆக்கங்களை தமது பெயரில் வழங்கி மார்தட்டிக் கொள்கின்றனர். அத்தகைய தரப்பினருக்கு நாட்டின் காணப்படும் சட்டத்தையும், ஒருகணம் ஞாபகப்படுத்த வேண்டும். புலமைச்சொத்து கோலைசட்டம் (Intallectual Property Act) கீழ் இது தண்டனைக்குரிய குற்றம் என்பதை ஞாபகபடுத்துகிறேன். மேலும் எமது இதழை கொள்வனவு செய்யக்கூடாது என மாணவரை வலியுறுத்தும் தனியார் கல்வி நிறுவனங்களும் தமது அனாமதேய தொடர்பாடலை மேற்கொண்ட வண்ணம் உள்ளன. எனினும் அவர்களுக்கு நாட்டில் கருத்து சுதந்திரம், செவி மடுக்கும் உரிமை பற்றி தெரியாது போலும், உங்களின் ஆதரவால் எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளக்கூடிய திறன் எமக்கு போஷிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் பெருவாரியான ஆதரவை வழங்கி தைரியப்படுத்தும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர், ஆசிரியர் மற்றும் எமது வாசகர்களுக்கும் எமது நன்றிகள். சிறு சவால்களை கண்டு அஞ்சாமல் தொடர்ந்தும் அறிவுத்தேடல் உங்களது தேடல் தாகத்தை தணிக்கும்.

**இதழாசிரியர்**

# இலங்கை CIMA மாணவர்களினால் CIMAவின் சர்வதேச பரிசில்கள் வெல்லப்பட்டுள்ளன

இலங்கையின் CIMA மாணவர்களான சிரோமி அலி மற்றும் ஹசீர் ஸபீக் ஆகிய இருவரும் அண்மையில் நடந்து முடிந்த பரீட்சையில் தமது பெறுபேறுகளால் இலங்கை மாணவர்களின் தரத்தினை மீண்டுமொருமுறை நிரூபித்துள்ளனர். இவர்கள் இருவரும் நடந்து முடிந்த பரீட்சையில் சர்வதேச பரிசில்களை வென்றுள்ளனர். பல்தேசிய கம்பனிகளிலும் கூட்டு நிறுவனங்களிலும் தம்மையொரு உறுப்பினராக இணைத்துக்கொள்ள வேண்டும் என எண்ணும் இன்றை சிரோமி அலி, ஹசீர் சபீக் போன்ற இளைஞர் யுவதிகளுக்கு உலகதரம் வாய்ந்த முகாமைக் கணக்கீட்டு தொழில்சார் தகைமையை CIMA வழங்குகின்றது. மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்படி தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பரந்து காணப்படும் பல்வேறு நிறுவனங்களிற்கு சிறந்த தலைமையதிகாரிகளையும் உயர்மட்ட ஊழியர்களையும் உலகின் மிகப்பெரிய தொழிற்சார் முகாமைக் கணக்கீட்டு நிறுவனமான CIMA வழங்கியுள்ளது. இதன் மூலம் உயர் தகைமையுடைய முகாமைத்துவக் கணக்காளர்களை உருவாக்குகின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

சிரோமியும் ஹசீர் பெறுமதிமிக்க தமது உலகபரிசில்களை வென்றதில் மகிழ்ச்சியடையும் வேளையில், உலக தொழில்சார் முகாமைத்துவக் கணக்கீட்டு நிறுவனமான CIMA அவர்களிருவரினதும் திறமையினை மெச்சுகின்ற அதேவேளை அவர்களின் தரமான உள்நாட்டு ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்வியானது அவர்களை உலகில் உள்ள சிறந்த மாணவர்களுள் தம்மை அடையாளப்படுத்த உதவியது என்பதையும் அங்கீகரிக்கின்றது.

சிரோமியும் ஹசீரும் தமக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய விரிவுரையாளர்களுக்கும் அவர்களின் கல்வி நிறுவனங்களுக்கும் தமது பெறுபேறு மூலம் கௌரவப்படுத்தியுள்ளனர். ஹசீர் தமது பெறுபேறு தொடர்பாக கூறும்போது, “தனிப்பட்ட முறையில் Achievers கல்வியாக விரிவுரையாளர்களான Mr. Krishkumar மற்றும் Mr. Dellon போன்றோர் வழிகாட்டியமையே இவ்வாறு ஒரு பெறுபேற்றைப் பெற உதவியது” எனக் கூறினார். சிரோமி குறிப்பிடும் போது Virtual Business Schoolன் விரிவுரையாளர் Mr. Gajandra Liyanaarachchi வழங்கிய தனிப்பட்ட கவனமும் வழிகாட்டலுமே தமது வெற்றிக்கு உதவியது என்றார். இவர்களிருவரினதும் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்டும், மன்னர் உலகப்பரிசில்களை வென்றவர்களையும் கொண்டு இலங்கையில் CIMA கல்வி துறையானது உலகத்தரம் வாய்ந்ததாகவுள்ளது என உறுதியாக கூறமுடியும்.

இளம் யுவதியான சிரோமி தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது வியாபார முகாமைத்துவ இளமானிப்பட்டத்தினை முதற்தர வகுப்பில் சித்தியடைய தனது முழுமையான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். அவர் மேலும் முதுமானிப்பட்டத்தினையும் முடிக்க வேண்டும் என அவர் கொண்டுள்ளதுடன் ஒரு முயற்சியாளராக நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் பங்காளியாக வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

ஹசீர் தனது எதிர்கால திட்டம் பற்றி குறிப்பிடும் போது தானும் வியாபார முகாமைத்துவ முதுமானியை முடிக்க வேண்டும் எனவும் உலகத்தரம் வாய்ந்த நிறுவனமொன்றில் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரியாகவும் வேண்டும் என கூறினார். பல்கலைக்கழக கல்வித்தகைமைக்கும் CIMA கற்கைக்கும் இடையிலான வேறுபாடு பற்றி சிரோமியும் ஹசீரும் குறிப்பிடும் போது CIMA காலத்திற்கு காலம் புதிய பரிமானத்திற்கு ஏற்ப தமது பாடவிதானத்தினை மீளமைப்பது சர்வதேச ரீதியில் வாய்ப்புக்களை உருவாக்குகின்றது என்றார். CIMA வானது உலகில் பெரிய வலையமைபைக் கொண்ட தொழிற்சார் அமைப்பாக காணப்படுகின்றது. இதன் காரணமாக CIMA வில் இணையும் மாணவர்கள் தேசிய மற்றும் சர்வதேசிய ரீதியாக எண்ணற்ற வாய்ப்புக்களைப் பெறக் கூடியதாய் உள்ளது எனவும் குறிப்பிடுகின்றனர்.

CIMA வானது உலகலாவிய ரீதியில் பொறுப்பு வாய்ந்த தலைமை நிறைவேற்று அதிகாரிகளை தோற்றுவித்துள்ளது. CIMA வானது காலத்திற்கு காலம் தனது நோக்கங்களையும் செயற்பாடுகளையும் உலக வியாபார பரிமானங்களிற்கு ஏற்ப அபிவிருத்தி செய்தும் செயற்படுத்தியும் வந்துள்ளது. அண்மையில் ஏற்பட்ட சர்வதேச நிதிச்சூழல் அபிவிருத்திகளிற்கு ஏற்ப CIMA வும் தனது கணக்கீடு மற்றும் முகாமைத்துவ பாடவிதானங்களிலும் அபிவிருத்தியை செய்துள்ளது. அந்த வகையில் CIMA வானது எந்தவொரு சவாலையும் எதிர் கொள்ளக்கூடிய தலைமைத்துவ பண்புடைய உயர் தொழிற்தகைமையாளர்களை உருவாக்கியுள்ளது. CIMA வின் புத்தாக்க அனுகுமுறையானது உலகின் நிதி நிலைமைகளின் சவால்களினை எதிர் கொள்ளக்கூடியளவில் உள்ளது, அந்த வகையில் CIMA வின் தலைமையில் சிரோமி, ஹசீர் போன்றோர் உலக வியாபார தகைமைகளைப் பெற்றுள்ளதுடன் இவர்களைப் போன்றோர் இலங்கை வியாபார சமூகத்தினை நிச்சயமாக சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்வார்கள்.



சிரோமி அலி



ஹசீர் ஸபீக்



## நேரடிக்கலந்துரையாடல்



சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராசிரியர்
**டெனி அத்தபத்து**
பொருளியல்துறை,
றுகுணு பல்கலைக்கழகம்

கடந்த இதழில் பேராசிரியர் அவர்கள் பொருளாதார வளர்ச்சி அதனை எவ்வாறு எய்துதல் அதற்கான முக்கிய இரு காரணிகளில் ஒன்றான காரணி கிடைப்பனவு பற்றியும் தெளிவாக கலந்துரையாடியிருந்தார். இதன் தொடர்ச்சியாக இம்முறை **காரணிகளின் உற்பத்தித்திறன்மட்டம்** பற்றி தெளிவாக அவரோடு கலந்துரையாடிய விடயங்கள் பற்றி ஆக்கமே இது. இங்கு இவர் சொத்துக்களின் சொத்துக்களின் உற்பத்தித்திறன் மட்டத்தினை அதிகரிக்கக்கூடிய வழிவகைகள் பற்றி பல புதிய விளக்கங்களையும் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- **இதன் முக்கியத்துவம்**
- **இதனை தீர்மானிக்கும் காரணிகள்**
- **அதிகரித்து கொள்ளக்கூடிய வழிவகைகள்**
- **அதிகரிப்பதால் ஏற்படும் அனுகூலங்கள்**

# காரணிகளின் உற்பத்தித்திறன்

**காரணிகளின் உற்பத்தித்திறன் மட்டம்** என்பது பொருளியல் விஞ்ஞானத்தில் முக்கியம் பெறும் ஒரு எண்ணக்கருவாகும். ஆரம்பந்தொட்டு இது தொடர்பில் பல பொருளியல் அறிஞர்கள் இது தொடர்பில் வலியுறுத்தியுள்ளனர். சில காரணங்களினாலேயே இவ்வெண்ணக்கரு முக்கியம் பெறுகிறது.

1. பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் ஒரு பிரதான காரணி என்ற வகையில்
2. நபர்களின் வாழ்க்கைத்தரத்தின் வேறுபாட்டினை தெளிவாக விளக்குவதற்கு
3. நாடுகளுக்கிடையில் காணப்படும் பொருளியல் ரீதியான பிரச்சினைகளை இனம் காண்பதற்கும், விளக்குவதற்கும்.
4. சர்வதேச சிறப்புத்தேர்ச்சியை விளக்குவதற்கு

போன்ற காரணங்களால் இது முக்கியம் பெறுகிறது.

இவ்வெண்ணக்கருவானது காரணிகளின் பயன்பாட்டின் போதான வெளியீட்டு மட்டம் தொடர்பில் விளங்குகிறது. ஏதேனும் உள்ளீடொன்றின் மூலம் கிடைக்கும் வெளியீட்டின் அளவு இதன் மூலம் கணிப்பிடப்படுவதோடு, உயர்ந்த உற்பத்தி திறன் இருப்பதை நாம் ஏதேனும் **உள்ளீடொன்றின் மூலம் வெளியிடப்படும் வெளியீட்டின் அளவு அதிகரித்தலாகும்** என இலகுவாக கூறமுடியும். உற்பத்தித்திறன் அதிகரிக்கும்போது அலகொன்றின் கிரயம் குறையும் என்பது தெரிந்ததே.

$$\text{உள்ளீடொன்றின் உற்பத்தித் திறன்} = \frac{\text{உற்பத்தி அளவு/ வெளியீட்டு அளவு}}{\text{உள்ளீட்டு அளவு}}$$

ஊழியம் தொடர்பில், ஊழியர் எண்ணிக்கையை பயன்படுத்தி, அதன் விளைவாக உற்பத்தி எத்தனை அலகுகள் மேற்கொள்ளப்படுகிறது என கண்டறியவும் முடியும்.

$$\text{ஊழியமொன்றின் உற்பத்தித் திறன்} = \frac{\text{வெளியீட்டின் அளவு}}{\text{ஊழியர் எண்ணிக்கை}}$$

மேற்குறிப்பிட்டது ஊழியமொன்றின் உற்பத்தித்திறனை கணிப்பிடும் முறை ஆகும்.

சாதாரண உற்பத்தி செயற்பாடொன்றிலே இத்தகைய முறைகளில் உற்பத்தித்திறன் மட்டத்தை அளவிட்டுக்கொள்ள முடிந்த போதிலும், பாரிய உற்பத்திகளில் இதனை பிரயோக ரீதியில் உபயோகிப்பது கடினம். இதற்காக பெருவாரியாக நடைமுறையில் பயன்படுத்தப்படுவது பெறுமதி ரீதியான கணிப்பீடாகும். வெளியீட்டின் பெறுமதியை, ஊழியர் எண்ணிக்கையால் வகுத்து ஊழியர் உற்பத்தித்திறன் குறிப்பிடப்படுகிறது.

$$\text{ஊழியமொன்றின் உற்பத்தித்திறன்} = \frac{\text{வெளியீடுகளின் பெறுமதி}}{\text{ஊழியர் எண்ணிக்கை}}$$

பொருளாதாரங்களில் வெவ்வேறு துறைகளில் இத்தகைய முறையில் உற்பத்தித்திறனாது கணிக்க முடிகிறது. கைத்தொழில் துறை, விவசாயத்துறை, போன்றவற்றின் உற்பத்தித்திறன் மட்டத்தினையும் தனித்தனியாக கணிப்பிட முடியும்.

உற்பத்தித்திறன் மற்றுமொரு பிரதான விடயம் இது உற்பத்தி கிரயத்தோடு நேரடியாக தாக்கம் புரிகின்றமை ஆகும். அதாவது உற்பத்தித்திறன் மட்டம் அதிகரிப்பதால் உற்பத்தி கிரயம் நேரடியாக குறையும் இதனால் உற்பத்தி நிறுவனத்தின் போட்டித்தன்மை, நாடொன்றின் போட்டித்தன்மை அதிகரிப்பதில் முக்கியம் பெறும். ஒரு எண்ணக்கருவாக இது காணப்படுவதோடு உற்பத்தித்திறன் அடிப்படையிலேயே சர்வதேச ரீதியில் ஒரு நாடு ஏனைய நாடுகளுடன் போட்டியிடமுடியுமா? இல்லையா? என்பதும் தீர்மானிக்கப்படுகிறது. இங்கு அந்நாடுகளின் வளங்களின் அளவு பார்க்கப்படுவதில்லை. உற்பத்தித்திறன் மட்டமே அவதானிக்கப்படுகிறது.

இவ்வெண்ணக்கருவினை தெளிவுபடுத்தும்போது உற்பத்தித்திறன் எனும் எண்ணக்கருவையும் குறிப்பிட்டாக வேண்டும். உற்பத்தித்திறன் மாற்றங்களை இனம்காணும் போது, பயன்படுத்தும் ஒரு எண்ணக்கரு என்ற வகையில் இது மிக முக்கியமானதொன்றாகும். நீங்கள் ஒரு நாட்டின் இயங்குகின்ற உற்பத்தி, மற்றும் உண்மையான உற்பத்திக்கு இடையிலான வித்தியாசத்தினை வெளியிட்டு தேசிய கணக்கீட்டு விதியில் கற்றிருப்பீர்கள். உற்பத்தித்திறன் தொடர்பிலும் பயன்படுத்தப்படுவதும் இவ்வாறே ஆகும். இங்கு அடிப்படையாக கொள்ளப்படுவது ஒரு நாட்டின் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்காக, ஏதேனும் உள்ளீடொன்றின் வெளியிடக்கூடிய வெளியீடு மற்றும் அவ்வுள்ளீடானது உண்மையில் வெளியீடு செய்த வெளியீட்டுக்கும் இடையிலான வித்தியாசம் ஆகும். உண்மையான உற்பத்தி, இயளளவிலும் குறைவாக காணப்படின் அது பாதகமான ஒரு இலட்சணமாகும். இதிலிருந்து வளங்களின் உற்பத்தித்திறன் மட்டமானது இடம்பெறவில்லை என வெளிப்படுத்தப்படுகிறது. உண்மையான உற்பத்தி இயளளவிற்கு சமனாகவிருப்பின் அது வளங்களின் உற்பத்தித்திறன் குறித்து நிற்கிறது. நாடுகள் இந்த உற்பத்தித்திறன் வேறுபாட்டினை அளவிடுவதற்கும், இதனூடாக அத்தகைய பிரச்சனைகளுக்கு

தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கும், முயற்சிக்கின்றன. **பெரும்பாலும் ஊழியர் உற்பத்தித்திறன் தொடர்பான ஊக்குவிப்பு (Motivation) மற்றும் காரணிகள் நேரடியாக தொடர்புபடுகின்றன.** முழுமையாக ஈடுபடாமை என்பதும் தமது முழுமையான திறனை வெளிப்படுத்துவதை குறைத்து கொள்ளுதலை குறிக்கிறது. இது மட்டுமன்றி மேலும் பல வளங்கள் உற்பத்தித்திறன் வேறுபாடு வளர்ச்சியடைந்து செல்லுதல் தொடர்பில் தாக்கமுடையன.

- திறன்களின் குறைபாடு ஏற்படல்.
- வணிகங்களை நடாத்தி செல்லுதல் தொடர்பில் வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் தேவையற்ற சட்டங்கள் அமுல்படுத்தப்படல்.


அரசாங்களின் நடவடிக்கைகளின் காரணமாக வணிக செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுத்தப்படுகிறது. அதிகாரி வாதம்/திணைக்கள வாதமானது வணிக செயன்முறைக்கு பல்வேறு தடைகளையும் ஏற்படுத்துகிறது, பல்வேறு அனுமதி பத்திரங்கள், சட்டதிட்டங்கள், வரி அறவிடுதல் போன்ற பல்வேறு வழிகளில் அரசு தலையிடும்போது இவற்றையே அதிகாரிவாதம்/திணைக்கள ·வாதம் என்கிறோம். இவை தேவையற்ற வகையில் வணிகங்களில் ஆதிக்கம் செலுத்துவதால் வணிகங்கள் செயற்திறனற்று போகக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. அரசாங்கம் தேவையற்ற ரீதியில் வணிகங்களில் தலையிடுவதால் (Red Tapes) காலமாதம் ஏற்படல், உற்பத்தி கிரயம் அதிகரிப்பு என்பன ஏற்பட முடியும்.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான முதலீடு மிகவும் குறைந்த அளவில் காணப்படல்**

இலங்கை உட்பட மூன்றாம் மண்டல பல நாடுகளில் மிகவும் குறைந்த அளவிலேயே மேற்கூறிய முதலீடு தொடர்பில் கருத்திற்கொள்ளப்படுகிறது. சர்வதேச போட்டியினை எதிர்கொள்வதில் உயர்ந்த இடத்தில் காணப்படும் ஸ்விர்சர்லாந்து போன்ற நாடுகளில் அரசதுறை மட்டுமன்றி தனியார் துறையும் ஆராய்ச்சி, அபிவிருத்தி தொடர்பில் பாரிய முதலீடுகளை மேற்கொள்கிறது. இதனூடாக புதிய பொருட்கள், புதிய சந்தைகள், புதிய உற்பத்தி முறைகளை கட்டியெழுப்ப முடிகிறது. ஆராய்ச்சி அபிவிருத்தி தொடர்பான முதலீடு குறைபாடுடையதாக இருக்குமாயின், உற்பத்தியானது பாரம்பரிய முறைகளிலும், காலம்கடந்த முறைகளிலுமே தங்கியிருக்க வேண்டியிருக்கும். போட்டி சூழலை எதிர்கொள்வதற்கு இதனூடாக கிடைக்கும் உற்பத்தித்திறன் போதுமானதல்ல.

**புதிய இயந்திர உபகரணங்களுக்கான முதலீடு மிகக்குறைவாக இருத்தல்.**

சந்தையில் ஏகாதிபத்திய நிலை, பூரண போட்டியற்ற தன்மை காணப்படின் உற்பத்தித்திறன் அதிகரிப்பதற்கு இது தடையாக அமைகிறது. ஏகாதிபத்திய வணிக சூழ்நிலையொன்றில் சந்தையொன்றின் பாதுகாக்கப்பட்ட சூழ்நிலை உருவாகிறது. இதன் காரணமாக அந்நிறுவனங்கள் இலாபம் தொடர்பில் திருப்தியடைகின்றன. இதனால் அந்நிறுவனங்களுக்கு புதிய தொழில்நுட்பங்கள் தேவையற்ற சூழ்நிலை, ஆராய்ச்சி தொடர்பில் வளங்களை ஒதுக்க வேண்டிய தேவை இன்மை, புதிய இயந்திர உபகரணங்கள் தேவையற்ற சூழ்நிலை, உற்பத்தி திறனை அதிகரித்து கொள்ள வேண்டும் என்ற உத்வேகமின்மை போன்ற விடயங்கள் அழுத்தமாகவும், இறுக்கமாகவும் காணப்படும். இது ஒரு நாடு தொடர்பில் விரும்பதகாத ஒரு



விடயமாகும்.

**அதிகரித்த உற்பத்தி திறனின் அனுகூலங்கள் எவை?**

- உற்பத்தித்திறன் அதிகரிப்பின் விளைவாக பல்வேறு நன்மைகளை ஒரு நிறுவனம் அல்லது நாடு பெற்றுக் கொள்கிறது.
- உற்பத்தி கிரயம் வீழ்ச்சியடைதல்.
- போட்டித்தன்மையினை இலகுவாக எதிர்கொள்ளக்கூடியமை.
- உச்ச இலாப எல்லையை அனுபவிக்கக்கூடியமை உற்பத்தி கிரயம் இழிவாக்கப்படுவதனூடாக உச்ச பட்ச இலாபமொன்றை அனுபவிக்க முடியும்.
- தரமான உற்பத்திகளை பெறக்கூடியமை
- உயர்ந்த அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பு கிடைத்தல்.

**உற்பத்தித்திறனை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய வழிவகைகள்**

இது தொடர்பில் நாடுகள்/நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய பல நடைமுறைகள் உள்ளன. அவற்றில்,

- கல்வி, மற்றும் பயிற்சி திட்டங்களில் அதிக முதலீடுகளை ஏற்படுத்தல்.
- உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்தல். இதன் மூலம் ஒரு நாட்டிற்கு புதிய தொழில்நுட்பங்கள், புதிய மூலதனப்பொருட்கள் என்பவற்றை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புண்டு.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (Research and Development) முதலீடுகளை அதிகரித்தல்**

அரசாங்கமானது அரசதுறையிலும், தனியார்துறையிலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். உதாரணம் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வரிச்சலுகை வழங்குதல்.

**முகாமைத்துவ துறை மற்றும் முயற்சியாண்மைகளை உயர்ந்த தரத்திற்கு கொண்டுவருதல்**

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் பிரதான பிரச்சினை யாதெனில் அரச வணிகங்களில் காணப்படும் செயற்திறனற்ற, ஊழல் நிறைந்த முகாமைத்துவமாகும். இங்கு தீர்மானம் எடுத்தலின்போது அவ்வவ்துறைகளில் சிறப்பாக பயிற்றப்பட்ட முகாமைத்துவம் சார் வல்லுனர்கள் இல்லாமையும் குறைபாடாகும். இலங்கையில் பல அரச முயற்சிகள் நட்டத்தில் இயங்குகின்றமை நீங்கள் அறிந்ததே, இதற்கு காரணம் செயற்திறனற்ற முகாமையே ஆகும்.

- மூலதனங்களின் முதலீடுகளை அதிகரித்தல்
- வணிகங்கள் தொடர்பான தடைகள் மற்றும் அரசத்தலையீட்டை குறைத்தல்
- சிறு வணிகங்களை ஊக்குவித்தல்
- ஏகாபத்திய சூழ்நிலை உருவாவதை தடுத்து பூரண போட்டிநிலையை உருவாக்குதல்

**உற்பத்தி திறனை அதிகரிக்கும் பிரதான சக்திகள்**

1. புத்தாக்கம்

அறிவியல் ரீதியாக புதியவற்றை உருவாக்குதலே புத்தாக்கம் ஆகும். புதிய அணுகுமுறைகள், (அதாவது புதிய செய்முறைகள்) புதிய உற்பத்திகள் போன்றவற்றை குறிப்பிட முடியும்.


2. சமூக விழுமியங்களும், ஒழுக்க நெறிகளும்
3. சிறப்பு தேர்ச்சி
4. போட்டி
5. முதலீடு
6. முயற்சியாண்மை

போன்றவற்றின் வினைதிறனாந்தன்மையை அதிகரிப்பதானது உற்பத்தி திறனை அதிகரிப்பதில் நேரடி பங்கு வகிக்கும் பிரதான சக்திகளாகும்.

**முற்றும்**

**நேர்காணல் :**


இதழாசிரியர்
**பா. பானுசந்தர்**



# பொருளியல் பாடம் தொடர்பான பரீட்சைக்கான கண்ணோட்டம்

| | | |
|---|---|---|
| | விலை செலுத்தாத போது வாடிக்கையாளர் ஒருவரை கொள்வனவிலிருந்து விலக்கப்பட முடியும் (Excludable). | விலை செலுத்தாவிடினும் வாடிக்கையாளர் ஒருவரை விலக்க முடியாது (Non Excludable). |
| ஒருவரின் நுகர்வில் மற்றையவரின் நுகர்வு பாதிக்கப்படல் (Rival) | தனியார் பண்டம் (Priate Goods) | பொது வழங்கல் (Common Resources) |
| | அரைகுறை பொது பண்டம் (Semi Public Goods) | பொதுப்பண்டம் (Public Goods) |

### கேள்வி நெகிழ்ச்சியை கணிப்பிடும் மாற்று வழிமுறை




### விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின் நடைமுறை பயன்பாடுகள்

- கேள்வித்தொகையினையும், கேள்வி இழப்பினையும் கண்டறிதல்.
- பதிலீட்டுப்பண்டம், இணைப்புபண்டம், இழிவுப்பண்டம் என்பவற்றை வேறுபடுத்தல்.
- பதிலீட்டு விளைவின் தாக்கத்தை கண்டறிதல்.
- வியாபார ஒப்பந்தங்களில் ஈடுபடுதலின் போது கவனித்தல்.
- உற்பத்தியாளர், வாடிக்கையாளர் பொருளொன்றின் வரியினை தாங்குகின்ற அளவு.
- அரசு வரிவிதிக்கக்கூடிய பொருட்களை தெரிவு செய்தல்.
- சந்தையின் போட்டித்தன்மையை கண்டறிந்து கொள்ளல்.
- ஒரே வணிகமுயற்சியில் ஈடுபடும் பல்வேறு நிறுவனங்களையும் இணம்கண்டு கொள்ளல்.

### நெகிழ்ச்சியின் பிரயோக ரீதியில் கேள்வித்தொகை இழப்பு

| | | |
|---|---|---|
| விலைசார் கேள்வி நெகிழ்ச்சி = -2.5<br>நிலவும் கேள்வித்தொகை = 1000<br>நிலவும் விலை = 10/-<br>விலை அதிகரிப்பு = 1/- | $e^d = \frac{\Delta Q^d}{\Delta P} \times \frac{P}{Q}$<br>$-2.5 = \frac{\Delta Q^d}{1} \times \frac{10}{1000}$ | $-2.5 = \frac{\Delta Q^d}{1} \times \frac{1}{100}$<br>$-250 = \Delta Q^d$<br>250 அலகுகள் கேள்வி வீழ்ச்சி |

### பொருட்களின் ஒப்பீடும் நெகிழ்ச்சியும்

- பதிலீட்டுப் பொருட்களின் நெகிழ்ச்சி நேர்க்கணிய நெகிழ்ச்சியாகும்.
- இணைப்புபண்டங்களின் நெகிழ்ச்சி எதிர்க்கணியமாகும்.
- அத்தியாவசியப்பண்டங்களுக்கு ஒன்றுக்குறைந்த நேர்க்கணிய வருமான நெகிழ்ச்சியாகும்.
- ஆடம்பர பண்டம் தொடர்பில் வருமான நெகிழ்ச்சி ஒன்று கூடிய நேர்க்கணிய வருமான நெகிழ்ச்சியாகும்.
- இழிவுப்பண்டம் தொடர்பில் வருமான நெகிழ்ச்சி எதிர்க்கணியமாகும்.

**நெகிழ்ச்சி தொடர்பான மார்டின் லர்னர் கோட்பாடு**

(e + m) } 1

வாடிக்கையாளர் தாங்கும் வரி = $\frac{e^s}{e^s - ed} \times t$

விலைசார் கேள்வி நெகிழ்ச்சி = 0.5

விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி = 1.5

அலகொன்றின் வரி = 10/-

$$\frac{e^s}{e^s - e^d} \times 10/-$$

$$\frac{1.5}{1.5 - (-0.5)} \times 10$$

$$= 7.50$$



உற்பத்தியாளர் தாங்கும் வரி = $1 - \frac{es}{e^s - e^d} \times t$

விலைசார் கேள்வி நெகிழ்ச்சி = - 0.5

விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி = 1.5

அலகொன்றின் வரி = 10/-


$$= 1 - \frac{es}{e^s - e^d} \times t$$

| **தேசிய வருமானத்தின் பெருக்கி செயற்பாடு** | **தேசிய வருமானத்தின் பெருக்கி செயற்பாடு கணிப்பு** | **பாதீட்டு பெருக்கி** |
|---|---|---|
|  |  | B= T-G<br>0= T-G<br>T=G<br>$\Delta Y = \frac{1}{1-b}(\Delta G) + \frac{-b}{1-b}(\Delta T)$<br>$\Delta Y = \frac{1}{1-b}(\Delta G) + \frac{-b}{1-b}(\Delta$<br>$\Delta Y = \left[\frac{1}{1-b} + \frac{-b}{1-b}\right](\Delta G)$<br>$\Delta Y = \left[\frac{1-b}{1-b}\right](\Delta G)$ |

**பகிரங்க சந்தையில் இடம்பெறும் நடவடிக்கைகள் கொண்டிருக்கும் நடைமுறைகள்**

1. வட்டிவீத செல்வழி
2. திறைசேரி உண்டியல் முதல்தர ஏலம்
3. தற்காலிக திரவத்தன்மை வசதி
4. நிலையான அடிப்படையில்/நீண்டகால அடிப்படையில் திறைசேரி உண்டியல் விற்றல்/வாங்குதல்


**வட்டிவீத செல்வழி**
**(Interest Rate Corridor)**




| | | | | |
|---|---|---|---|---|
| உண்மையான உயர்வலு பணத்தொகை | > | கணிப்பிடப்பட்ட உயர்வலுப் பணத்தொகை | → | செல்வழி மேல்நோக்கி திருத்தப்படுகிறது |
| உண்மையான உயர்வலு பணத்தொகை | < | கணிப்பிடப்பட்ட உயர்வலுப் பணத்தொகை | → | செல்வழி கீழ்நோக்கி திருத்தப்படும் |

**Current Policy Rates (Percent per annum)**

| | |
|---|---|
| Central Bank Repurchase (Repo) Rate | 7.50 |
| Central Bank Repurchase (Revere Repo) Rate | 9.75 |
| Bank Rate | 15.00 |
| Statatary Rederve Ratio (SRR) | 7.00 |




- ஒரு நாள் இறுதியில் நிதிச்சந்தையில் வங்கி மற்றும் முதற்தர வணிகர்களிடம் மேலதிக திரவத்தன்மை நிலவுமெனின் மீள் கொள்வனவு செய்வதற்கான செல்வழியொன்று (Repo Window) ஒன்றூடாக அத்தின ஆரம்பித்தில் நிலவிய மீள்கொள்வனவு வீதத்திலும் பார்க்க குறைந்த வட்டி வீதத்தில் திரவத்தன்மையை திருத்தி/மாற்றி கொள்வர்.
- நாளொன்றின் இறுதியில் வங்கி மற்றும் முதற்தர வணிகர்கள் திரவத்தன்மை பற்றாக்குறையொன்றினை எதிர்நோக்குமிடத்து இதனை சரிசெய்து கொள்ள அத்தினத்தில் காலையில் நிலவிய மீள்கொள்வனவு வீதத்திலும் பார்க்க உயர்ந்த வட்டி வீதத்தில் நிதியினை வழங்குதல் மீள்விற்பனை செல்வழியூடாக இது இடம்பெறும்.
- இவ்வாறு தொடர்ந்து மீள்விற்பனை தொடர்ந்து இடம்பெறுமாயின், இங்கு கருதப்படுவது யாதெனில் திரவத்தன்மை பற்றாக்குறை தொடர்ந்து நிலவுகிறது என்பது கருத்தாகும். இதன்போது நிலையான முறையில் திறைசேரி உண்டியல்களை மத்தியவங்கி கொள்வனவு செய்வதனூடாக திரவத்தன்மை பிரச்சினையை நீக்குகிறது.

**திறந்த சந்தை நடவடிக்கையூடாக,**

- மத்தியவங்கிக்கு வட்டிவீதம் மற்றும் உயர்வலுப்பணம் என்பவற்றை ஒரே தடவையில் நிர்வகித்து கொள்ளமுடியும்.
- வட்டிவீதமானது குறுகிய வீச்சில் செயற்படுவதை அதைரியப்படுத்தப்படுத்தப்படுகிறது.
- வணிக வங்கிகளின் திரவத்தன்மை பிரச்சினைக்கு அதாவது மிகையான திரவச் சொத்து காணப்படல் அல்லது திரவத்தன்மை பற்றாக்குறை காணப்படல் போன்ற சவால்களை தவிர்த்து கொள்ளமுடியும்.

**பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழு**

இது மூலதன சந்தை நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பிலான தரப்பினர், பங்கு பரிமாற்றம், ஒதுக்குதல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பில் மேற்பார்வை செய்யும் நிறுவனம்.

**கொடுகடன் தரமிடல்**

நிதிக்கருவியொன்றூடாக கடன் பெறுகின்ற தரப்பொன்று குறித்த காலத்தில் அக்கடனை முழுமை யாக தீர்க்கக்கூடிய ஆற்றலினையே இது குறிக்கிறது. உலகில் இத்தரப்படுத்தலில் ஈடுபடும் பிரதான நிறுவனங்கள்

1. மூடிஸ் நிறுவனம் (Moodies)
2. ஸ்டேன்ரட் அன்ட் புவர்ஸ் (Standard and Poors)
3. பிச் ரேடிங் நிறுவனம் (Fitch Ratings)

இலங்கையில் மத்திய வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் இணைந்து 1999ம் ஆண்டிலிருந்து Fitch Rating Lanka நிறுவனத்தினை உருவாக்கின.

**கொடுகடன் தரமிடல்**

பிச் ரேடிங் கடன் தரமிடலை பெறக்கூடிய நிதி கருவிகள்

1. வணிக பத்திரம்
2. பிணைப்பத்திரம்
3. நிலையான வைப்பு
4. சேமிப்பு சான்றிதழ்
5. அரசாங்க மற்றும் கம்பனிகளின் கடன் கருவிகள்
6. காப்புறுதி ஈடு செய்யும் வல்லமை

இலங்கையில் எல்லா நிதி நிறுவனங்களும் 2004ம் ஆண்டளவில் தரப்படுத்தலை கட்டாயமாக பெற்றிருக்க வேண்டுமென்பதோடு, அதனை பொது மக்களுக்கு அறியப்படுத்த வேண்டும் என 2003ம் பாதீட்டு யோசனையில் கூறப்பட்டுள்ளது.

| கொடுகடன் தரமிடல் (Credir Ratings) | Fitch Rating | Moodies |
|---|---|---|
| சிறந்த முதலீட்டுக்கான தரம் | AAA | Aaa |
| பலமான உயர் கடன் செலுத்தும் ஆற்றல் | AA+<br>AA<br>AA- | Aa1<br>Aa2<br>Aa3 |
| பலமான கடன் செலுத்தும் ஆற்றல் | A+<br>A<br>A- | A1<br>A2<br>A3 |
| சாதாரணமான கடன் செலுத்தும் ஆற்றல் | BBB+<br>BBB<br>BBB- | Baa1<br>Baa2<br>Baa3 |
| உப முதலீடுகளின் தரப்படுத்தல் (இடைமட்ட) | BB+<br>BB<br>BB- | Ba1<br>Ba2<br>Ba3 |
| உயர்மட்ட உபமுதலீடு | B+<br>B<br>B- | Ba1<br>Ba2<br>Ba3 |
| கடனை திருப்பி செலுத்தும் போதான அபாயம் | CCC | Caa |
| கடன் திருப்பி செலுத்தும் ஆற்றல் | DDD | C |

**வணிக முன்னுரிமைக்கான பொதுமுறைமை G.S.P Plus/G.S.Pt**

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை பொறுத்தமட்டில் அவை ஐரோப்பிய சந்தைக்கு ஏற்றுமதி செய்யும், பொருட்களுக்கு ஐரோப்பிய சங்கத்தினால் குறைந்த தீர்வை வழங்கி ஊக்குவிக்கும் முறை இதுவாகும்.

இதற்கான பிரதான தகமைகளாக ஐரோப்பிய சந்தை பின்வருவனவற்றை குறிப்பிடுகிறது.

1. நிலைத்து நிற்கும் அபிவிருத்தி
2. நல்லாட்சி (Good Governance)

2005.12.31 முதல் 2008.12.31 வரை 14 நாடுகள் இதற்கான தகமைகளை பெற்றுக் கொண்டன. இலங்கையும் இதற்கான தகமையை பெற்றுக் கொண்டது.

**நல்லாட்சி Good Governance**

சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வள முகாமைத்துவம் என்பவை தொடர்பில் நல்லாட்சினை பேணுதலே இதனால் குறிப்பிடப்படுகிறது. இவ் அளவீட்டை மேற்கொள்ளும் நிறுவனம் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திகான அமைப்பு (ECD) ஆகும்.

1. அரசினை எதிர்பார்க்கக்கூடிய தன்மை (Predictability)
2. தூயத்தன்மை (transparency)
3. வகைகூறும் தன்மை (Accountability)
4. சிவில் சமூகத்தின் பங்களிப்பு

**இறைகடன் தரமிடல் (Sovereign Credit Ratings)**

ஏதேனுமொரு இறைமிக்க அரசாங்கமொன்றினால் பெற்றுக் கொள்ளப்படும். கடன்களை எதிர்காலத்தில் உரிய காலத்தின், முழுமையான திருப்பி செலுத்தக்கூடிய ஆற்றல் மற்றும் விருப்பம் அவ்வரசிற்கு உண்டா? என அளவிட்டு கூறுகின்ற தரப்படுத்தலே இறைகடன் தரப்படுத்தல் ஆகும்.

சர்வதேச நிதிச்சந்தையில் கடன்பெறக்கூடிய ஆற்றல், அது தொடர்பான விதிகள் போன்றவை இத்தரப்படுத்தலில் தாக்கம் செலுத்துவதோடு, இவை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உள்நாட்டு பொருளாதார உறுதி தொடர்பில் விசுவாசத்தை அளவிட்டுக் கொள்ளும் ஒரு முக்கிய குறிகாட்டியாகவும் உள்ளது.

எதிர்காலத்தில் கடனை திருப்பி செலுத்தக்கூடிய ஆற்றலிருப்பினும், அக்கடன் சுமையிலிருந்து அரசுகள் விலகிக் கொள்ளும் அபாயத்தினையும் இத்தரப்படுத்தல் கருத்திற் கொள்கிறது.

**இறைகடன் தரமிடல் (Sovereign Credit Ratings)**

இறைகடன் தரமிடல் மேற்கொள்ளும்போது,

- பொருளாதார வளர்ச்சி
- வருமான மட்டம்
- அரச நிதி உறுதி
- அரசியல் உறுதி
- சர்வதேச கடன்சுமை
- விலை உறுதி
- சென்மதி நிலுவை உறுதி என்பன கருத்திற் கொள்ளப்படுகிறது,

**பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி தொடர்பில் விடையளிப்பதில் சிக்கல் வேண்டாம் அவை தொடர்பான ஒரு கண்ணோட்டம் இது பரீட்சைக்கான ஒரு முன்னோட்டம்**

உலகவங்கி (World Development Report - 2009) அறிக்கையின்படி 2008ம் ஆண்டின் தலா வருமானங்களினடிப்படையில் நாடுகள் கீழ்வரும் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- குறைந்த வருமானம் பெறும் நாடுகள் (Low Income Countries) அமெரிக்க டொலர் 975க்கு குறைவாக தலா வருமானம்
- இடைமட்ட வருமானம் பெறும் நாடுகள் (Middle Income Countries) அமெரிக்க டொலர் 976 - 11905
  - இடைமட்ட வருமானம் பெறும் நாடுகள் (Lower Middle Income Countries) அமெரிக்க டொலர் 976 - 3855
  - உயர்மட்ட வருமானம் பெறும் நாடுகள் (Upper Middle Income Countries) அமெரிக்க டொலர் 3856 - 11905
- கூடிய வருமானம் பெறும் நாடுகள் (High Income Countries) அமெரிக்க டொலர் 11906 கூடுதலான தலா வருமானம்

**இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான சவால்களும், அதற்கான கொள்கை ரீதியான வழிகாட்டலும்.**

1948ம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்றபோது இலங்கை ஒரு விவசாய பொருளாதாரமாகவே காணப்பட்டது.

1948ம் ஆண்டில் சுதந்திரம் பெற்றவுடன் பிரதானமாக விவசாய உற்பத்தியூடாக வளர்ச்சி பெற்ற நாடாக இருந்தது. சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்றுவரை இலங்கை தனது பொருளாதார கொள்கையினை இரு பிரதான வழிகளில் பின்பற்றியது.

| ஆண்டு | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார கொள்கை |
|---|---|---|
| 1950 - 77 | 3.7 | மூடிய ரீதியிலான பொருளாதார கொள்கை |
| 1978 - 2008 | 5.0 | திறந்த ரீதியிலான பொருளாதார கொள்கை |

2008ம் ஆண்டில் இலங்கையின் தலா வருமானம் 2014 அமெரிக்க டொலராக இருந்தமையோடு, இது 2004 - 2008 காலப்பகுதியில் ஏற்பட்ட 6.4% பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையிலாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் ஆசிய வலயத்திலும் இலங்கை உயர்ந்த மானுட அபிவிருத்திக்கான அடைந்துள்ளது. (H.D.I. 0.742 - 2006) (H.D.I. 0.759 - 2007 - 102வது இடம்)

இலங்கையில் அபிவிருத்தி தொடர்பான முன்னெடுப்புக்களில் கல்வி மற்றும் சுகாதார துறைகளிலான வளர்ச்சி இலங்கைக்கு மானுட அபிவிருத்தி தொடர்பில் தனி இடத்தினை பெற்றுத் தந்துள்ளது எனக்கூறின் மிகையல்ல. எவ்வாறெனினும் இலங்கையில் வருமான ஏற்றத்தாழ்வு பணவீக்கம், வறுமை, வேலையின்மை என்பன பிரதான சவால்களாக கருதப்படுகின்றன.

1948ம் ஆண்டிற்குப் பிறகு வறுமை குறைப்புக்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், இலங்கையில் வறுமை, மற்றும் போஷாக்கின்மை என்பன பிரதான பிரச்சினையாகவே உள்ளது.

இலங்கயின் தேசிய வறுமை மட்டங்கள்

| துறை | 90/91 | 95/96 | 2002 | 2006/2007 |
|---|---|---|---|---|
| இலங்கை | 26.1 | 28.8 | 22.7 | 15.2 |
| நகரம் | 16.3 | 14.0 | 7.9 | 6.7 |
| கிராமி | 29.5 | 30.9 | 24.7 | 15.7 |
| பெருந்தோட்டம் | 20.5 | 38.4 | 30.0 | 32.0 |

மூலம் : குடிசன புள்ளிவிபரவியல் மதிப்பீட்டு திணைக்களம்

1990 காலப்பகுதியின் இடைப்பகுதியில் வறுமை குறைவு ஏற்பட்டுள்ளமை தெரிகிறது.

கிராமிய வறுமை நகர வறுமையிலும் இரண்டு மடங்கிற்கு மேலாக உள்ளது. 90% வறியோர் கிராமப்பகுதிகளிலேயே வாழ்கின்றனர்.

பெருந்தோட்டத்துறையில் 1990ம் ஆண்டோடு ஒப்பிடும்போது 50% வறுமை உயர்வடைந்துள்ளமை தெரிகிறது.

வறியோர்களில் கூடியோர் பெண்களாகவே உள்ளனர்.

**கிராமிய வறுமை உயர்வாக இருப்பதற்கான காரணங்கள்**

- மேல்மாகாணத்தை மையப்படுத்திய பொருளாதார வளர்ச்சி மற்றும் பிரதேச மயமாக்கமற்ற பொருளா-தார கொள்கை
- விவசாய உற்பத்தியின் மந்தகதியிலான வளர்ச்சி
- சமூக மற்றும் பௌதீக மூலதனங்களின் மந்த கதியிலான வளர்ச்சி
- வளங்கள் மற்றும் சந்தைகளின் குறைபாடு
- விவசாய காணிகளுக்கான பற்றாக்குறை
- பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் வறியோர் மத்தியில் மீள்பங்கீடு செய்யப்படாமை
- உள்நாட்டு யுத்தம்

**இலங்கையில் வறுமையை குறைப்பதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்**

1. வறியோருக்கு சார்பான பொருளாதார வளர்ச்சியினை ஏற்படத்தல் (Pro Poor Growth)
   1. தேசிய விவசாயத்துறையினை மேம்படுத்துவதனூடாக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி மக்களின் வருமானத்தை உயர்த்துதல்.
   2. நுண்பாக நிதி (Micro Finance) மற்றும் சமூக மூலதனம் (Social Capital) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கிராமிய ரீதியில் சிறிய நடுத்தர வணிகங்களை உருவாக்குதல்
   3. சிறந்த தொழில்நுட்ப வளர்ச்சி பரம்பல்
   4. வருமான ஏற்றத்தாழ்வினை குறைப்பதற்கு அரசு தலையிடல்
   5. சந்தை தொழிற்பாடு வறியோருக்கு சார்பானதாக அமைதல்
   6. பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புகளை விருத்தி செய்தல்.
2. வறியோரை பலப்படுத்துவதற்கான அடிப்படையினை உருவாக்குதல்
   1. ஆண், பெண் வேற்றுமைக்கான நிலமையை மாற்றி, பெண்களுக்கும் தீர்மானிக்கும் பெறும் சூழலை உருவாக்கல்.
   2. பிரதேச ரீதியிலான செயற்திட்டங்களிலும் பெண்களையும் நேரடியாக இணைத்தல்.

3. அரசு மற்றும் தனியாரில் விஷேட வேலைவாய்ப்பு பகுதிகளை உருவாக்குதல்

3. வறியோரினை பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டத்தினை உருவாக்குதல்.
   1. சமூக பாதுகாப்பினை வினைத்திறனாக்குதல்
   2. சுகாதார குறைபாடு, நகர் நோக்கில் குடிப்பெயர்வு, வேலையின்மை என்பவற்றை குறைக்கும் வேலைத்திட்டம்
   3. சவால்களை குறைக்கக்கூடிய வகையிலான கொள்கை

மொத்த உள்நாட்டு உற்பத்தி மாகாண ரீதியிலான பங்களிப்பு

| மாகாணம் | 1990 | 1996 | 2000 | 2007 | 2008 | 2008 மொ/உ/உற்பத்தி |
|---|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | 40.2 | 43.7 | 49.6 | 46.5 | 45.4 | 347730 |
| வடகீழ் மாகாணம் | 11.1 | 11.3 | 10.4 | 9.9 | 10.0 | 191874 |
| மத்திய மாகாணம் | 12.1 | 10.0 | 9.4 | 9.6 | 9.9 | 165750 |
| தென் மாகாணம் | 9.5 | 9.0 | 9.4 | 10.5 | 10.6 | 191725 |
| சப்ரகமுவ மாகாணம் | 8.1 | 9.0 | 6.7 | 6.4 | 6.4 | 149124 |
| கிழக்கு மாகாணம் | 4.2 | 4.8 | 4.5 | 5.2 | 5.5 | 160026 |
| ஊவா மாகாணம் | 8.1 | 5.1 | 3.9 | 4.9 | 4.6 | 156490 |
| வடமத்திய மாகாணம் | 4.8 | 4.6 | 3.9 | 4.0 | 4.7 | 171167 |
| வடக்கு மாகாணம் | 4.4 | 2.4 | 2.2 | 2.9 | 2.9 | 109530 |
| மொத்தம் | 100.0 | 100.00 | 100.00 | 100.00 | 100.00 | 2181161 |

## BRIC நாடுகள்

துரிதமாக பொருளாதார வளர்ச்சியடைந்துவரும் மற்றும் உலகளாவிய ரீதியிலான பொருளாதார வளர்ச்சிக்கான பெரும்பங்கினை ஆற்றுகின்ற நாடுகளே "BRIC" நாடுகள் எனப்படுகின்ன. பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளையே BRIC நாடுகள் என கூறப்படுகிறது.

**தொகுப்பு:**
**பா. பானுசந்தர்**



# கருத்துக்களம்

அடுத்துவரும் இதழ்களில் உங்களின் கருத்துக்களுக்கான ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**இதழாசிரியர்,**
இல. 03, சென். கில்டாஸ் ஒழுங்கை,
கொழும்பு - 03.

# இலங்கையின் உட்கட்டுமான அபிவிருத்தி தொடர்பிலும், பரீட்சை தொடர்பிலும்

## பேராசிரியர் டேனி அத்தப்பத்து அவர்கள் மேல்மாகாண பொருளியல் ஆசிரியர்களுக்கு நடாத்திய கருத்தரங்கில் பெற்றுக்கொண்ட சில முக்கிய குறிப்புக்கள்

**தொகுப்பு : பானுசந்தர்**

2009ம் ஆண்டில் பொருளியல் பாடத்தை பொறுத்தமட்டில் மாணவர்கள் வெற்றிகரமாக முகங்கொடுத்துள்ளதாகவும். இதில் 71% வளர்ச்சியொன்று ஏற்பட்டுள்ளதாகவும் கருத்து தெரிவித்த பேராசிரியர் அவர்கள் எனினும் இதுபோதுமான வளர்ச்சி என கூறமுடியாது எனவும் குறிப்பிடுகிறார். மேலும் மாணவர்கள் பரீட்சையில் தெரிவுசெய்யும் வினாக்கள் தொடர்பிலும் கருத்துரைத்த அவர் அது பின்வருமாறு அமைந்திருப்பதாக சுட்டிக் காட்டினார். 2009ம் ஆண்டில் அமைப்பு வினாப்பகுதியில் மாணவர் வினாக்களை தெரிவு செய்தவிதம் வருமாறு.

| வினா இலக்கம் | பகுதி I இல் தெரிவுசெய்த வீதங்கள் | பகுதி II இல் தெரிவுசெய்த வினாக்களின் வீதங்கள் |
|---|---|---|
| 01 | 83% | 98% |
| 02 | 70% | 25% |
| 03 | 78% | 65% |
| 04 | 20% | 28% |
| 05 | 75% | 15% |
| 06 | 50% | 73% |
| 07 | 98% | 62% |
| 08 | 19% | 60% |

மேலும் பரீட்சார்த்தி ஒருவர் பொருளியல் வினாத்தாளுக்கு தம்மை எவ்வாறு தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என சிறப்பாக வலியுறுத்திய அவர் பின்வரும் விடயங்களின் அதிக கவனம் தேவை எனவும் குறிப்பிடுகிறார்.



சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராசிரியர்
**டெனி அத்தபத்து**
பொருளியல்துறை,
றுகுணு பல்கலைக்கழகம்

- பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் அது தொடர்பான எண்ணக்கருக்கள்
- பசுமை ரீதியான வளர்ச்சி
- நெகிழ்ச்சி
- உற்பத்தித்திறன்
- அபிவிருத்தி குறிகாட்டிகள்
- மகிந்த சிந்தனை வேலைத்திட்டம்
- உட்கட்டமைப்பு வசதிகள்
- நல்லாட்சி, ஊழல், மற்றும் அது தொடர்பான குறிகாட்டிகள்
- பொருளாதார சுதந்திரம் மற்றும் உன்னத தன்மை குறிகாட்டிகள்
- ஊழல் தொடர்பான குறிகாட்டிகள்
- சர்வதேச வர்த்தகம்
- நாணய மாற்றுவீதம்
- GSP+
- BRIC நாடுகள்

பொருளாதார வளர்ச்சி தொடர்பில் கலந்துரையாடிய இவர் அது தொடர்பில் மிக முக்கிய விடயமாக உட்கட்டமைப்பு வசதிகளை குறிப்பிடுகிறார். உட்கட்டமைப்பு வசதிகளென்பது மனிதனால் உருவாக்கப்படும் உற்பத்தி காரணிகளுக்குள் அடங்குவதோடு இது முழுப்பொருளாதாரத்திலும் தாக்கமுறும் மூலதன வளமாததால் இதனை பொதுப்பணி மூலதனம் என்கிறோம். நேரடியாக உற்பத்தி அல்லது சமூகமேம்பாட்டுக்கு இவை பங்களிப்பு செய்கின்ற விதத்தினை கொண்டு இவற்றினை பொருளாதார அல்லது சமூக உட்கட்டமைப்பு என குறிப்பிடுகிறார். இவற்றினை மேலும் வன் உட்னட்டுமானம் (Hard Infrastructure) மென் உட்கட்டுமானம் (Soft Infrastructure) என வகையிடவும் முடியும் என பேராசிரியர் குறிப்பிடுகிறார்.

இங்கு உட்கட்டமைப்பு வசதிகளின் பௌதீக தன்மையின் அடிப்படையில் இவை இவ்வாறு வகையிடப்படுகின்றன. அதிவேக பெருந்தெருக்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், வாய்க்கால்கள், போன்றவற்றை வன் உட்கட்டுமாணங்களுக்கு உதாரணமாக குறிப்பிட முடியும். இவற்றோடு நிதிச்சந்தை முறைமை, நிதிமுறைமை தொடர்பான நிறுவன வகைப்படுத்தல், ஊழியப்படையினை பலப்படுத்தும் சிறப்புத்தேர்ச்சி வளர்ச்சியடைதல், ஊழியர் பயிற்சி, தொழில்சார் பயிற்சி பட்டறைகள் என்பன மென் உட்கட்டுமாணங்களுக்கு உதாரணமாக குறிப்பிட முடியும். ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவும் பலவீனமானதாக காணப்படின் அப்பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவும் பலவீனமானதாகவே காணப்படும். மேலும் தொழில்நுட்ப பரிமாற்றம், தொடர்பான வேலைத்திட்டங்கள், புதிய தொழில்நுட்பங்கள் கிடைக்கத்தக்கதான செயல்திட்டங்கள், போன்றவற்றையும் மென் உட்கட்டுமாணங்களே ஆகும்.

சமூக உட்கட்டமைப்பு தொடர்பிலும் இவற்றினை அவதானிக்க முடியும். சமூக பாதுகாப்பு முறைகள், சமூக அமைப்புக்கள், சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் என்பன மென் ரீதியான சமூக உட்கட்டமைப்புகள் ஆகும். பாடசாலை, வீடமைப்புத்திட்டங்கள், வைத்தியசாலைகள் என்பன வன்மையான சமூக உட்கட்டமைப்புக்கள் ஆகும்.

இலங்கையில் இதுவரை உட்கட்டமைப்புகள் தொடர்பில் மந்தகதியான போக்கினையே கொண்டு காணப்பட்டது. இது இலங்கையின் உற்பத்திகள் தொடர்பில் நேரடியாக தாக்கம் செலுத்திய ஒரு காரணியாகும். பொருளாதார வளர்ச்சியானது மந்தகதியானதாக காணப்பட்டமைக்கான பிரதான காரணமும் இதுவே ஆகும். குறிப்பாக வெளிநாட்டு முதலீடுகளை கவர்ந்து அதிகரித்து கொள்ளும் நடவடிக்கையில் இது பாதிப்புக்குரிய ஒரு காரணியாகும். மின்சக்தி, பெருந்தெருக்கள் போன்றவற்றையும் அமைப்பதற்கான முன்முனைவு இன்மை போன்றவை உற்பத்தி கிரயத்தின் அதிகரிப்புக்கு நேரடியாக காரணமாக அமைந்தது. நிகழ்காலத்தில் இது தொடர்பில் விளங்கியிருந்தாலும், உட்கட்டுமாண அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு பாரியளவில் வளங்களை பிரயோகிக்க வேண்டியிருக்கும். உட்கட்டுமாணங்களின் அமைப்பு என்பது நீண்டகால செயற்பாடு என்பதோடு, இவற்றினை மேற்கொள்ள நீண்டகால முதலீடு அவசியமாகும். இதற்கான உதாரணமாக பெருந்தெருக்களை குறிப்பிட முடியும். இவை தொடர்பிலான பிரதான பிரச்சினை வளங்களின் பற்றாக்குறையான தன்மையே ஆகும். இதுவரை காலமும் யுத்த நடவடிக்கைகளுக்காக அரச பாதீட்டில் பாரிய தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டமை உங்களுக்கு தெரிந்ததே.

இலங்கையில் பாதீட்டில் பாரிய தொகை நடைமுறை செலவுக்கு பயன்படுத்துகின்ற அதே வேளை மூலதன செலவிற்கு மிக மிக குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்படுகிறது. மறுபுறத்தில் வெளிநாட்டு கடன்களை பெற்று மூலதன செலவினை மேற்கொள்ள முடியும் என்றாலும், வெளிநாட்டு

கடன்சுமை இலங்கையில் ஏற்கனவே மிக அதிகளவிலுள்ளது. அரச செலவில் 8% மாத்திரமே மூலதன செலவுகள் செய்யப்படுகின்றது. ஆயினும் நடைமுறையில் இது தொடர்பான பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நிகழ்கால அரச கொள்கைகளிலும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பில் கூறப்பட்டுள்ளமை சிறப்பு.

**தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள்**

- இலங்கை அதிவேக பாதை அமைப்பு
- நுரைச்சோலை, கெரவலபிடிய, மேல்கொத்மலை போன்ற பிரதேசங்களில் அமைக்கப்படும் மின்சக்தி நிலையங்கள்
- விமான நிலையம் அமைத்தல், மற்றும் விருத்தி செய்தல்.
- கொழும்பு, ஹம்பாந்தோட்ட, ஒலுவில் துறைமுக அபிவிருத்தி

மின்சக்தி, போக்குவரத்து, துறைமுகம் மற்றும் விமானநிலையங்களை அமைப்பதற்கான உட்கட்டமைப்புகள் பெரும்பாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதேச ரீதியில் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மாவட்டங்கள் மற்றும் பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்படும் பிரதான உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களாக "மகநெகும" "கமநெகும" போன்ற வேலைத்திட்டங்களை குறிப்பிட முடியும்.

ஆயினும், அரசு இவ்விரு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் பிரதான பிரச்சினை அரசின் வளப்பற்றாக்குறை ஆகும். இதற்காக அரசாங்கம் PPP முறையினை பிரயோகிக்க முடியும். அரச, தனியார், பங்குடமை (Public Private Partnership) ஆகும். இது பல நாடுகளிலும் பின்பற்றப்படும் ஒரு முறையாகும். இதனை உலக வங்கியும் கூட பல்வேறு நாடுகளுக்கு மேற்கொள்ள பணித்துள்ளது. இலங்கை இதனை கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் பயன்படுத்தி வருகிறது. இதனை பின்பற்றும்போது பல நன்மைகள் அரசு பெறவியலும் இது தொடர்பில் பல்வேறு நடைமுறைகள் உள்ளன.

- கட்டுதல், இயக்குதல், மாற்றுதல் (BOT)
- கட்டுதல், உரிமை கொள்ளுதல், இயக்குதல் (BOO)
- கட்டுதல், உரிமை கொள்ளுதல், இயக்குதல், உரிமை மாற்றுதல் (BOOT)

**முற்றும்**



ImperialCollege

NURTURING TOMORROW'S LEADERS

Imperial College - நாளைய தலைவர்களுக்கான ஊக்குவிப்பு இலங்கையில் கல்வித்துறையில் வழிகாட்டிகளாக திகழ்ந்துவரும் Imperial College மீண்டுமொரு முறை நாளைய தலைவர்களுக்கான ஊக்குவிப்பு என்ற குறிக்கோளை இலங்கையில் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்கள் மூலமாக நிரூபித்து காட்டியிருக்கின்றனர். மேலும் 2009ல் உயர்தரத்தில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு விருதுகளையும் வழங்கியிருக்கின்றனர்.

2009 நவம்பரில் நடைபெற்ற பரீட்சையில் சித்திபெற்ற மூன்று மாணவர்களில், செனாலி பெரேரா நிதிக் கணக்கீடு மற்றும் வரி நியமங்களில் (PT) சிறப்பான சித்தியெய்தியுள்ளார். இவர் நிதி தொடர்பான பாடங்களில் சிறந்த பாண்டித்தியம் பெற்றவரான பிரவீந்த ராஜரட்ணம் என்பவரால் பயிற்றுவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. உஷாமா ஜிப்ரியின் வழிகாட்டலின் கீழ் பயற்சிபெற்ற டெஸி அகஸ்டா (deasy Augusta) சவால்களும் தந்திரோபாயக் கட்டுப்பாட்டு முகாமைத்துவ கற்கையில் சிறந்த மட்டத்தை பெற்றுள்ளதோடு 18 வயதான Tharinda Goonaratne வர்த்தக தந்திரோபாயக் கற்கையில் சிறந்த பெறுபேற்றோடு விருதினையும் வென்றெடுத்துள்ளனர்.

அவர்களுடைய மிகச் சிறந்த அடைவுமட்டத்தினை அங்கீகாரத்தோடிணைந்த Shenali Deasy மற்றும் தரிந்த ஆகியோருக்கு CIMA கற்கைநெறியில் அடுத்த மட்டத்திற்கான அனைத்து புலமைப்பரிசில்களையும் பெற தகமை பெற்றுள்ளனர்.

இலட்சிய நோக்கும் முயற்சியும் நிறைந்த இலங்கையிலுள்ள இளைஞர்களை நாணய வர்த்தகத்தின் வெற்றியாளர்களாக ஏற்றுக் கொள்வோம். அதன்படி Imperial College ஆனது, 2009 உயர் தரத்தில் 3 A சித்திகளோடு சித்தியடைந்தவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கி உதவியுள்ளது.

எப்படியிருந்து போதிலும், Imperial College தனி ஒருவரை கௌரவப்படுத்துவதை விடுத்து செல்வதினை இலட்சிய நோக்கோடு எடுத்துச் செல்கின்றனர். சமூக பொறுப்புணர்ச்சியுடைய கல்வி நிறுவனம் என்ற வகையில் Imperial College மேலும் ஒருப்படி சென்று வர்த்தகம் மற்றும் விஞ்ஞானப்பிரிவின் கீழ் இம்முறை பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு இலங்கையில் பல பாகங்களிலும் மீட்டல் வகுப்புகள் CIMA வுடன் இணைந்து இடம்பெறுகின்றன. இவை இலங்கையின் முன்னனி பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் நாட்டின் பிரதான நகரங்களில் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் உள்ள பாடசாலைகளில் ஒவ்வொரு மீட்டல் வகுப்பிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் ஒத்துழைப்புடன் அதிகளவான மீட்டல் வகுப்புகள் நிறைவு பெற்றிருக்கின்றன. விரைவில் வரவிருக்கின்ற பரீட்சைக்கு அவர்கள் தயாராகும் வகையில் சிறந்த தரமான மீட்டல் வகுப்புகளை மாணவர்கள் பெற்றுவருகின்றனர். இதனூடாக இம்மாணவர்களுக்கு Imperial Collegeன் CIMA சான்றிதழுக்கான கற்கை நெறிக்கான கட்டண அறவீடுகளை புலமைப்பரிசில்களாக பெற சந்தர்ப்பங்கள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன. இதனை ஒரு உணவை உண்பதற்கு முன்னர் அதனை உரிய முறையில் தயார்படுத்துதலுக்கு ஒப்பிடலாம்.

Imperial College ஆனது, சிறந்த ஊக்கமுடையோர், மாணவர்களுக்கான ஒத்துழைப்பு, அடைவுமட்டம் பெறுபேறுகள் மற்றும் உயர்ந்த அடைவு வீதம், இலட்சிய நோக்கு, மாணவர்களுக்கான வரையறையற்ற சந்தர்ப்பங்களை வழங்கும் அர்ப்பணிப்பு என்பவற்றினைக் கொண்டு சிறந்த வெற்றியினைப் பெற வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகின்றது.

மாணவர்களுக்காக சிறந்தவற்றினை உருவாக்குவதற்கான மாற்றங்களை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களை கைப்பற்றித் தருவதே சவாலாகும். அதைப் போன்றே நீங்களும் சிறந்த நன்மைகளுடன் பரீட்சையில் சித்தியெய்தி உயர்ந்த வாய்ப்புக்களை பெறுவதோடு உங்களது வாழ்க்கையை விரும்பிய வகையில் அமைத்துக் கொள்ள தயாரா?...

# கல்விப் பொதுத்தரதராதர உயர்பரீட்சை முன்னோடி வினாப்பத்திரம் 2010
## கணக்கீடு 1 (பகுதி 1)
# General Certificate of Education (Ad. Level) Examination Mock Paper 2010
## Accounting I (Part I)

ஒரு மணி நேரம்
**One Hour**

சுட்டிலக்கம் ...........................

**பரீட்சார்த்திகளுக்குரிய அறிவுறுத்தல்கள்**

பகுதி I இன் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் 1 புள்ளி வீதம் வழங்கப்படும்.

பகுதி I வினாப்பத்திரத்தை பகுதி II விடைத்தாளுடன் இணைத்து வழங்குதல் வேண்டும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| பகுதி I க்கு | |
| வினா இல | புள்ளி |
| 1 - 20<br>21 - 40 | |
| கூட்டுத்தொகை | |

இலக்கம் 1 இலிருந்து 20 வரையான வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகப் பொருத்தமான விடையை தெரிவுசெய்து அருகிலுள்ள கோட்டிலுள் புள்ளடியிடுக.

01. வியாபாரத்தின் உள்ளகத் தரப்பினரால் பயன்படுத்தப்படும் கணக்கீட்டு தகவல் முறை யாது?
 1. அரச கணக்கீடு 2. நிதி கணக்கீடு
 3. கிரய கணக்கீடு 4. பிரசுர கணக்கீடு
 5. தனியார் கணக்கீடு

02. கிரயம் மற்றும் தேறிய தேறத்தக்க பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த தொகையினை இருப்பாக கொள்ள வேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு
 1. வரலாற்று கிரய எண்ணக்கரு 2. பாதுகாப்பு எண்ணக்கரு
 3. இணைதல் எண்ணக்கரு 4. கிரய எண்ணக்கரு
 5. பண அளவீட்டு எண்ணக்கரு

03. கணக்கீட்டில் பொதுநாட்குறிப்பினை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் கீழ் வருவனவற்றுள் எது?
 1. கடனுக்கு பொருட்களை விற்பனை செய்யும் போது 2. மீதிகளை சமப்படுத்தும் போது
 3. நிலையான சொத்துக்களின் கொள்வனவின் போது 4. நன்மதிப்பு சீராக்கம் செய்யும் போது
 5. குத்தகைக்கடன் தொடர்பான சீராக்கம்

04. கம்பனியொன்று 2010 மார்ச் 31 திகதி முடிவடையும் ஆண்டிற்கு நிதிநிலை அறிக்கையில் எந்தவித பணரீதியான பெறுவனவை மேற்கொள்ளாது 1000000 ரூபாவினை பெற்ற வாடகையாக பதிவிட்டிருந்தது. இங்கு மீறப்பட்ட எண்ணக்கரு யாது?
 1. தொடர்ந்து இயங்குதல் (Going Concern) 2. பாதுகாப்பு (Prudence)
 3. இணைதல் 4. நிலைத்திருத்தல் எண்ணக்கரு
 5. ஒப்பீட்டு எண்ணக்கரு

05. பிரவீந்த் நிறுவனம் நிலையான சொத்துக்கள் தொடர்பில் நேர்கோட்டு முறையில் தேய்விடுகிறது. இங்கு பின்பற்றும் எண்ணக்கரு
 1. கிரய எண்ணக்கரு 2. ஒப்பீட்டு எண்ணக்கரு
 3. தொடர்ந்து இயங்குதல் 4. கால எண்ணக்கரு
 5. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு

06. வரை. பாஸ்கரன் கம்பனி தமது நிதிக்கூற்றுக்களை மார்ச் 31ம் திகதிக்கு தயாரிக்கிறது. ரூபாய் 20000 பெறுமதியான பொருட்கள் மார்ச் 30ம் திகதி கிடைத்தபோதிலும் இதற்கான பட்டியல் ஏப்ரல் 3 திகதியே கிடைத்தது. இங்கு 30 பெறப்பட்ட பண்டங்கள் கணக்குகளில் உட்படுத்தப்பட்டது. இங்கு பின்பற்றப்படும் எண்ணக்கரு
 1. பாதுகாப்பு எண்ணக்கரு 2. கிரய எண்ணக்கரு
 3. கணிய எண்ணக்கரு 4. இணைதல் எண்ணக்கரு
 5. முக்கியத்துவ எண்ணக்கரு

07. கீழ்வரும் செலவுகளை அவதானிக்கவும்
   A. உரிமையாளரின் மூலதனத்துக்கு செலுத்திய வட்டி
   B. காரியாலய குளிரூட்டல் முறைமையை திருத்துவதற்கான செலவு
   C. ஐந்து வருட காலத்திற்கு உரிமம் பெற்று கணக்கீட்டு மென்பொருள் (Accounting Software) ஒன்று கொள்வனவு

   மேலுள்ளவற்றில் மூலதன செலவுகள்
   1. A மட்டும்
   2. B மற்றும் C
   3. C மட்டும்
   4. A மற்றும் C
   5. A, B, C ஆகியவை.

08. வியாபாரமொன்று 5% கழிவுடன் 300000 பெறுமதியான பண்டங்களை கொள்வனவு செய்தது. கடனினை திருப்பி செலுத்தும்போது 10% கழிவினை பெற்றுக் கொண்டது. இக்கொடுக்கல் வாங்கல்களின் காசு கணக்கில் இடம் பெறவேண்டிய தொகை
   1. 255000
   2. 256000
   3. 285000
   4. 300000
   5. 325000

09. கடனுக்கு கொள்வனவு செய்த பண்டங்களை உரிமையாளர் தமது சொந்தத் தேவைக்கு பயன்படுத்தினார். இது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்
   1. சொத்து அதிகரிப்பு, பொறுப்பு அதிகரிப்பு
   2. பொறுப்பு குறைவு, உரிமை அதிகரிப்பு
   3. சொத்து, உரிமை இரண்டிலும் குறைவு
   4. சொத்து அதிகரிப்பு, உரிமை குறைவு
   5. சொத்து,

10. பிரவிந்த என்டர்பிரைஸ் நிறுவனத்தின் விற்பனை பேரேட்டுக் கட்டுப்பாட்டு கணக்கின் மாத ஆரம்ப மீதி 122000 வரவு மீதியாக இருந்தது. இம்மீதிக்குரிய சரியான விளக்கம்
   1. ஜனவரி மாதத்தில் 122000 பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
   2. கடன்பட்டோரிடம் 122000 பெறவேண்டியுள்ளது.
   3. கடன்கொடுத்தோருக்கு 122000 செலுத்த வேண்டியுள்ளது.
   4. கடன்கொடுத்தோருக்கு ஜனவரியில் செலுத்தப்பட்டுள்ளது.
   5. கடன்கொடுத்தோருக்கு 122000 செலுத்த வேண்டியுள்ளது.

11. கருணாகரன் தனி வியாபாரியாவர் 2009/2010 நிதியாண்டில் பெற்றுக்கொண்ட தகவல் வருமாறு

| | |
|---|---|
| மூலதனம் 2009 ஏப்ரல் 1 தினத்தின் | 5300660 |
| 2010 மார்ச் 31 தினத்தின் | 7154320 |

   நிதியாண்டில் கொண்டுவரப்பட்ட மூலதனம் 550000 சொந்த தேவைக்கான பண்டங்கள் 34180 நிறுவன வியாபார வங்கி கணக்கினூடாக கருணாவின் வருமானவரி ரூ. 50 000 செலுத்தப்பட்டது. 2009/2010 ஆண்டு கருணாவின் இலாம்/நட்டம்
   1. 1337840 இலாபம்
   2. 1853660 இலாபம்
   3. 1387840 இலாபம்
   4. 1303660 இலாபம்
   5. 1337840 நட்டம்

12. நேர் பொருள் நேர்கூலி தவிர்ந்த ஏனையவை தொழிற்சாலை பொது மேந்தலைகளாகும், கீழ்வருவனவற்றுள் காரியாலய பொதுமேந்தலையாக கொள்ளமுடியாதது எது?
   1. இயந்திர இயக்குனர் கூலி
   2. காரியாலயத்திற்கான உபகரண திருத்த செலவு
   3. தொழிற்சாலை உபகரண திருத்தம் மற்றும் நடாத்துதல் செலவு
   4. தொழிற்சாலை மின்சார செலவு
   5. தொழிற்சாலை இயந்திர தேய்வு

13. கீழ்வரும் கூற்றுக்களின் பிழையான கூற்று எது?
   1. சொத்துக்களின் கூட்டுத்தொகை பொறுப்பு, மூலதனத்தின் கூட்டுத்தொகைக்கு சமனாகும்.
   2. பொறுப்பு சமனாவது சொத்துக்களிலிருந்து மூலதனத்தை நீக்கும்போது
   3. சொத்து மற்றும் செலவின் கூட்டுத்தொகை, மூலதனம், பொறுப்பு, வருமானம் ஆகியவற்றுக்கு கூட்டுத்தொகை மூலதனமாகும்.
   4. சொத்து, பொறுப்பின் கூட்டுத்தொகை மூலதனமாகும்.
   5. சொத்தின் கூட்டுத்தொகை வியாபாரத்தின் அனைத்து பொறுப்பிற்கும் சமன்.

14. மூலதன செலவின் முக்கிய சிறப்பியல்பாக கொள்ளமுடியாதது
    1. செலவின் பயன் நீண்டகாலத்துக்குரியது
    2. இது பாரிய அளவிலான புனருத்தாபன செலவாகும்
    3. செலவின் பின் நிலையான சொத்துக்களின் அதிகரிப்பு ஏற்படும்
    4. இவை பாரிய பணப்பெறுமதியில் மேற்கொள்ளப்படும்.
    5. இவை அடிக்கடி ஏற்படும் செலவுகள்

15. சரியான கூற்றினை தெரிவு செய்க
    1. இறுதி இருப்பு எப்போது பரீட்சை மீதியில் இடம்பெறுவதில்லை.
    2. நிறுவனமொன்றால் வாடிக்கையாளருக்கு பற்றுசீட்டு வழங்கிய தொகைக்கே விற்பனைபேரேட்டு மீதியும் அதிகரிக்கும்
    3. ஐந்தொகையில் காணப்படும் வங்கி மீதியும், வங்கியின் படியாக வங்கி மீதியும் எப்போதும் சமனாக காணப்படும்
    4. உற்பத்தி இயந்திரமொன்றிக்கான நிர்மானிப்பு பணியில் ஈடுபட்ட ஊழியருக்கு வழங்கிய சம்பளம். மூலதன செலவு ஆகும்.
    5. பரீட்சை மீதி சமப்பட்டால் பேரேடுகள் சரியான முறையில் உள்ளன என எப்போதும் கருத முடியும்.

16. பங்காளரொருவரினால் நிறுவனத்துக்கு கொண்டுவரப்படும் ஏதேனும் சொத்திற்கான வாடகைக்குரிய சரியான பதிவு
    1. இலாபநட்ட கணக்கிற்கு வரவு, இலாப பகிர்வு கணக்கு செலவு
    2. இலாபநட்ட பகிர்வு கணக்கிற்கு வரவு, இலாபநட்ட கணக்கு செலவு
    3. இலாபநட்ட கணக்கு வரவு, நடைமுறை கணக்கு செலவு
    4. இலாபநட்ட கணக்கு வரவு, மூலதன கணக்கு செலவு
    5. நடைமுறை கணக்கு வரவு, மூலதன கணக்கு செலவு

17. பங்குடமையின் பகிர்வுக்குரிய இலாபமாக கணிக்கப்படுவது தொடர்பான சரியான சமன்பாடு
    1. பகிர்வுக்குரிய இலாபம் = தேறிய இலாபம் - கடன் வட்டி - நடப்பு கணக்கு வரவு மீதிக்கு வரவிட்ட வட்டி + பங்காளர் சம்பளம்
    2. பகிர்வுக்குரிய இலாபம் = தேறிய இலாபம் + கடன் வட்டி + நடப்பு கணக்கின் செலவு மீதிக்கு அறிவிடும் வட்டி - (பங்காளர் சம்பளம் - மூலதன வட்டி)
    3. பகிர்வுக்குரிய இலாபம் = தேறிய இலாபம் + பங்காளர் கடன் வட்டி + பற்றுவட்டி + பங்காளர் சம்பளம் - மூலதன வட்டி
    4. பகிர்வுக்குரிய இலாபம் = தேறிய இலாபம் + பங்காளர் சம்பள வட்டி - நடப்பு கணக்கு இலாபம் + பற்று வட்டி
    5. பகிர்வுக்குரிய இலாபம் = தேறிய இலாபம் - பங்காளர் சம்பள வட்டி + நடப்பு கணக்கு வட்டி - பங்காளர் சம்பளம்

19. AB பங்குடமை மற்றும் CD பங்குடமையின் கீழ்வரும் தகவல்களை அவதானிக்க

| | AB பங்குடமை | CD பங்குடமை |
|---|---|---|
| மூலதனம் | 100000 | 100000 |
| சராசரி தேறிய இலாபம் | 50000 | - |
| மூலதன திரும்பல் வீதம் | | 20% |

கீழ்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று எது?

20. பங்குடமை கட்டளைச்சட்டத்தின் 42 பிரிவினால் குறிப்பிடுவது யாதெனில்,
    1. நிலையான சொத்துக்கள் பிரித்து வழங்குகின்ற முறையை ஆகும்
    2. வகையற்ற பங்காளர் தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடைமுறை பற்றி ஆகும்
    3. விலகிச் செல்லும் பங்காளர் தொடர்பிலான சொத்து நடைமுறை
    4. சொத்து மீள்மதிப்பீட்டு இலாபத்தை பகிருகின்ற நடைமுறை
    5. பங்குடமை உடன்படிக்கையொன்று காணப்படாத பட்சத்தில் பங்காளர் நடைமுறை

**21 - 35 வரையிலான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக**

21. ஏதேனும் கொடுக்கல் வாங்கலொன்று கணக்கீட்டில் உட்படுத்துவதற்கு அவசியமான இரு முக்கிய விடயங்களை குறிப்பிடுக?

1. ______________________ 2. ______________________

**22 மற்றும் 23 வினாக்களுக்கு விடையளிக்க கீழ்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

நிறுவனமொன்று இயந்திரமொன்றை 200000 பெறுமதியில் கொள்வனவு செய்து குறைந்து செல்லும் மீதி முறையில் ஆண்டுக்கு 25% தேய்விடுகிறது.

22. இரண்டாமாண்டு முடிவில் சொத்தின் தேய்வடையக்கூடிய பெறுமதி யாது?

23. இரண்டாமாண்டு முடிவில் இயந்திரத்தின் எஞ்சியிருக்கும் 5 ஆண்டுக்கு நேர்கோட்டு முறையில் தேய்விட முகாமைத்துவம் தீர்மானித்தது. எச்ச பெறுமதி இல்லையென கொண்டு மூன்றாம் வருட தேய்வினை கணிப்பிடுக.

24. விளம்பர செலவு கணக்கின் 2000 ரூபா மீதி பரீட்சை மீதியில் தவறவிடப்பட்டது இதற்கான திருத்த பதிவு யாது?

25 மற்றும் 26 வினாக்களுக்கு விடையளிக்க கீழ்வரும் தகவல்களை உபயோகிக்க

| | |
|---|---|
| 2009.04.01 இருந்த இருப்பு | 40000 |
| கொள்வனவு | 280000 |
| விற்பனை | 412000 |
| உட்சுமைக்கூலி | 10000 |
| வெளித்திரும்பல் | 4000 |
| உட்திரும்பல் | 12000 |

இவ்வியாபாரத்தில் கிரயத்தில் 25% மொத்த இலாபம் பெறப்படுகிறது.

25. இவ்வியாபாரத்தின் இறுதி இருப்பு யாது?

26. மொத்த இலாபத்தை கண்டறிந்து, விற்பனையில் அது எத்தனை வீதம் என குறிப்பிடுக.

27. கணக்கீட்டின் தொழிற்பாட்டினை சுருக்கமான பாய்ச்சல் வரிப்படமாக தருக.

28. ஐயக்கடனை பிரித்தறிவது இணைதல் எண்ணக்கருவுக்கமைவாகும். இக்கூற்றை சுருக்கமாக விளக்குக.

29. கீழ்வரும் தகவல்களை எவ்வகையான தகவல்கள் என குறிப்பிடுக.

| **தகவல்** | **தகவல் வகை** |
|---|---|
| முகாமையாளர் சிறப்பாக பயிற்றப்பட்ட ஒருவராவர் | |
| வணிகத்தின் மொத்த ஊழியர் 600 பேர் ஆகும் | |
| 2009 ஆண்டின் விற்பனை வருமானம் 2 மில்லியன் ரூபாவாகும் | |

30. சாதாரண விற்பனைக்கு மேலதிகமாக விற்பனையின்றேல் திருப்புக என்ற அடிப்படையில் நிறுவனமொன்றால் 84000 பட்டியலிடப்பட்ட பெறுமதி விற்பனை கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவை கிரயத்தில் 20% இலாபம் சேர்த்து பெறுமதியிடப்பட்டவை ஆகும். இவற்றில் 30% மானவை எஞ்சியிருக்கின்றன. வருட மொத்த இலாபம் 90000 என கணிப்பிடப்பட்டது. மேற்கூறிய செம்மையாக்கலுக்கு பிறகு சரியான மொத்த இலாபம் யாது?

31. கீழ்வரும் அட்டவணையின் இடைவெளிகளை சரியான தொகையினை இட்டு நிரப்புக.

| கணக்கின் பெயர் | 1.1 மீதி | காசாக செலுத்திய தொகை | இலாபநட்ட கணக்கிற்கு மாற்ற வேண்டிய தொகை | 31/12 உள்ள மீதி |
|---|---|---|---|---|
| காப்புறுதி செலவு | 4200 | 6000 | ______________ | 1500 |

32 மற்றும் 33 வினாக்களுக்கு கீழ்வரும் தகவல்களை உபயோகிக்க.

| | |
|---|---|
| 2010.12.31 இருப்பு மூலப்பொருள் | 5000 |
| முடிவுப்பொருள் | 18000 |
| மூலப்பொருள் கொள்வனவு | 21000 |
| தொழிற்சாலை பொதுமேந்தலை | 3000 |
| நேர்க்கூலி | 30000 |

**மேலதிக தகவல்**

2010.10.01இல் முடிவுப்பொருள் 1000 அலகுகள் இருந்தன. இவை இவ்வாண்டு விற்பனை செய்யப்பட்டமை. வருடத்தில் 60000 அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. வருடத்தில் 50000 விற்பனை செய்யப்பட்டமை.

32. முடிவுப்பொருள் ஒன்றின் கிரயம் யாது?

33. நிதியாண்டின் இறுதியில் எஞ்சியிருக்கும் முடிவுப்பொருள் எத்தனை அலகுகள் என்பதை கண்டறிந்து அவற்றை ரூபாவில் தருக?

34, 35 ஆகிய வினாக்களுக்கு கீழ்வரும் தகவல்களை உபயோகிக்க.

கருணாவும் றெக்னோவும் 4:2 இலாபநட்டத்தை பங்கிடும் பங்காளார்கள் ஆவர். கருணா மூலதனமாக 360000 ரூபாவினையும் றெக்னோ 400000 ரூபாவையும் ஈடுபடுத்தியுள்ளனர். இப்பங்குடமையில் ரஞ்சன் 2010.04.01 இணைகிறார். இவர் ரூ. 140 000 இனை மூலதனமாக ஈடுபடுத்தியதோடு புதிய இலாபநட்டவீதம் 3:2:1. அன்று இதன் பின் பங்காளர் தமது இலாபநட்ட விகிதத்திற்கு ஏற்றவகையில் மூலதனத்தினை சீராக்க தீர்மானித்தனர்.

34. கூடிய இலாபம் பெறும் பங்காளரின் மூலதனத்தினடிப்படையில் மூலதனம் சீராக்கப்படின் மூலதன மீதிகள் எவை?

35. குறைந்த இலாபம் பெறும் பங்காளரின் மூலதனத்தின் அடிப்படையில் மூலதனம் சீராக்கப்படின் மூலதன மீதிகள் எவை?

**வினா 36 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு உண்மை அல்லது பொய் என குறிப்பிடுக.**

36. ஐந்தொகை பேரேடுகளின் மீதிகளை மாற்றி தயாரிப்பதல்ல இது மூலதனம், பொறுப்பு, சொத்து மீதிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. (      )

37. குறிப்பிட்ட ஆண்டில் செலுத்தப்படும் செலவானது, அதற்கு அடுத்த ஆண்டிலும் செலவாக இருக்கலாம். (      )

38. வியாபாரமொன்று இலாபமீட்டியிருத்தலானது அந்நிறுவனத்தின் காசு, வங்கி கணக்கில் கட்டாயமாக வெளிப்பட்டிருக்கும். (      )

39. மூலதன இலாபமென்பதில் சொத்து மிகை மதிப்பீட்டு இலாபமும் உள்ளடங்கும். (      )

40. வியாபாரத்தின் ஆராய்ச்சி அபிவிருத்தி செலவு பிற்போடப்பட்ட வருமான செலவு ஆகும். (      )

# பகுதி II

01. விதூஷனும், பிரவிந்தும் பங்குடமையொன்றின் பங்காளர் ஆவர். அவர்களின் ஒப்பந்தம் வருமாறு.
    1. இலாபநட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பங்கிடுகின்றனர்.
    2. வருட ஆரம்ப மீதிக்கு ஏற்றவகையில் மூலதனத்திற்கு 10% வருட வட்டி செலுத்தப்பட வேண்டும்.
    3. வியாபார முகாமை செயற்பாடுகளில் ஈடுபடும் விதூஷனுக்கு ரூபா 2000 மாதாந்த சம்பளம் செலுத்தப்படல் வேண்டும்.

2009.12.31ல் பிரவிந்த் பங்குடமையிலிருந்து விலகி கொண்டார். அத்தினமே விதூஷனின் நண்பரான பாஸ்கர் பங்குடமையில் இணைந்து கொண்டார். இலாபநட்டங்களை சமனாக பங்கிட்டு கொள்வதாகவும், ஏனைய விடயங்களில் பங்குடமையின் பழைய ஒப்பந்தம் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

2010.03.31ல் முடிவுற்ற ஆண்டுக்கான இலாபநட்டக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| நிர்வாக செலவு | 240 000 | மொத்த இலாபம் | 750 000 |
| விற்பனை மற்றும் விநியோக செலவு | 60 000 | பொறியொன்று அகற்றப்பட்டதன் | 20 000 |
| நிதிக்கிரயம் | 20 000 | இலாபம் (2009 ஆகஸ்ட் பொறி | |
| தேறிய இலாபம் | 450 000 | விற்பனை) செய்யப்பட்டது | |
| | **770 000** | | **770 000** |

ஏனைய தகவல்கள்

1. பாஸ்கர் இட்ட மூலதனம் 60000
2. ரூ. 10000 பெறுமதியான பண்டங்களை விதூஷன் பற்றியுள்ளபோதும், இது தொடர்பில் எப்பதிவுகளும் கணக்கேடுகளில் மேற்கொள்ளப்படவில்லை.
3. ரூ. 20000 கடனொன்று அறவிடமுடியாக்கடனாக முடிவுசெய்யப்பட்ட போதிலும், கணக்கேடுகளில் எப்பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.
4. விதூஷன் தனது வருட சம்பளத்தை பெற்றிருந்தார். இது நிர்வாகக் கிரயத்தினுள் அடங்கியிருந்தது.
5. பிரவிந்தின் சொந்த வாகனத்தின் புதுப்பித்தல் செலவு ரூ. 5000 விற்பனை விநியோக செலவில் அடங்கியுள்ளது.
6. 2009.04.01 தினத்தில் பங்காளர்களின் மூலதனம் மற்றும் நடைமுறை கணக்கு மீதிகள் வருமாறு.

| | மூலதனம் | நடைமுறைக்கணக்கு |
|---|---|---|
| விதூஷன் | 80 000 | 8000 செலவு |
| பிரவிந்த் | 60 000 | 3000 வரவு |

7. பிரவிந்தின் விலகல் மற்றும் பாஸ்கரின் சேர்தல் காரணமாக 2009.12.31 தினம் நடைமுறையல்லா சொத்துக்கள், நடைமுறை சொத்துக்கள் பின்வருமாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| காணி கட்டிடம் | 95 000 அதிகரிப்பு |
| தளபாடம், உபகரணம் | 5 000 குறைவு |
| இருப்பு | 10 000 அதிகரிப்பு |
| மீள்மதிப்பீட்டு செலவு | 25 000 |

8. வணிகத்தின் கணனியொன்று அதன் புத்தகப்பெறுமதியான ரூ. 20 000 க்கு விதூஷனால் எடுத்து செல்லப்பட்டது. இது தொடர்பில் எப்பதிவுகளும் இடம்பெறவில்லை.
9. குறித்த காலத்திற்கென சரியான முறையில் இணங்கான முடியாத செலவுகளை காலப்படி பகிர வேண்டும்.
10. விதூஷனின் உரிமைக்கு பணம் செலுத்தப்பட்டது.

வேண்டப்படுவது

1. 2010.03.31 முடிவுற்ற ஆண்டுக்கான இலாபநட்டகணக்கு
2. இலாபநட்ட மூலதன கணக்கு
3. பங்காளர் மூலதன கணக்கு
4. பங்காளர் நடைமுறை கணக்கு
5. மீள்மதிப்பீட்டு கணக்கு

(20 புள்ளி)

02. அ. 2010.03.31ல் முடிவுற்ற ஆண்டின் பின்வரும் தகவல்கள் உமக்கு தரப்படுகின்றன.

2009.04.01 விற்பனை பேரேட்டு கட்டுப்பாட்டு கணக்கு

| | |
|---|---|
| வரவு மீதி | 25 000 |
| செலவு மீதி | 500 |
| கடன்விற்பனை | 305 000 |
| உட்திரும்பல் | 14 000 |
| ஐயக்கடன் ஏற்பாடு | 1 500 |
| வியாபார பாவனைக்கான மோட்டார் கடன்விற்பனை | 58 000 |
| கடன்பட்டோரிடம் பெற்ற காசு | 159 000 |
| பெற்ற காசோலை | 71 000 |
| காசுக்கு விற்பனை | 84 000 |
| கொடுத்த கழிவு | 2 000 |
| 2010.03.31 அன்று விற்பனை பேரேட்டு கட்டுப்பாட்டு கணக்கின் செலவு மீதி | 800 |
| எதிரீடு | 950 |

2010.03.31 தினத்தில் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கின் மீதியும் கடன்பட்டோர் தனிப்பட்ட

நிரல்களின் கூட்டுத்தொகையோடு இணங்கவில்லை. பின்வரும் தவறுகள் கண்டறியப்பட்டன.

1. 2009 மே மாதத்தில் விற்பனை பேரேடு 3000 குறைவாக முன்கொண்டு செல்லப்பட்டது.
2. விற்பனை நாளேட்டின் 840 விற்பனையொன்று கடன்பட்டோர் தனிப்பட்ட கணக்கில் பிழையாக 480 பதிவு செய்யப்பட்டுள்ளது.
3. கடன்பட்டோர் ஒருவரால் திருப்பி அனுப்பட்ட 500 தனிப்பட்ட கணக்குகளில் பதிவு செய்யப்படாவிடினும், ஏனைய அனைத்து பதிவுகளும் சரியான முறையில் இடம்பெற்றுள்ளது,
4. காமினி நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்ட 4000 பெறுமதியான வெளித்திருப்பமொன்று விற்பனை கணக்கில் இடம்பெற்றுள்ளது.
5. றெக்னோவிடமிருந்து கிடைக்கவேண்டிய 2000 பெறுமதியான தொகையொன்று 2009 டிசெம்பர் மாதத்தில் அறவிடமுடியாக்கடனாக தீர்மானிக்கப்பட்டது. இது றெக்னோவின் கணக்கில் சரியாக உள்ளபோதும் கட்டுப்பாட்டுக் கணக்கில் இடம்பெறவில்லை.
6. 2010 பெப்ரவரி மாதம் கடன்பட்டோர் தந்த 3000 காசோலை மறுக்கப்பட்டது. இது கட்டுப்பாட்டு கணக்கில் பதியப்படவில்லை.
7. 4000 உட்திரும்பலொன்று உட்திரும்பல் நாளேட்டில் 6000 என பதியப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது.

1. திருத்தங்களுக்கு முன்னரான கட்டுப்பாட்டு கணக்கு
2. கட்டுப்பாட்டுக் கணக்கினை திருத்துவதற்கான கூற்று

ஆ. வணிகமொன்றில் 2010 மார்ச் 31ம் தினத்தில் இருப்பு கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. இருப்பு கணக்கொடுப்பு 2010 ஏப்ரல் மாதம் 08ம் திகதி மேற்கொள்ளப்பட்டு பௌதீக இருப்பானது 84000 என கணிப்பிடப்பட்டது. 2010 மார்ச் 31ம் திகதி வரை இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு:

1. கொள்வனவு 12000 இவற்றில் 3000 பெறுமதியானவை இன்றும் நிறுவனத்தை வந்தடையவில்லை.
2. விற்பனை 14600 இவற்றில் 4000 பெறுமதியான விற்பனையொன்று ஏப்ரல் 8ம் திகதிவரை வாடிக்கையாளர்கள் எடுத்து செல்லவில்லை.
3. உட்திரும்பல் ரூ.3000
4. வெளித்திரும்பல் ரூ.4200

பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்படுகின்றன.

1. 2010.03.29 அன்று விற்கப்பட்ட பண்டங்கள் வாடிக்கையாளரால் இன்றும் கொண்டு செல்லப்படவில்லை.
2. விற்பனையின்றேல் திருப்புக அடிப்படையில் 2010.03.31அன்று விற்பனை செய்யப்படாது இருந்த, சரக்குகளின் விற்பனை பட்டியல் பெறுமதி 8000 எவ்வாறாயினும் இவை ஏப்ரல் 08 தினம் வரை நிறுவனத்தை வந்தடையவில்லை.
3. விற்பனையின்றேல் திருப்புக் என்ற அடிப்படையில் அனுப்பப்பட்ட பொருட்களுக்கு கிரயத்தில் 25% இலாபம் சேர்க்கப்பட்டுள்ளது.

சரியான இருப்புக்களை கணிப்பிடுக?

03. அ. சில்லறை வியாபாரி ஒருவரின் 2010.10.01 உள்ளவாறான சொத்து, பொறுப்பு விபரங்கள் வருமாறு.

| | |
|---|---|
| கட்டிடம் கிரயத்தில் | 850 000 |
| கட்டிடம் தேறிய பெறுமதி | 170 000 |
| இயந்திர கிரயம் | 100 000 |
| இயந்திர தேய்வு ஏற்பாடு | 15 000 |
| இருப்பு | 80 000 |
| கடன்பட்டோர் | 120 000 |
| கடன்கொடுத்தோர் | 80 000 |

கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 2010 செம்டெம்பர் மாதம் இடம்பெற்றவையாகும்.

1. ரூ. 50 000 மூலதனமிடப்பட்டது.
2. ரூ. 75 000 பெறுமதியான பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு

3. ரூ. 20 000 கிரயமான பண்டங்கள் கிரயத்தில் 20% இலாபம் சேர்த்து கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.
4. மாத இறுதியில் கடன்பட்டோர் மீதியில் 5% ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டது.
5. அனைத்து நிலையான சொத்துகளுக்கும் கிரயத்தில் 10% தேய்விடப்படும்.

**வேண்டப்படுவது:**

1. ஆரம்ப மீதிகளை வகைப்படுத்தி ஐந்தொகையில் காட்டுக.
2. கொடுக்கல் வாங்கல் பின்னரான ஐந்தொகையினை தயாரிக்க.

ஆ. 2010.03.31 தினத்தில் அமலன் டிரேடர்ஸ் வியாபாரத்தில் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி இணங்கவில்லை. இவ்வித்தியாசத்துக்கான தொகை பரீட்சை மீதிக்கு மாற்றப்பட்டது. பின்வரும் தவறுகள் கண்டறிப்பட்டன.

1. மொத்த கொள்வனவு 160 000 கூடுதலாக கூட்டப்பட்டது.
2. டக்ளஸ்க்கு விற்பனை 91 000 எல்லா கணக்குகளிலும் 19 000 என பதியப்பட்டது.
3. தேவாவிற்கு வழங்கிய காசோலை 250 000 காசோலையொன்று காசுப்புத்தகத்தில் சரியாக பதியப்பட்டபோதும், தேவாவின் கணக்கில் பதியப்படவில்லை.
4. கொள்வனவு கணக்கில் செம்டெம்பர் மாதத்தின் முன்கொண்டு சென்ற தொகை 78 000 குறைவாகும்.
5. கஜனிடம் பெற்ற காசோலை 138 000 காசுப்புத்தகத்தில் பதியப்பட்ட போதிலும், கஜனின் கணக்கில் பதியப்படவில்லை.

**வேண்டப்படுவது:**

1. தவறுகளை திருத்துவதற்காக நாட்குறிப்பு பதிவுகள்
2. தொங்கல் கணக்கு

வரையறுக்கப்பட்ட பிரபா நிறுவனத்தில் 2010 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன. இந்நிறுவனம் பெறுமதி சேர் வரி (vat) தொடர்பில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்.

| | |
|---|---|
| 2010 மார்ச் 01 | கொள்வனவு ரூ.6000 பெறுமதி சேர்வரி 15% கருணா நிறுவனத்திடம் அலகொன்று ரூ.30 படி 100 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டது. |
| 2010 மார்ச் 03 | மின்சாரக்கட்டணம் ரூ.4000 பெறுமதி சேர்வரி 15% காசு விற்பனை ரூ. 20 000 பெறுமதி சேர்வரி 15% |
| 2010 மார்ச் 07 | ரூ.3000 படி 200 அலகுகள் கடனுக்கு விற்பனை (ஜெயம் நிறுவனம்) பெறுமதி சேர்வரி 15% |
| 2010 மார்ச் 10 | கைக்காசுக்கு விற்பனை ரூ.8000 பெறுமதி சேர்வரி 15% |
| 2010 மார்ச் 12 | சூர்யா நிறுவனத்துக்கு விற்பனை ரூ. 25 000 பெறுமதி சேர்வரி 15%<br>100 அலகுகள் ரூ.150 படி கடனுக்கு விற்பனை பெறுமதி சேர்வரி 15% |
| 2010 மார்ச் 15 | ஜெயம் நிறுவனத்திடமிருந்து ரூ.8000 கிடைக்கப்பெற்றது.<br>வாடகை ரூ.2000, சம்பளம் ரூ.3000 செலுத்தப்பட்டது.<br>கருணா நிறுவனத்திற்கு செலுத்திய தொகை ரூ. 6000 |

**வேண்டப்படுவது:**

1. காசு பெறுவனவு நிரல்
2. காசு கொடுப்பனவு நிரல்
3. கொள்வனவு நாளேடு
4. விறபனை நாளேடு
5. பெறுமதி சேர்வரி கட்டுப்பாட்டு கணக்கு (Vat கட்டுப்பாட்டு கணக்கு)

ஆ. 2009.01.01 தினத்தில் புவீந்திரன் நிறுவனத்தில் காணப்பட்ட இயந்திரங்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு

| இயந்திர வகை | கொள்வனவு திகதி | கிரயம் | எச்சப் பெறுமதி | பயன்தரு ஆயுட்காலம் |
|---|---|---|---|---|
| X இயந்திரம் | 2005.03.01 | 300 000 | 50 000 | 5 |
| Y இயந்திரம் | 2006.06.30 | 250 000 | 50 000 | 5 |
| Z இயந்திரம் | 2007.10.01 | 400 000 | 40 000 | 5 |

இயந்திரங்களுக்கு நேர்கோட்டு முறையில் தேய்விடப்படுவதோடு, தேய்விடலின்போது கொள்வனவு செய்யும் ஆண்டில் முழு ஆண்டு தேய்வும், விற்பனை செய்யும் ஆண்டில் தேய்விடுவதில்லை என்பது கொள்கையாகும். நிறுவனத்தின் நிதியாண்டு டிசெம்பர் 31ம் திகதி முடிவுறும்.

1. 2010.10.01 தினத்தில் X இயந்திரம் 100 000 விற்பனை செய்யப்பட்டது.
2. Y இயந்திரம் 2008 முதல் குறைந்து செல்லும் முறையில் தேய்விடும் முறைக்கு மாற்றப்பட்டுள்ளது.
3. 2010.07.01 முதல் 2 இயந்திரத்தின் சந்தைவிலை 200 000 வாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

2010.12.31 முடிவுற்ற ஆண்டுக்கான

1. இயந்திர கணக்கு
2. இயந்திர தேய்மான ஏற்பட்டு கணக்கு
3. இயந்திர அகற்றல் கணக்கு

05. மார்ச் 31 முடிவுற்ற காலப்பகுதிக்கு அருணோதயம் விளையாட்டு கழகத்தின் கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| பெறுவனவு | தொகை | கொடுப்பனவு | தொகை |
|---|---|---|---|
| 2009 ஏப்ரல் 01 தினத்தின் மீதி | 30000 | பண்ட கொள்வனவு | 176500 |
| அங்கத்துவ பணம் | 175000 | (கடன்கொடுத்தோர் கொடுப்பனவு) | |
| பதிவு கட்டணம் | 90000 | மின்கட்டணம் | 4500 |
| நுழைவு கட்டணம் | 18000 | கூட்ட செலவு | 6350 |
| பண்ட விற்பனை வருமானம் | 600000 | கட்டிட வாடகை | 9000 |
| வட்டி வருமானம் | 15000 | விற்பனை விளம்பரம் | 1500 |
| | | விற்பனை தரகு | 2100 |
| | | சம்பளம் | 39500 |
| | | 2010.03.31ல் முன் கொ/செ | 688550 |
| 2010.04.01 முன்கொண்டு வந்தது | 928000 | | 928000 |
| | 688550 | | |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்படுகின்றன.

01.

| | 2009.03.31 மீதி | 2010.03.31 மீதி |
|---|---|---|
| பண்ட இருப்பு | 13 500 | 18 900 |
| தளபாடமும், பொருத்திகளும் | 15 000 | 15 000 |
| விளையாட்டு உபகரணம் | 100 000 | 100 000 |
| கிடைக்க வேண்டிய வருமானம் (பண்டவிற்பனை) | 155 100 | 35 100 |
| செலுத்த வேண்டிய வருமானம் (பண்டவிற்பனை) | 90 000 | 312 000 |
| தேய்மான ஏற்பாடு - தளபாடம் பொருத்தி | 1 500 | 3 000 |
| - விளையாட்டு உபகரணம் | 10 000 | 20 000 |

02. அங்கத்துவ பணம் கிடைத்த முறை வருமாறு.
வருட அங்கத்துவ பணம் ரூ.600
கட்டணத்தை செலுத்தியுள்ளனர், மேலும் 100 பேர் நடப்பு ஆண்டு மற்றும் அடுத்த ஆண்டுக்கும் சேர்ந்து கட்டணம் செலுத்தியுள்ளனர்.

03. மின் மற்றும் கட்டிடவாடகையில் 2/3 பங்கு விற்பனை பகுதிக்கு

04. சம்பளம் பண்ட விற்பனை பகுதிக்குரியதாகும்.

**வேண்டப்படுவன:**

1. அருணோதயம் விளையாட்டு கழகத்தின் 2010 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமான செலவு கணக்கு
2. 2010 மார்ச் 31இல் ஐந்தொகை

06. சுசித்ரா டெக்ஸ்டையில்ஸ் நிறுவனத்தில் 2009 மார்ச் மாதம் தொடர்பில் வங்கி கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 2010.03.07 | ராம் (6138) | 88 000 | 2009.03.01 | மீதி | 435 000 |
| 2010.03.22 | தயான் (0059) | 73 000 | 2009.03.08 | சிறிதரன் (5271) | 349 000 |
| 2010.03.31 | விதுரன் (4731) | 249 000 | 2009.03.15 | A-Z நிறுவனம் (5272) | 33 000 |
| 2010.03.31 | சோமு (5130) | 178 000 | 2009.03.28 | கில்பட் (5273) | 115 000 |
| | மீ/கீ/கொ/செ | 344 000 | | | |
| | | **932 000** | | | **932000** |
| | | | | மீ/கீ/கொ/வ | 344000 |

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி | |
|---|---|---|---|---|---|
| 2010.03.01 | மீதி | | | 435 000 | வரவு |
| 2010.03.01 | காசோலை 6138 | | 88 000 | 347 000 | வரவு |
| 2010.03.31 | காசோலை 5271 | 349 000 | | 696 000 | வரவு |
| 2010.03.20 | காசோலை 5272 | 33 000 | | 729 000 | வரவு |
| 2010.03.23 | காசோலை 0059 | | 73 000 | 656 000 | வரவு |
| 2010.03.23 | காசோலை 5272 | 33 000 | | 63 500 | வரவு |
| 2010.03.31 | வில்சன் | | 54 000 | 635 000 | வரவு |
| 2010.03.31 | வரவு மீதி | 382 | | 635 382 | வரவு |

வில்சன் சுசித்ரா டெக்ஸ்டையில்ஸின் வாடிக்கையாளர் ஆவார்

**வேண்டப்படுவது:**

வங்கி கணக்கிணக்கக்கூற்று

(10 புள்ளி)

# ACCA பற்றி சில துளிகள்...

**ACCA என்பது என்ன?**

ACCA பட்டய சான்றுப்படுத்தப்பட்ட கணக்கீடு, நிறுவனமானது உலகில் பாரியதும், வேகமாக வளர்ச்சியடைந்து வருவதுமாக தொழில்சார் கணக்கீட்டு நிறுவனமாகும். 325 000 மாணவர்களையும் 125 000 உறுப்பினர்களையும் தன்னகத்தே கொண்டதோர் பாரிய அமைப்பாகும். ஒவ்வொரு 08 நிமிடத்துக்கு ஒரு தடவை உலகில் எங்கோ ஒருவர் ACCA வுடன் இணைகிறார்.

**ACCA நிறுவனமூடாக பெறக்கூடிய த ம சான்றுகள்**

ACCA - பட்டய கணக்கீட்டு தொழில்சார் தகமை
CAT - பட்டய கணக்கீட்டு தொழில்நுட்ப தகமை
Degree - கணக்கீட்டு தொடர்பான கௌரவ பட்டம்
இதற்கு மேலதிகமாக நிதித்துறையோடு தொடர்புடைய மேலும் சில தகமைகளையும் ACCA வழங்குகின்றது. Dip. FM, ICFE, IFRS

**ACCA இல் காணப்படும் சிறப்பம்சம் யாது?**

2 1/2 வருடத்தில் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொண்ட ஒரு தொழில்சார் தகமையினை பெற்றுக் கொள்ள முடிவதோடு பிரித்தானிய பல்கலைக்கழக மொன்றில் கணக்கீடு தொடர்பில் பெறவேண்டிய பட்டத்தினை பிரத்தியேகமான ஒரு பரீட்சைக்கு தோற்ற வேண்டிய அவசியமில்லை.

**ACCAவில் பதிவு செய்யக்கூடியவர்கள் யார்?**

இது தொடர்பில் உங்களுக்கு 3 சந்தர்ப்பங்கள் உண்டு.

- பதினாறு வயதுக்கு மேற்பட்ட எவருக்கும். (CAT தகமை)
- க.பொ.த சாதாரண பரீட்சையில் திறமைச்சித்தி 3 (கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட) மற்றும் க.பொ.உயர்தரப் பரீட்சையில் திறமைச்சித்தி 2.
- இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட எவருக்கும் (பட்டம் மற்றும் வேறு தொழில்சார் தகமைகளுக்கும் சுதந்திரம் உண்டு).

**ACCA பரீட்சைக்கு பதிவு செய்ய வேண்டியது எப்போது?**

வருடமொன்றில் பரீட்சைகள் இருமுறை இடம்பெறும்.

| Exam | Registration |
|---|---|
| June Exam | Before 31st December |
| December Exam | Before 15th August |

**பரீட்சை யாரால் நடாத்தப்படுகிறது? எங்கு?**

எல்லாவிதமான பரீட்சைகளும் பிரிட்ஷ் கஷன்சிலின் மூலமே நடாத்தப்படுகின்றன. டிசெம்பர் மற்றும் ஜூன் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் பரீட்சை இடம்பெறுவதோடு பரீட்சை எங்கு நடைபெறும் என்பது அனைத்து பரீட்சார்த்திகளும் உரிய காலத்தில் அறிவிக்கப்படும்.

**ACCA தொடர்பில் வகுப்புக் ள நடாத்தும் நிறுவனங்கள்**

**Colombo**
@ Mercury Insitute of Management
@ KBBS
@ MBA
**Kandy**
@ Tianshi International Commerce Insititute

**CEB Exam கணனிசார் பரீட்சை என்பது என்ன?**

ACCAவில் முதல் மூன்று பரீட்சைகளையும் (F1/F2/F3) கணனி மூலம் தோற்றமுடியும். இப்பரீட்சைகள் பிரிட்டிஷ் கவுன்சிலினூடாக நடாத்தப்படுவதோடு, பதிவு செய்வதற்கான தினமொன்று இல்லை என்பதோடு, பரீட்சார்த்தி தாம் விரும்பிய தினத்தில் தோற்ற முடியும். இலங்கையிலிருந்தவாறே இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். இதன்போது பரீட்சை பெறுபேறுகளை அத்தருணமே பெறமுடியும்.

**ACCA பாடத்திட்டம் எவ்வாறானது**

ACCA - இது தொடர்பில் 14 வினாத்தாள்களுக்கு தோற்ற வேண்டும். இவற்றினை 2 1/2 வருட காலத்தில் நிறைவு செய்ய முடியும். ஒரு தடவையில் 4 பாடங்களையே உச்சப்பட்சமாக தோற்ற முடியும். மேலும் ஒரு தடவையில் ஒரு பரீட்சைக்கும் தோற்ற முடியும்.

CAT - பரீட்சைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியதோடு, ஒரு வருடத்தில் நிறைவுசெய்ய முடிவதோடு, பரீட்சார்த்தி விரும்பின் 09 பரீட்சைகளுக்கும் ஒரே தடவையில் தோற்ற முடியும்.

பட்டய கணக்கீடு தொடர்பிலான கௌரவ பட்டம் ACCAவில் 09 பரீட்சைகளை நிறைவு செய்ததன் பின் Bsc பட்டய கணக்கீடு தொடர்பில் பட்டமொன்றை பெற்று கொள்ள முடியும். இப்பட்டத்தினை ஒக்ஸ்போட் பருக்ஸ் பல்கலைக்கழகம் வழங்குவதோடு, இது தொடர்பில் நீங்கள் செய்ய வேண்டியது ஆய்வு அறிக்கையொன்றையே (Research Report) சமர்ப்பிக்க வேண்டும். இப்பட்டத்தினை 1 1/2 வருடத்திற்குள் பெற முடியும்.

**பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் எவை?**

CAT - பிறப்புச் சான்றிதழின் ஆங்கிலப்பிரதி அல்லது கடவுச்சீட்டின் பிரதி மற்றும் புகைப்படம்.
ACCA - பிறப்புச் சான்றிதழின் ஆங்கிலப்பிரதி அல்லது கடவுச்சீட்டின் பிரதி மற்றும் புகைப்படம்.
க.பொ.த (சாதாரணதரம்) மற்றும் (உயர்தரம்) என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
21 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் தமது வயதினை உறுதிப்படுத்த பிறப்புச் சான்றிதழின் ஆங்கிலப்பிரதி (Mature Endry)
பதிவுக்குரிய மேலதிக தகவல்களை ACCA நிறுவனத்திடம் பெற்றுக் கொள்ளவும்.

ACCA

**NEED MORE INFORMATION**
Contact the ACCA Sri Lanka Division
# 424, R A De Mel Mawatha, Colombo 03.
Tel : 2 301 920 / 2 301 923
E mail : infor@lk.accaglobal.com
www.accaglobal.com

# கல்விப் பொதுத்தரதராதர உயர்பரீட்சை முன்னோடி வினாப்பத்திரம் 2010
## கணக்கீடு 2 (பகுதி 1)
# General Certificate of Education (Ad. Level) Examination Mock Paper 2010
## Accounting II (Part I)

ஒரு மணி நேரம்
**One Hour**

சுட்டிலக்கம் ..............................

**பரீட்சார்த்திகளுக்குரிய அறிவுறுத்தல்கள்**
பகுதி I இன் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் 1 புள்ளி வீதம் வழங்கப்படும்.
பகுதி I வினாப்பத்திரத்தை பகுதி II விடைத்தாளுடன் இணைத்து வழங்குதல் வேண்டும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| பகுதி I க்கு | |
| வினா இல | புள்ளி |
| 1 - 20<br>21 - 40 | |
| கூட்டுத்தொகை | |

இலக்கம் 1 இலிருந்து 20 வரையான வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகப் பொருத்தமான விடையை தெரிவுசெய்து அருகிலுள்ள கோட்டிளுள் புள்ளடியிடுக.

01. கிரய கணக்கீட்டின் பிரதான நோக்கமல்லாதது
    1. பண்டமொன்றின்/சேவையொன்றின் கிரயத்தின் அனுமானித்தல்.
    2. கிரய கட்டுப்பாட்டினை ஏற்படுத்தல்.
    3. கிரயத்தகவல்களை முகாமைக்கு வழங்குதல்
    4. ஒவ்வொரு உற்பத்தி தொடர்பில் மொத்த கிரயம் போன்றே அலகு கிரயத்தையும் அனுமானித்தல்.
    5. முடிவுற்ற ஒரு நிதியாண்டின் உண்மையான கிரயத்தகவல்களை உயர்மட்ட முகாமைக்கு வழங்குதல்.

02. கிரயக் கணக்கீட்டிற்கும், நிதி கணக்கீட்டிற்குமிடையிலான வேறுபாடு என இனங்காணக்கூடியது கீழ்வருவனவற்றுள்
    1. கணக்கீட்டு முறைமை இரண்டும் ஒரே தகவல் மூலத்தை பயன்படுத்துகின்றன.
    2. இரட்டைப்பதிவு முறைமை இரு கணக்கீட்டு முறைகளிலும் காணப்படுகிறது.
    3. இவையிரண்டும் நோக்கம் தீர்மானமெடுத்தலுக்கான தகவல்களை வழங்குதல் ஆகும்.
    4. நிதிக்கணக்கீடு கடந்தகாலத் தகவல்களை கணக்கீடுவதோடு, கிரயக் கணக்கீடானது எதிர்காலத் தகவல்களை/அனுமானிக்கப்பட்ட தகவல்களை கொண்டு தயாரிக்கப்படுகிறது.
    5. மேற்கூறிய யாவும்

03. மாறும் கிரயத்தில் (Variable Cost) காணக்கூடிய பண்பு அல்லாதது
    1. உற்பத்தி செய்யப்படும் பொருள் அல்லது சேவையின் அலகுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாறுகின்ற கிரயம் மாறும் கிரயம் ஆகும்.
    2. உற்பத்தி செய்யும் பொருள் அல்லது சேவையின் அலகுகள் அதிகரிக்குமிடத்து அலகுகளின் எண்ணிக்கைக்கு சமனாக மாறும் கிரயமும் அதிகரிக்கும்
    3. உற்பத்தி செய்யும் அளவு குறையுமிடத்து மாறும் கிரயமும் குறையும்.
    4. உற்பத்தி பூச்சியமெனின் மாறும் கிரயம் ஏற்படமாட்டாது
    5. உற்பத்தி இடம்பெறாவிடினும் மாறும் கிரயம் ஏற்படும்.

**கீழ் தரப்பட்ட தகவல்கள் 05, 06 வினாவுக்குரியவை ஆகும்.**

| | |
|---|---|
| சராசரி பயன்பாடு ஒரு நாளுக்கு | 350 அலகுகள் |
| இழிவு பயன்பாடு ஒரு நாளுக்கு | 180 அலகுகள் |
| உச்ச பயன்பாடு ஒரு நாளுக்கு | 420 அலகுகள் |
| மறுகட்டளை காலம் | 11 - 15 நாட்கள் |
| மறுகட்டளை அளவு | 6500 அலகுகள் |
| மறுகட்டளை மட்டம் | 6300 அலகுகள் |

04. மேற்கூறிய தகவல்களின்படி உச்ச இருப்பு மட்டம் யாது?
    1. 5250 2. 6500 3. 10820

4. 12800 5. 12600

05. பாதுகாப்பு மட்டம் யாது?
1. 200 2. 720 3. 1680
4. 1750 5. 1800

06. பொருளாதார கட்டளை கணியம் 400 அலகுகள் கட்டளையிடல் செலவு ரூ. 20 வருடாந்த கேள்வி ரூ. 24, 000 வருடாந்த இருப்பினை பேணுவதற்கான களஞ்சியப்படுத்தல் செலவு யாது?
1. ரூ. 6.00 2. ரூ. 12.00 3. ரூ. 18.00
4. ரூ. 36.00 5. ரூ. 35.00

07. கீழ்வரும் தகவல்களை உற்பத்திதுறை தொடர்பானவை ஆகும்.

| | |
|---|---|
| ஒரு நாளுக்கான சாதாரண வேலை மணித்தியாலம் | 7மணி |
| மணித்தியாலத்துக்கான கொடுப்பனவு | ரூ.5 |
| ஒரு அலகு உற்பத்திக்கான நியம நேரம் | 4 நிமிடம் |
| மிகையூதிய கொடுப்பனவு | 60% (எஞ்சிய காலத்தில்) |

ஒரு நாளொன்றில் ஊழியரொருவர் ரூ.180 அலகுகளை உற்பத்தி செய்தல் அவரது மொத்தகூலி யாது?
1. ரூ. 35.00 2. ரூ. 56.00 3. ரூ. 50.00
4. ரூ. 60.00 5. ரூ. 70.00

08. மேந்தலை கிரயத்தை கணக்கிடுவதன் பிரதான நோக்கம் கீழ்வருவனவற்றுள் எவை?
A - உற்பத்தி தொடர்பான கிரயங்களை இனங்கண்டு கொள்ள.
B - நிறுவனமொன்று ஒவ்வொரு துறை மற்றும், செயற்பாடுகளின் கிரயத்தை கண்டறிதல்.
C - மேந்தலைகளை கண்டறிந்து கட்டுப்படுத்த.
D - நேர்ச்செலவுகளை இனம்காணவும் கட்டுப்படுத்தவும்.

1. A மற்றும் B 2. A, B மற்றும் C 3. A, B, D
4. A, B, C, D 5. A, C

**கீழ்வரும் தகவல்கள் 09, 10 ஆம் வினாக்களுக்குரியவை ஆகும்.**

| | நியமம் | உண்மை |
|---|---|---|
| உற்பத்தி | 8 000 (அலகுகள்) | 9 000 (அலகுகள்) |
| அலகொன்றின் மாறும் கிரயம் | 3.00 | 3.00 |
| நிலையான கிரயம் | 360 000 | 432 000 |
| விற்பனை | 6 000 (அலகுகள்) | 8 000(அலகுகள்) |

09. உற்பத்திக்கான உச்சம் இடம்பெறின் ஏற்படும்
1. 384 000 2. 405 000 3. 432 000
4. 360 000 5. 36 200

10. இலங்கையின் கணக்கீட்டு நிறுவனம்
1. இலங்கை பட்டய கணக்கீட்டு நிறுவனம் 2. இலங்கை கணக்கீட்டு மத்திய நிலையம்
3. தேசிய கணக்கீட்டு பேரவை 4. இலங்கை கணக்கீட்டு நியமமாக்கல் சபை
5. மேற்கூறிய எவையுமன்று

11. வியாபாரமொன்றில் முகாமை தீர்மானமெடுக்கும்போது நிலையான கிரயம், மாறும் கிரயம் ஆகிய இரண்டும் முக்கியம் பெறுகின்றன. ஆனால் எல்லைக்கிரயவிலை பொறுத்தமட்டில் மாறும் கிரயமே முக்கியம் பெறுகிறது. இதற்கான காரணமாக அமைவது
1. மாறும் கிரயமானது குறுங்காலத்தில் மாறுகின்ற கிரயம் என்பதால் ஆகும்.
2. நிலையான கிரயம் குறுங்காலம் தொடர்பில் தொடர்பற்ற ஒன்று என்பதால் ஆகும்.
3. நிலையான கிரயம் எப்போதும் தாங்க வேண்டிய ஒன்று என்பதோடு குறுங்காலத்தில் மாறாத கிரயமாக காணப்படுவதால் ஆகும்.
4. முகாமை தீர்மானமெடுக்க மிகவும் முக்கியமானது மாறும் கிரயம் என்பதால் ஆகும்.
5. எல்லைக்கிரயத்தை கணிப்பிடும்போது நேரடியாக கருத்திற்கொள்ளுவதாக மாறும் கிரயம் மட்டும் காணப்படல் ஆகும்.

12. பங்களிப்பு விற்பனை வீதத்தை கணிப்பிடும் சமன்பாடு அல்லாதது

1. $\frac{\text{அலகொன்றின் விற்பனை}}{\text{அலகொன்றின் விற்பனை விலை}} \times 100$ 2. $\frac{\text{மொத்த பங்களிப்பு}}{\text{மொத்த விலை}} \times 100$

3. $\frac{\text{மொத்த பங்களிப்பு}}{\text{உற்பத்தி அலகுகள்}}$ 4. $\frac{\text{பங்களிப்பில் ஏற்பட்ட மாற்றம்}}{\text{விற்பனை விலையில் ஏற்பட்ட மாற்றம்}}$

5. $\frac{\text{தேறிய இலாபம்}}{\text{இலாப வீதம்}}$

**13 ஆம் 14 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க கீழ்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

கம்பனியொன்று சாதாரண பங்குகள் 60, 000 இனை பங்கொன்று ரூ.12.50 படி விநியோகித்தது. விண்ணப்பதில் ரூ.4.50 ஒதுக்கலில் ரூ.4.00 மிகுதி அழைப்பிலும் பெறப்படும்.

விண்ணப்பங்கள் கீழ்வருமாறு வகையிடப்பட்டுள்ளது

| விண்ணபித்த பங்குகளின் எண்ணிக்கை | பங்கு 1 - 100 வரை | பங்கு 101 - 500 வரை | 501க்கு மேற்பட்ட பங்குகள் |
|---|---|---|---|
| கிடைத்த விண்ணப்ப எண்ணிக்கை | 1200 | 175 | 5 |
| விண்ணப்பித்த பங்குகளின் எண்ணிக்கை | 70000 | 35000 | 5000 |
| ஒதுக்கிய பங்குகளின் எண்ணிக்கை | 42000 | 14000 | 4000 |

மேலதிக விண்ணப்பப்பணம் ஒதுக்கலுக்கு பயன்படுத்தப்பட்டது.

13. 1000 பங்குகளுக்கு விண்ணபித்த ஒருவருக்கு கிடைக்கும் பங்குகள் எவை?
1. 166 2. 400 3. 600
4. 800 5. 1000

14. 70 பங்குகளுக்கு விண்ணபித்த ஒருவா் ஒதுக்கலின் போது செலுத்த வேண்டிய தொகை யாது?
1. ரூ.112 2. ரூ.280 3. ரூ.42
4. ரூ.168 5. ரூ.250

15. வருடத்திற்கு 40, 000 தேறிய காசு பாய்ச்சலுடைய இயந்திரமொன்றின் முதலீடு திரும்பி வரும் காலம் 2 வருடம் 3 மாதம் ஆகும். இவ்இயந்திரத்தின் மூலக்கிரயம் யாது?
1. 100 000 2. 90 000 3. 80 000
4. 75 000 5. 79 000

16. SLAS 03 படி வெளிப்படுத்தலின் நோக்கம் யாதெனில்
1. வியாபாரமொன்றின் நிதிநிலை தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தல்.
2. குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்ட உரிமை மாற்றத்தை வெளிப்படுத்தல்.
3. குறிப்பிட்ட காலத்தின் வியாபாரத்தின் இலாபநட்டத்தை வெளிப்படுத்தல்.
4. நிதிநிலமை, இலாபத்தன்மை, காசு பாய்ச்சல் பற்றி அக்கறையுடைய தரப்பினருக்கு தகவல் வழங்குதல்.
5. குறிப்பிட்ட காலத்தில் காசுப்பாய்ச்சலில் ஏற்பட்ட மாற்றத்தை வெளிப்படுத்தல்.

17. இலாபத்தன்மையை அளவிட பயன்படுத்தப்படாத விதம் எது?
1. திரவ விகிதம் 2. மொத்த இலாப விகிதம்
3. தேறிய இலாப விகிதம் 4. மொத்த மூலதனத்திற்கான திரும்பல் வீதம்
5. பங்கு மூலதனத்திற்கான திரும்பல் வீதம்

18. கடந்த காலங்களில் கம்பனியின் பங்குதாரர்களின் உரிமையில் ஏற்படும் மாற்றத்தை வெளிப்படுத்தும் கூற்று
1. வருமானகூற்று 2. ஐந்தொகை
3. உரிமை அசைவுக்கூற்று 4. சொத்து அசைவுகூற்று
5. வருடாந்த அறிக்கை

19. SLAS 10 படி வழு ஒன்றிற்கு உதாரணமாக கொள்ள முடியாதது
   1. களஞ்சியத்தில் இருந்த வியாபாரத்திற்கு சொந்தமற்ற பண்டங்கள் கணக்கிலெடுக்கப்பட்டது
   2. பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யும்போது 20மூ செய்யப்பட வேண்டும், எனினும் 2% ஏற்பாடே செய்யப்பட்டது.
   3. விற்பனை கணக்கில் கொள்வனவு ஒன்று பதிவிடப்பட்டது
   4. ஐந்தொகை திகதியில் காணப்பட பொறுப்பொன்றை பதிவுசெய்யாமை
   5. கொள்வனவு கணக்கில் ரூ.5000 குறைந்து கூட்டப்பட்டது

20. ஒதுக்கமொன்று மேற்கொள்ள வேண்டியது
   1. வரி ஒதுக்கமாக ஆகும்
   2. அனுமானிக்கப்பட்ட பெறுமதிக்கு ஆகும்
   3. நிகழ்காலத்தோடு தொடர்புறும் வகையில் ஆகும்
   4. இலாப, பகிர்வு கணக்குகளின் தொடர்புறும் வகையில் ஆகும்
   5. மேற்குறிப்பிட்ட I, II, III க்கு அமையவாகும்

**21 முதல் 35 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடையளிக்க.**

21. இழிவு இருப்பு மட்டத்தினை பேணுவதால் பெறக்கூடிய அனுகூலங்கள் 2 தருக.
   1.
   2.

22. மேந்தலைக்கிரயம் யாவும் நிலையானக்கிரயம் ஆகும். இக்கூற்றை நீர் ஏற்பீரா? தெளிவுபடுத்துக.

**23 மற்றும் 24 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க கீழ்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

வரையறுத்த தயானி கம்பனியின் வருடாந்த கொள்வனவு மற்றும் விற்பனை வருமாறு

| | |
|---|---|
| விற்பனை | 4480000 |
| கொள்வனவு | 3360000 |

இக்கொடுக்கல் வாங்கல்களில் 12% பெறுமதி சேர்வரி (vat) உள்ளடங்கியுள்ளது.

23. மேந்தகவல்களின்படி மொத்த வரியை கணிப்பிடுக?

24. செலுத்த வேண்டிய அல்லது அறவிடக்கூடிய வரி எவ்வளவு?

25. நேரில் முறையின் வெளிப்படுத்தலின் போது தொழிற்பாட்டு முறையிலமைந்தவற்றில் கீழ்வருவன உள்ளடங்குமா? இல்லையா?

| தொழிற்பாட்டு செயற்பாடு | உள்ளடங்குமா? இல்லையா? |
|---|---|
| 1. நிதி ரீதியற்ற நட்டம் மற்றும் செலவு | ________ |
| 2. நடைமுறை சொத்து குறைவு | ________ |
| 3. நிதி ரீதியற்ற இலாபம் மற்றும் வருமானம் | ________ |
| 4. நடைமுறை பொறுப்பு குறைவு | ________ |

26. சில மேந்தலைகள் கீழ் தரப்பட்டுள்ளன. இக்கிரயங்களை ஒதுக்கும்போது பயன்படுத்தக்கூடிய அடிப்படைகள் எவை?

| மேந்தலை | ஒதுக்கீடு செய்யக்கூடிய அடிப்படை |
|---|---|
| 1. சொத்து காப்புறுதி, சொத்து புதுப்பித்தல் | ________ |
| 2. ஊழியர் மேற்பார்வை செலவு, போசணை சாலை செலவு | ________ |

27. சம்பளப்பட்டியலொன்று தயாரிக்கும்போது பயன்படுத்தும் மூல ஆவணங்கள் 4 இனை தருக?
   1.
   2.
   3.
   4.


28. வரையறுத்த கயல்விழி கம்பனியின் 2010.03.31 அன்று 11 மில்லியன் ரூபா கடன்பட்டோர் ஒருவர் 2010.07.15 தினத்தில் முறிவடைந்தார். இறுதியில் கடன்தொகையில் 30% பெற முடியும் என அனுமானிக்கப்படுகிறது.

நீர் இந்நிறுவனத்தின் கணக்காளர் எனின் SLAS 12 படி 2010.03.01 இல் உள்ள ஐந்தொகையில் இதனை எவ்வாறு வெளிப்படுத்துவீர்?

29. போனஸ் பங்கு வழங்கலின் போது கவனிக்க வேண்டிய இரு காரணிகளும் எவை?
  1.
  2.

30. 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனி சட்டத்திற்கமைய அட்டுறுவான பங்குகள் தொடர்பில் பின்பற்றக்கூடிய இரு வழிமுறைகளும் எவை?
  1.
  2.

31. கீழ்வரும் சமப்பாடு புள்ளி வரைபடத்தினூடாக வெளிப்படுத்தப்படுபவை எவை?




A =
B =
C =
D =

32. எல்லைக்கிரயவியலில் பாதுகாப்புமட்டம் என்றால் என்ன? என்பதையும், கணிப்பிடும் முறையையும் குறிப்பிடுக?

33. SLAS 10 படி கணக்கீட்டு கொள்கை மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய இரு சந்தர்ப்பங்களும் எவை?
  1.
  2.

34. இலாபத்தன்மை மற்றும் திரவத்தன்மை விளக்குக.
  1. இலாபத்தன்மை
  2. திரவத்தன்மை

35. தீர்மானமெடுத்தல் தொடர்பில் தேறிய நடைமுறை பெறுமதி முறையின் நன்மைகள் 2 ஐயும் குறிப்பிடுக.

**36 முதல் 40 வரையான வினாக்களுக்கு ✓, ✗ கூறுக.**

36. ஏதேனும் பண்டமொன்றின் கிரயத்தில் வருமானம் உழைக்க பங்களிப்பு செய்த தொகை “செலவு” எனப்படும்.

37. கம்பனிச்சட்டத்திற்கமைய பங்குகள் பிரதானமாக இரு வகைப்படும்

38. இரட்டைப்பதிவு முறையை பயன்படுத்தி இருப்பு மட்டங்களானது கணிப்பிடப்படுகிறது.

39. கணக்கீட்டை பயன்படுத்தும் தரப்பினர் அடிப்படையில் நான்கு வகையாக்கலாம்.

40. SLAS 09 படி காசு பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும்போது பங்கு வழங்கலின் பெறும் பணம் முதலீட்டு நடவடிக்கை ஆகும்.

# பகுதி II

01. வரையறுத்த ஜோன் பொதுக்கம்பனியின் கணக்கு தயாரித்த பின்னர் காணப்படும் 2010.03.31ல் உள்ள பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| சாதாரண பங்கு வெளிப்படுத்திய மூலதனம் | | 300 000 |
| 20% மீட்கதக்க முன்னுரிமை பங்கு வெளிப்படுத்திய மூலதனம் | | 200 000 |
| பொது ஒதுக்கம் | | 190 000 |
| 2009.04.01 தினத்தில் இலாபநட்ட கணக்கு | 43 200 | |
| காணிகட்டிடம் கிரயத்தில் | 850 000 | |
| உபகரணங்கள் கிரயத்தில் | 510 000 | |
| மோட்டார் கிரயத்தில் | 160 000 | |
| கடன்கொடுத்தோர் | | 36 400 |
| கடன்பட்டோர் | 20 800 | |
| 2009.04.01 பெறுமான தேய்வு ஏற்பாடு | | |
| உபகரணம் | | 320 000 |
| மோட்டார் | | 48 000 |
| 15% கடன் | | 120 000 |
| 2010.03.31ல் இருப்பு | 128 000 | |
| மொத்த இலாபம் | | 990 250 |
| 2009.04.01ல் வரி ஏற்பாடு | | 61 000 |
| வருமான வரி செலுத்தியது | | |
| 2008/2009 தொடர்பில் | 55 000 | |
| 2009/2010 தொடர்பில் | 157 000 | |
| பங்கிலாபம் (இடைக்காலம்) முன்னுரிமைப்பங்கு | 20 000 | |
| சாதாரணபங்கு | 40 000 | |
| தொடக்கசெலவு | 1 500 | |
| வங்கி மேலதிக பற்று | | 68 000 |
| நிர்வாக செலவு | 143 800 | |
| விற்பனை விநியோக செலவு | 107 850 | |
| ஏனைய செலவு | 53 200 | |
| 2009.04.01 ஐயக்கடன் ஏற்பாடு | | 3 200 |
| காசு | 136 000 | |
| | **2 326 850** | **2 326 850** |

**மேலதிக தகவல்கள்**

01. இருப்புக்களின் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூ. 124 000
02. பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்படுகின்ற முறை வருமாறு
    உபகரணம் - குறைந்து செல்லும் மீதி முறை 10%
    மோட்டார் - கிரயத்தில் 15%
03. 2010.03.31 தினத்தில் சென்மதி செலவுகள் வருமாறு
    கணக்கீட்டு கட்டணம் 15 000
    ஊழியர் மிகையூதியம் 60 000
    இயக்குனர் கட்டணம் 25 000
04. 2008/2009 தொடர்பில் இறுதி வரி பொறுப்பு ரூ. 55 000 2009/2010 தொடர்பில் ரூ. 215 500 வரியாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.
05. வருடத்தில் விற்பனை புரள்வு ரூ. 2 500 000
06. வருடத்தினுள் இடம்பெற்ற தீவிபத்தினால் ரூ. 150 000 கிரயமான கட்டிடமொன்று முழுமையாக தீக்கிரையானது. இது தொடர்பில் ரூ. 95 000 வினை தருவதாக காப்புறுதி நிறுவனம் ஒப்புக்கொண்டது. இது தொடர்பான எப்பதிவுகளும் கணக்கேடுகளில் இல்லை.
07. ஐயக்கடன் தொடர்பில் கடன்பட்டோரில் 10மூ ஏற்பாடு செய்ய வேண்டும்.
08. இயக்குனர்களின் தீர்மானங்கள் வருமாறு
    அ. 2009.03.31ல் காணப்படும் அனைத்து சாதாரண பங்குகள் ரூ. 20 க்கு ஒன்று என்ற ரீதியில் போனஸ் பங்குகள் வழங்கப்படும் (இப்போனஸ் பங்குகளுக்கு 2009/2010 இலாபப்பங்கு

கிடையாது).

ஆ. பொது ஒதுக்கத்திற்கு ரூ. 15 000 ஏற்பாடு செய்யவேண்டும்

இ. சாதாரண பங்குகளுக்கு 15% இலாபமும், முன்னுரிமை பங்குகளுக்கு எஞ்சிய பங்கிலாபத்தையும் வழங்கவேண்டும்.

வேண்டப்படுவது:

1. வருமானகூற்று
2. ஐந்தொகை

வரையறுக்கப்பட்ட ஆர்னல்ட் பொதுக்கம்பனியின் 2010.03.31இல் பரீட்சை மீதியிலிருந்து பெயர்த் தெடுக்கப்பட்ட சில மீதிகள் வருமாறு

| **விபரம்** | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| காணி கட்டிடம் (கிரயத்தில்) | 880 000 | |
| காரியாலய உபகரணம் (கிரயத்தில்) | 430 000 | |
| மோட்டார் (கிரயத்தில்) | 390 000 | |
| பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | |
| காணி கட்டிடம் | | 70 000 |
| காரியாலய உபகரணம் | | 45 000 |
| மோட்டார் | | 40 000 |

01. ரூ. 100 000 பெறுமதியான காணியொன்று கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் கணக்கேடுகளின் பதிவு செய்யப்படவில்லை.

02. 2006.01.01 தினத்தில் ரூ. 60 000க்கு கொள்வனவு செய்யப்பட்ட காரியளவில் உபகரணம் 2010.01.01 அன்று ரூ. 41 000க்கு விற்பனை செய்யப்பட்டது. பெற்ற காசு காசுக் கணக்கிலும், விற்பனை கணக்கிற்கும் பதிவிடப்பட்டதை தவிர வேறு எப்பதிவும் இடம்பெறவில்லை.

03. காணி கட்டிடங்கள் கிரயத்தில் 10% உபகரணங்களுக்கு கிரயத்தில் 12% மோட்டார்களுக்கு குறைந்து செல்லும் மீதி முறையில் 8% பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்படும்.

**வேண்டப்படுவது:**

சொத்து, பெறுமானத்தேய்வு அட்டவணை

02. வரையறுத்த நாஜீவ் நிறுவனத்தின் 2010.03.31இல் உள்ளவாறான ஐந்தொகையின் சுருக்கம் வருமாறு

| **விபரம்** | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| சாதாரண பங்கு 90 000 | | 900 000 |
| முன்னுரிமை பங்கு 30 000 | | 300 000 |
| **ஒதுக்கங்கள்** | | |
| பொதுஒதுக்கம் | | 190 000 |
| இலாபநட்டகணக்கு | | 360 000 |
| செலுத்திய சம்பளம் (தேறிய) | 27 600 | |
| செலுத்திய ஊழிய சேமலாப நிதிய கொடுப்பனவு | 6 000 | |
| செலுத்திய ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவு | 900 | |

**ஏனைய தகவல்கள்**

01. 2009.08.10 சாதாரண பங்குகள் 10 000 பங்குகள், ரூ. 11 படி வழங்கப்பட்டு பணம் உடனடியாக பெறப்பட்டது.

02. 2009.08.01 தினத்தில் காணப்பட்ட அனைத்து சாதாரண பங்குகளுக்கும் 20:1 என்ற ரீதியில் போனஸ் வழங்கல்

03. செலுத்த வேண்டிய சம்பளம் ரூ. 20 000

04. அனைத்து ஊழியருக்கும் ஊழியர் சேமலாபநிதியம் தொடர்பில் 8% ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு 3% ஆகும்.

**வேண்டப்படுவது:**

2010.03.31ல் முடிவுற்ற ஆண்டின் இலாபநட்டக்கணக்கு, ஐந்தொகை சுருக்கம்

03. அ. வரையறுக்கப்பட்ட குகராஜன் பொதுக்கம்பனியின் 1050 இலக்கமுடைய பண்டம் தொடர்பாக 2010 ஜனவரியில் உள்வந்த, அனுப்பிய விதம் கீழ் தரப்பட்டுள்ளது.

| திகதி | உள்வருகை (அலகு) | அனுப்பியவை (அலகு) | கொள்வனவு விலை | விலை |
|---|---|---|---|---|
| 01/01 | 200 | - | 4.00 | - |
| 01/05 | 400 | - | 4.50 | - |
| 01/08 | - | 180 | - | 4.90 |
| 01/10 | - | 240 | - | 4.95 |
| 01/15 | 180 | - | 5.00 | - |
| 01/20 | - | 240 | - | 5.25 |

பொருட்கள் விலையிடப்பட்டபின் முதல் வந்தது முதல் செல்லும் (FIFO) முறையில் இடம்பெறுவதாக கொண்டு களஞ்சிய பேரேட்டினைத் தயாரிக்க.

ஆ. வரையறுத்த ஷெரோன் கம்பனியின் X1 மற்றும் X2 ஆகிய உற்பத்தித்துறைகள் மற்றும் S1 எனும் பெயரில் சேவைத்துறை ஒன்றும் உள்ளது. 2010 மார்ச் மாதத்தில் கிரயங்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| வாடகை | 21 000 |
| நேரில் கூலி | 220 000 |
| இயந்திர காப்புறுதி | 22 000 |
| வலு | 105 000 |
| மின்சக்தி | 13 000 |
| ஊழியர் நலன்புரி | 44 000 |

ஒவ்வொரு துறைகள் தொடர்பான தகவல்கள் வருமாறு

| | X1 | X2 | S1 |
|---|---|---|---|
| ஊழியர் எண்ணிக்கை | 10 | 10 | 2 |
| இயந்திரம் (கிரயத்தில் ரூ.000) | 1 400 | 800 | - |
| இயந்திர மணி | 2 000 | 1 500 | - |
| நிலப்பரப்பு (சதுர கிலோமீட்டர்) | 1 000 | 1 000 | 1 000 |

சேவைத்துறையானது இயந்திரங்கள் இயங்குகின்ற மணித்தியாலங்களின் அடிப்படையிலே சேவை வழங்குகின்றன.

**வேண்டப்படுவது**

1. மேந்தலைகளை உரிய வகையில் பங்கிடுக.
2. அலகொன்றை உற்பத்தி செய்ய X1 துறைக்கு 06 மணியும், X2 05 மணியும் செலவாகும் எனில், ஒரு அலகுக்கான மேந்தலையினை கணிப்பிடுக.

வரையறுத்த சரண் (பொது) கம்பனியின் ரூ. 12 வான சாதாரண பங்குகள் 60 000 த்தினை வெளியிட்டுள்ளது. அவற்றிற்கு கிடைத்த விண்ணப்ப விபரம் வருமாறு

| | |
|---|---|
| வெளிநாட்டவர் | 10 000 |
| இயக்குனர்கள் | 20 000 |
| பழைய பங்குதாரர்கள் | 50 000 |
| புதிய விண்ணப்பங்கள் | 20 000 |
| | **100 000** |

பங்குகளுக்குரிய பணம் பின்வருமாறு சேகரிக்கப்படும்
விண்ணப்பம் ரூ.4, ஒதுக்கம் ரூ.5, அழைப்பு ரூ.3
விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1. வெளிநாட்டவர் விண்ணப்பங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டது.
2. இயக்குனர்களுக்கு முழுமையாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.
3. பழைய பங்குதாரர்களுக்கு 30 000 பங்குகள் ஒதுக்கப்பட்டது.
4. புதிய பங்குதாரருக்கு 10 000 பங்குகள் ஒதுக்கப்பட்டது

**மேலதிக தகவல்**

ஒதுக்கல் மற்றும் அழைப்பின் போது காணப்பட்ட நிலுவைகள் வருமாறு

1. இயக்குனர்களின் 1000 பங்குகள் (ஒதுக்கப்பட்டவை).
2. பழைய பங்குதாரர்களின் 300 பங்குகள் (ஒதுக்கப்பட்டவை).
3. புதிய பங்குதாரர்களின் 50 பங்குகள் (ஒதுக்கப்பட்டவை).

புதிய பங்குதாரரின் நிலுவை நிராகரிக்கப்பட்டது.

**வேண்டப்படுவது:**

தேவையான நாட்குறிப்பு பதிவுகள்

ஆ. 2010 மார்ச் 31ம் திகதியில் வரையறுக்கப்பட்ட ரவி நிறுவனத்தின் முழு சொத்தின் பெறுமதி 1 000 000 ஆகும். இம்முழுச்சொத்தில் 40% வையை 8% மான கடன்களிலிருந்தே பெறப்பட்டது. விற்ற சரக்கின் கிரயம் ரூ. 600 000, கடன்வட்டி தவிர்ந்த ஏனைய செலவுகள் ரூ. 118 000, நிறுவனத்தின் மொத்த இலாபவீதம் 33 $^1/_3$ ஆகும், வரி வீதம் தேறிய இலாபத்தில் 40% ஆகும்.

**வேண்டப்படுவது:**

1. 2010 மார்ச் 31ல் முடிவுற்ற ஆண்டின் வருமானக்கூற்று
2. தேறிய இலாபவீதம், சொத்து திரும்பல் என்பவற்றை கணிப்பிடுக.

05. கீழ்வரும் தகவல்கள் சச்சின் கம்பனியின் 2009/2010 தொடர்பானவை ஆகும்.

A. மார்ச் 31ல் ஐந்தொகை

| விபரம் | 2009 | 2010 | விபரம் | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|
| உரிமை | | | நடைமுறையல்லா சொத்து (குறைந்து வழுதிய பெறுமதியில்) | | |
| 10% மான சா/பங்கு | 300 000 | 400 000 | | | |
| பொது ஒதுக்கம் | 50 000 | 100 000 | | | |
| இலாபநட்ட கணக்கு | 250 000 | 280 000 | | | |
| | 600 000 | 780 000 | மோட்டார் | 400 000 | 230 000 |
| நீண்டகால கடன் வங்கி கடன் | 260 000 | 200 000 | தளபாடம் | 400 000 | 790 000 |
| நடைமுறை கடன் | 80 000 | 200 000 | நடைமுறை சொத்து | | |
| கடன்கொடுத்தோர் | 10 000 | - | இறுதி இருப்பு | 20 000 | 40 000 |
| செ/வேண்டிய வட்டி | 5 000 | 10 000 | கடன்பட்டோர் | 50 000 | 100 000 |
| செ/வேண்டிய வருமானவரி | | | வங்கி, காசு | 100 000 | 40 000 |
| பிரேரித்த பங்கிலாபம் | 15 000 | 10 000 | | | |
| | **970 000** | **1 200 000** | | **970 000** | **1 200 000** |

B. 2010 மார்ச் 31 தினத்தில் காசு பெறுபனவு, கொடுப்பனவு சுருக்கம்

| காசுப்பெறுபனவு | தொகை | காசுக்கொடுப்பனவு | தொகை |
|---|---|---|---|
| கடன்பட்டோர் தந்த காசு | 750 000 | கடன்கொடுத்தோர் | 500 000 |
| பங்கு வழங்கல் | 150 000 | தொழிற்பாட்டுச் செலவு | 60 000 |
| மோட்டார் விற்பனை | 160 000 | வட்டி செலுத்தியது | 30 000 |
| | | வரி செலுத்தியது | 25 000 |
| | | பங்கு இலாபம் | 45 000 |
| | | வங்கிக் கடன் செலுத்தியது | 60 000 |
| | | தளபாட கொள்வனவு | 400 000 |

C. 2010.03.31 தினத்தில் முடிவுற்ற ஆண்டின் பெறுமான தேய்வு விபரம்

மோட்டார் வாகனம் 20 000

தளபாடம் 10 000

**வேண்டப்படுவது:**

அ. நேரில் முறையில் காசு பாய்ச்சல் கூற்று

ஆ. நேர் முறையில் தொழிற்பாட்டு செயற்பாட்டில் ஏற்பட்ட காசு பாய்ச்சல்

06. சக்தி உற்பத்தி கம்பனியானது சிறுவருக்கான விஷேட பென்சில் வகைகளை தயாரிக்கும் உற்பத்தியை ஆரம்பித்தது. இது தொடர்பில் ரூ. 60 000 நிலையான செலவு ஏற்படுகிறது மற்றும் மேலதிக தகவல் வருமாறு

நேர்ப்பொருள் (அலகொன்றுக்கு) ரூ. 50

நேர்க்கூலி (அலகொன்றுக்கு) ரூ. 30

இலாபநட்டமற்ற புள்ளி (சமப்பாட்டுபுள்ளி) 3000 அலகுகள் உற்பத்தி செய்ய வேண்டும்.

**வேண்டப்படுவது:**

1. அலகொன்றின் பங்களிப்பு, விற்பனை விலை
2. ரூ. 15 000 இலாபத்தைப் பெற உற்பத்தி செய்ய வேண்டிய அலகுகளின் எண்ணிக்கை

3. ரூ. 5 200 அலகுகள் உற்பத்தி செய்யப்படின் இலாப எல்லை
4. தற்போது காணப்படும் விற்பனை விலையானது 5% குறைந்தால் சமப்பாட்டு புள்ளியை அடைய உற்பத்தி செய்யவேண்டிய அலகுகளின் எண்ணிக்கை.

ஆ. யாழரசி சுண்ணாம்பு கம்பனியானது விஷேடமான சுண்ணாம் ஒன்றை தயாரிக்க புதிய இயந்திரமொன்று கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளது. இது தொடர்பான கிரயம் ரூ. 100 000 ஆகும். இவ்வியந்திரத்தில் உற்பத்தி செய்யப்படும் சுண்ணாம்பு கட்டியொன்றின் தகவல்கள் வருமாறு

அலகொன்றின் விற்பனை விலை ரூ.30
அலகொன்றின் மூலக்கிரயம் ரூ.20
அலகொன்றின் மேந்தலைக்கிரயம் ரூ.5

அடுத்த 5 வருட காலத்தில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி திட்டமிடும் சுண்ணாம்பு கட்டிகளின் எண்ணிக்கை வருமாறு

| வருடம் | அளவு |
|---|---|
| 1 | 8 000 |
| 2 | 6 000 |
| 3 | 4 000 |
| 4 | 2 000 |
| 5 | 2 000 |

இச்செயற்திட்டத்தின் முதலீடு திரும்பி வரும் காலத்தை கணிப்பிடுக.

# வாசகர் கடிதம்...

F. மின்சியா ரபீக்
30.04.2010

அறிவுத்தேடல்,
இதழாசிரியர்,
3, சென் கில்டாஸ் ஒழுங்கை,
கொழும்பு 03.

தமிழ் மொழி மூலம் உயர்தர வர்த்தக பிரிவில் கற்கும் மாணவர்களின் அறிவுத்தாகத்தைத் தீர்க்க ஊற்றெடுத்த அருவியே "அறிவுத்தேடல்" உயர்தர வர்த்தகப்பிரிவினை மையமாகக்கொண்டு தமிழ்மொழி மூலம் இலங்கையில் இதுவரை இத்தகு தரமானதொரு தொகுப்பு வெளியானதில்லை என்றால் அது உண்மையே.

போட்டிகரமான இன்றைய கல்விச்சூழலில் "அறிவுத்தேடலின்" பிரவேசமானது வரவேற்கத்தக்கதாகும். முக்கியமாக இங்கு, முழுமையாக பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலாநிதிகள், சிரேஷ்ட விரிவுரையாளர்களின் தரமான ஆக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் உயர்தர மாணவர்களாகிய எமது பரீட்சை இலக்கை இலகுவாக வெற்றிகொள்ள வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. விஷேடமாக, பாடத்திட்டத்தில் புதிதாக உட்புகுத்தப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விளக்கங்கள் வெளிவருகின்றமை வரவேற்கத்தக்கதாகும். இவ்விளக்கங்கள் எமது நுட்பமான விடையளிப்பதற்கு வழிகாட்டுவதாய் அமைகின்றது.

எனவே, எதிர்காலத்தில் மேலும் பல புதிய நுட்பங்களுடன் அறிவுத்தேடலின் பயணம் தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்!

F. Miniziya Rafeek,
Zahira College,
Mawanella.

# பரீட்சை தொடர்பில் புள்ளி விபரங்களை தயார்படுத்தல்

பொருளியலின் கடந்தகால வினாப்பத்திரங்களை அவதானிக்கும்போது எமக்கு அவற்றிலிருந்து பல்வேறு முடிவுகளை பெறக்கூடியதாய் இருக்கும். பொருளியல் பாடத்தை பொறுத்தமட்டில் பெருவாரியானோருக்கு ஏற்படும் ஒரு பெரிய தலைவலி யாதெனில் புள்ளிவிபரங்களை மனனம் செய்தல் ஆகும். பலர் தேவையற்ற புள்ளிவிபரங்களை மனனம் செய்து தேவையற்ற அசதிக்கும், சவாலுக்கும் உள்ளாகின்றோம். எம்மத்தியில் எத்தகைய புள்ளிவிபரங்களை பயிலவேண்டும் என்ற சரியான அறிவு இருக்கிறதா? கடந்தகாலங்களில் புள்ளிவிபரங்களோடு எவ்வெவ் வினாக்கள் வினவப்பட்டுள்ளன என்பதற்கு முன்பு, புள்ளிவிபரங்கள் எவ்வெவ் பாடத்தலைப்புகளுக்கு மிக அவசியம் என தெளிவுறுதல் அவசியம்.

**பொருளியல் I பாடத்தை பொறுத்த மட்டில் தேவையான புள்ளிவிபரங்கள்**

"அரசப்பொருளாதாரம்" என்ற அலகை பயிலும் நீங்கள் அது தொடர்பான பல்தேர்வு மற்றும் கட்டுரை வினாக்களுக்கு விடையளிப்பதற்கு புள்ளிவிபரங்கள் அதிக அளவில் தேவை என்பது அறிந்ததே.

வினாக்களின் புள்ளிவிபரங்கள் தொடர்பான அறிவினை 2003, 2005, 2006, 2008 போன்ற ஆண்டுகளில் பரிசோதிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இவ்வாண்டும் (2010) இத்தகைய வினாவொன்று அரசப்பொருளாதாரம் தொடர்பில் எதிர்வுகூற முடியும்.

அரசப் பொருளாதாரம் தொடர்பில் பின்வரும் பகுதிகளின் புள்ளிவிபரங்கள் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

- அரச வருமானம் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக) (பு,னி.)
- அரச வருமானங்களின் உபபிரிவுகளை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக மற்றும் அரச வருமானத்தின் நூற்று வீதமாக
- நடைமுறை செலவு, மூலதன செலவு, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக
- நடைமுறை செலவு மற்றும் மூலதன செலவின் உபபிரிவுகளின் பங்களிப்பு அச்செலவுகளின் நூற்றுவீது அடிப்படையில்.
- வரி பங்களிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாகவும், அரச வருமானத்தின் வீதமாகவும் அறிந்திருத்தல்.
- அரச பாதீட்டு பற்றாக்குறை
- அரச கடன்

**இனி பொருளியல் II தொடர்பில் எப்பகுதிகளில் புள்ளிவிபரம் தொடர்பான அறிவு தேவை என ஆராய்வோம்.**

பொருளியல் இரண்டாம் பரீட்சைத்தாளின் புள்ளிவிபரங்கள் கவனிக்கப்பட வேண்டிய பாடப்பரப்புகள்

இவற்றில் பிரதான 04 அலகுகள் கருத்திற் கொள்ளப்படுவதோடு, அவை தொடர்பான புள்ளிவிபரங்கள் கட்டாயமாக விடைகான சான்றுப்படுத்தலாக (Evidence) விடைகளில் உள்ளடக்க வேண்டியது பரீட்சார்த்தியின் கடப்பாடாகும்.

புள்ளிவிபரங்களை கற்கும் நீங்கள் புள்ளிவிபரங்களை கற்பதற்கு முன்னர் அவை வினாக்களில் எவ்வாறு கேட்கப்பட்டிருக்கிறது என அவதானித்ததுண்டா?

1. கடந்த காலங்களில்
2. அண்மைக் காலங்களில்
3. கடந்த தசாப்தத்தில்
4. 1977க்கு பிறகு
5. சுதந்திரத்துக்குப் பிறகு

போன்ற பல்வேறு வழிகளில் இவை வினவப்படுகின்றன. மேலும் இவற்றிற்கு 2, 3, 4, 5 புள்ளிகள் வரை வழங்கப்படுகின்றன. இவற்றை வினவப்பட்ட வகையில் விடையளிப்பதோடு ஏனைய நாடு களுடனும் ஒப்பிடக்கூடிய திறன் காணப்படல் வேண்டும்.

**பணம் வங்கி பொதுவிலை மட்டம்**

- பணவீக்கம்
- விலைச்சுட்டெண்கள்

**சர்வதேச வர்த்தகமும் நிதியும்**

இலங்கையின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான முக்கிய காரணிகள், புள்ளிவிபரங்கள் என்பவற்றை வினவுவதோடு, அவை ஒவ்வொரு காலத்திலும் இயங்கிய விதம் வினவப்படுகிறது.

- ஏற்றுமதி கட்டமைப்பு
- இறக்குமதி கட்டமைப்பு (1977க்கு பிறகு, 1977க்கு முன்பு)
- வர்த்தக மாற்றுவீதம் (அண்மைக்காலத்தில்)
- சென்மதி நிலுவை மற்றும் அதன் உபகணக்குகளின் அண்மைக்கால போக்கு மற்றும் 1977க்கு பின்னரான நிலமை.

**பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி**

இப்பாடப்பகுதி தொடர்பில் நீங்கள் கருத்திற்கொள்ள வேண்டிய புள்ளிவிபரங்கள் பல உள்ளன.

**பொருளாதார வளர்ச்சி**

பொருளாதார வளர்ச்சி வீதங்கள் - கடந்தகாலம், கடந்த மூன்று ஆண்டு வீதங்கள், 1977க்கு பிறகு, உயர் பொருளாதார வளர்ச்சி வீதம் போன்றவை தெரிந்திருக்க வேண்டும்.

பொருளாதார வளர்ச்சி வீதத்திலான கட்டமைப்பு பங்களிப்பு, பொருளாதார வளர்ச்சியால் உற்பத்தி கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றம்

**பொருளாதார அபிவிருத்தி**

- சனத்தொகை, ஊழியப்படை, வேலையின்மை
- சனத்தொகையில் ஏற்படும் மாற்றங்கள்
- பல்வேறு சமூக குறிகாட்டிகளின் போக்கு
- ஊழியப்படை, வேலையின்மை தொடர்பான புள்ளிவிபரங்கள்
- ஊழியப்படை, விளைதிறன்/உற்பத்தித்திறன்

**பொருளாதார கொள்கை**

- சேமிப்பு வீதங்கள்
- பிரதேச ரீதியிலான அபிவிருத்தி
- வறுமை குறிகாட்டிகளும், வறுமை குறைப்பு செயற்திட்டங்களும்
- துறைகளின் பங்களிப்பு

| பல்தேர்வு வினாக்கள் | கட்டுரை வினாக்கள் |
|---|---|
| இலங்கையின் வறுமை மட்டம் | 1977க்கு பின் ஏற்றுமதி, இறக்குமதிகளின் கட்டமைப்பு மாற்றம். |
| | தெற்காசிய நாடுகளின் மனித அபிவிருத்தி சுட்டெண் தொடர்பான அறிவு பரிசீலிக்கப்பட்டது. |
| | ஊழியப்படையில் ஆண், பெண் பங்களிப்பு |
| | சென்மதி நிலுவையின் அண்மைக்காலபோக்கு |
| இலங்கையின் ஆயுள் எதிர்பார்க்கை மற்றும் வயதுமுதிர்ந்தோர் சனத்தொகை வீதம் | உற்பத்தி கட்டமைப்பில் சேவைத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பிரதேச ரீதியிலான பங்களிப்பு | 1977க்கு பின் இலங்கையின் கினி குணகத்தின் போக்கு |
| தேசிய சேமிப்பு வீதங்கள் | 1977க்கு பின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கட்டமைப்பு ரீதியிலான மாற்றம் |
| துறை ரீதியான பங்களிப்பு | 1977க்கு பின் இறக்குமதி கட்டமைப்பு |
| பொருளாதார வளர்ச்சி வீதங்கள் இலங்கையின் மனிதவள அபிவிருத்தி சுட்டெண்ணின் போக்கு | சில வருடங்களின் வறுமை மட்டம் தொடர்பான வினா |

# இலங்கையின் வேலைவாய்ப்பின் அளவும் அதன் போக்கும்

| வருடம் | தொழில் உள்ளோர் எண்ணிக்கை 000 | வேலை வாய்ப்பு வீதம் | | |
|---|---|---|---|---|
| | | வேலைவாய்ப்பு வீதம் | ஆண் | பெண் |
| 1990 | 954 | 15.9 | 23.4 | 11.8 |
| 1995 | 749 | 12.3 | 18.8 | 8.8 |
| 2000 | 517 | 7.6 | 11.0 | 5.8 |
| 2001 | 537 | 7.9 | 11.5 | 6.2 |
| 2002 | 626 | 8.8 | 12.9 | 6.6 |
| 2003 | 648 | 8.6 | 13.5 | 6.5 |
| 2004 | 667 | 8.3 | 12.8 | 6.0 |
| 2005 | 524 | 7.2 | 10.7 | 5.3 |
| 2006 | 493 | 6.5 | 9.7 | 4.7 |
| 2007 | 447 | 6 | 9.0 | 4.3 |
| 2008 | 394 | 5.2 | 8.0 | 3.6 |

## மனிதவள அபிவிருத்தி சுட்டெண் பற்றிய ஒரு பார்வை

உலகளாவிய ரீதியில் மனிதவள அபிவிருத்தி சுட்டெண்னே பிரதான அபிவிருத்திக் குறிகாட்டியாக உள்ளது. இதனடிப்படையிலேயே நாடுகளின் அபிவிருத்தித் தன்மையானது தெளிவுப்படுத்தப்படுகிறது. 1990ம் ஆண்டு முதல் தற்போதைய ஆண்டுவரை மனிதவள அபிவிருத்தி சுட்டெண் ஆனது, மனிதவள அபிவிருத்தியை அளவிடுவதற்காக பல சுட்டெண்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.


1. மனிதவள அபிவிருத்தி சுட்டெண் (Human Development Index)
2. ஆண், பெண் அடிப்படையிலான மனிதவள அபிவிருத்தி சுட்டெண் (Gender Related Development Index)
3. மனித வறுமை சுட்டெண் I
4. மனித வறுமை சுட்டெண் II
5. ஆண், பெண் சமூகமயப்படுத்தல் தொடர்பான குறிகாட்டி

இவற்றில் பிரதானமாக மனிதவள அபிவிருத்தி சுட்டெண்னே காணப்படுகின்றது என்பதே குறிப்பிடத்தக்கது.

இவற்றில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற நாடுகளின் விபரங்கள் வருமாறு

1. நோர்வே
2. அவுஸ்ரேலியா
3. ஐஸ்லாந்து
4. கனடா
5. அயர்லாந்து

இலங்கை 2007ம் ஆண்டின் படி 182 நாடுகளில் 102வது இடத்தைப் பெற்றுள்ளது. இலங்கையின் மனிதவள அபிவிருத்தி சுட்டெண் ஆனது 0.759 ஆகும்.



My Friends. My Future. My Institute.

# PERFECT FOUNDATION

Discover the difference of true professionalism along with the liveliness of university life with the pioneers of CIMA education.

**Scholarships available for students with outstanding results.**

**For more details call 0773 918777**

PERFECT FOUNDATION GOES ALL THE WAY

CIMA
LEARNING QUALITY PARTNER

Imperial College
NURTURING TOMORROW'S LEADERS




No: 3, St. Kilda's Lane, Colombo 03.
Phone: 4515253, 0773 918 777. | Fax: 2501978
Email: info@icbsgroup.com | www.icbsgroup.com


Imperial College is conveniently located just 50 meters away from Bambalapitiya junction.

CIMA

Chartered Institute of
Management Accountants

# நீங்கள் மக்கள் மத்தியில் தனித்துவம் பெறுவதற்கு...

CIMA உங்களை நிதித்துறையில் பயிற்சி பெற்ற வணிகத்தலைவராக உயர்த்தும்

**CIMA கொழும்பு**
T. 0112 503 880 | E: colombo@cimaglobal.com

**CIMA கண்டி**
T. 081 222 7882 | E. kandy@cimaglobal.com



SHAPING THE FUTURE CIMA 90 YEARS CELEBRATING THE PAST

**www.cimaglobal.com**